சரசுவதி மகால் வெளியீடு எண். 110.

மறைஞான சம்பந்தர்

சங்கற்ப நிராகரணம்

மூலமும் உரையும்.



தஞ்சை மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்.

ANo: 2171 71
Q23

கி. பி. 1964] சோபகிருது ஆண்டு [சகம் 1886
[விலை ரு. 3-20

2-6 946
2171

உ

திருச்சிற்றம்பலம்.

மறைஞான சம்பந்தர்

சங்கற்ப நிராகரணம்

மூலமும் உரையும்.

★

திருப்புவன மடம் உ சிவமயம் TIRUPPUVANA MADAM.

பதிப்பாசிரியர் :
பண்டித, வித்துவான்
திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளையவர்கள்,
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

கோவிலூர் ஆதீனம்
2171
Q23
கோவிலூர்-630 307

★

பதிப்பித்தவர்:
நிருவாகக் குழுவினருக்காக
O. A. நாராயணசாமி ஐயர் அவர்கள்,
கௌரவக் காரியதரிசி.

★

1964
[சோபகிருது ஆண்டு]

1964 — 3-20.

சரசுவதிமால் நூல் நிலையம் ;- வெளியீடு எண் 110

இந்நூல்,

யூநியன் கவர்ன்மெண்டு பொருளுதவியால்

வெளியிடப்பெற்றது

பதிப்பகம் :

வெற்றிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்.

சங்கற்ப நிராகரண மூலமும் உரையும்.

நால்வர் பெருமை

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுநஞ் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத்தெங்கே

குரு தோத்திரம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
    றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
    பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
    இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
    நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்

உ-6

முன்னுரை

"சங்கற்ப நிராகரணம்" என்னும் இந்நூல் தஞ்சை, சரசுவதி மகால் நூல் நிலையத்தில் M. 541. w/D. 710 என்ற எண்ணுடைய சுவடி யாகும். இது சைவ சித்தாந்த உண்மையுணர்த் தும் நூலாகும். இது ஐக்கியவாதி முதல் சைவ வாதி ஈருக எட்டுப் பேர்களுடைய சங்கற்பங் களை நிராகரித்துச் சைவ சித்தாந்தத்தினை நிலை நாட்டுவது. இது உமாபதி சிவம் இயற்றிய சங்கற்ப நிராகரணத்தின் வேருயது. இந் நூலினைக் குறட்பாக்களால் இயற்றியவர், திருப் பெண்ணுகடத்தில் தோன்றிய சிதம்பரம், கண்கட்டி, மறைஞான சம்பந்தராவர். சைவ சமயத்திற்கு இன்றியமையாத நூலாயுள்ள இதனைச் சைவர்களும், மற்றவர்களும் வாங்கிப் பயனடைதல் நன்மையாகும்.

இந்நூல் யூனியன் கவர்ன்மெண்டு உத்தர வின்பேரில் அதன் பொருளுதவியினுல் அச் சிடப் பெற்றது. இந் நூலக ஏட்டுச் சுவடி யினின்றும் படிசெய்து, அதற்கு முயன்று உரை வகுத்து உதவிய பதிப்பாசிரியர், இந் நூலக முன்னைநாள் தமிழாசிரியர் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்களாவர்.

இந் நூல் வெளியீட்டுக்கான பொருளுதவி புரிந்த அரசினருக்கும், பதிப்பாசிரியர் அவர்கட்கும், இதனை நன்முறையில் அச்சழுத்தித் தந்த தஞ்சை, வெற்றிவேல் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றி.

தஞ்சை, மகாராஜா
சரபோஜி ஸரஸ்வதி
மகால், நூல் நிலையம்,
தஞ்சாவூர். 20-2-64

இங்ஙனம்,
O. A. நாராயணஸ்வாமி,
கௌரவக்காரியதரிசி

உ

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி!

என்பது அப்பர் தேவாரம்—

உலகு, மண்ணும் நீரும், தீயும், வளியும், விண்ணும் ஆகிய ஐம்பெரும் பூதக்கலப்பாலாயது. இவ்வுலகுபோல் எண்ணிறந்த வுயிர்கட்கும் பற்றுக்கோடாயுள்ள (ஆதார மான) உடலங்களும் ஐம்பூதக்கலப்பாலாயவையே இவ் வைம் பெரும் பூதங்களின் குணமே நாற்றமும், சுவையும், ஒளியும், ஊறும், ஒலியுமேயாகும். இவற்றால்—ஓரறிவு முதல் ஐயறிவு ஈறாக ஐவகைப்பட்டுள, மெய், வாய், கண், மூக்கு, செவிகளால் அறியும் அறிவும் ஐந்தாயின.

"மாவு மாக்களும் ஐயறிவினவே"

என்பது தொல்காப்பியம்.

இவற்றிற்கு மேலாக, மனனுணர்வுகொண்டு இவை தக்கன இவை தகாதன. வென்று பகுத்துணரும் அறிவு ஆறுவதாகும். இவ்வாறறிவுற்றவர்களே மக்களெனப்படுவர், மக்கடாமே யாறறிவுயிரே, (என்பது தொல்) இம்மக்கட்பிறப் புற்றவர் மநு முதலாகிய நூல்களில் விதித்தன வற்றைச் செய்தலும் விலக்கியனவற்றை யொழிதலும் ஆகிய அறப் பகுதியினை மேற்கொள்வர். இவ்வறம் ஒழுக்கமும் வழக்க மும், தண்டமும் ஆக மூவகைப்படும். இவற்றுள் ஒழுக்க மானது இல்லற வொழுக்கமும் துறவொழுக்கமும் ஆகிய இரண்டன் வழிநின்று, பொருள் இன்பம் விட்டினை யெய்தற் பாலர் ஆவர். பகுத்துணர்வுற்ற மக்கட் பிறப்பினர். இவர்களை யநாதியே பற்றிநின்ற பந்தவகையால் (பாசவகையால்) ஒரு மலமுடையரும் இருமலமுடையரும், மும்மலமுடையரும் என மூவகைப்படுப்பர், இவர்களை விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் எனப்படுவர்.

இப்பாசங்களுற்றவுயிர்கள் ஒருபொருளை விழைதலும் வெறுத்தலுமாகிய நிலையால் பிறவித்துன்பங்களிடைப்பட்டு கொள்ளிவட்டமும் காற்றாடியும்போல பிறந்திறந்துழலும் பசுக்களாகிய உயிர்களிலிலக்கணம் இதுவாயின் பதிப்பொரு ளாகிய இறைவன் அநாதிமல முத்தசித்துருவாய் பிறப்பிறப் பில்லியாய் எல்லாவுயிர்களின் அறிவுக்கு அறிவாய் சர்வ வியாபகனுய் இருப்பன். இவன் பக்குவமுற்ற ஆன்மாக்களை மக்கட்சட்டகந்தாங்கிக் குருவுருவாய் வந்து ·பரிச, சட்சுவாதி தீக்கைகளைப்புரிந்து பாசமோசனஞ் செய்து ஆண்டருளுவன்.

பிணக்கிலாத பெருந் துறைப்
பெருமானு னுமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாத தோரின்பமே வருந்
துன்பமே துடைத் தெம்பிரான்
உணக்கிலாத தோர் வித்துமேல்
விளையாமலே வினை யொத்தபின்

கணக்கிலாத் திருக்கோல நீவந்து
காட்டினுய் கழுக்குன் றிலே

என்பது திருவாசகச் செய்யுளாகும்.

உயிர்கள் செய்த இருவினைகட்கேற்ப, பிராரர்த்த ஆகாமிய, சஞ்சித வினைகளை காட்சியாலும் உபதேசத்தாலும் நீக்கி முத்திநிலை யெய்துதற் கேற்றவகை புரிந்தருளுவன் ஆண்டவன் என்பதாம்.

செம்பாகிய உலோகத்தினிடை காளிதமாகிய களிம்பு எங்ஙனம் கலந்துள்ளதோ அஃதேபோல உயிர்களினிடத்தும் பாசம்பிணித்திருக்கும், அப்பாசங்கழலப்பெறின் ஆன்மாத்தூய்மையெய்தும், நிற்க, மக்கட்பிறப்புற்றவர் இடவகையாலும், மொழிவகையாலும் நிறவையாலும் பலதிறப்படுவர். அஃதேபோல கொள்கை வகையிலும் மக்கள் பல திறத்தினராவர், இவர்கள் தெய்வமென் பதோர் சித்தமுண்டாகிய வரும், அக்கொள்கையே இல்லாதவரும், உண்டோ இன்ருே என்ற கொள்கையில்லாதவருமாகவும் பலதிறப்படுவர். இங்கு கடவுட் கொள்கையினராகியவரைப் பற்றிய, குறிப்பு இன்னதெனவாய்தல் வேண்டும்,

இந்நிலையினரை பற்பல சாத்திரங்கள் பலவாருகப் பகரும்.

நரர்பயில் தேயந் தன்னுள்
நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல்
மிக்க புண்ணியந் தாளுகும்
தரையினில் கீழை விட்டுத்
தவஞ்செய் சாதியினில் வந்து
பரச மயங்கள் செல்லாப்
பாக்கியம் பண் ணுதே

என்பது சிவஞான சித்தியார் செய்யுள்.

வேதாகமங்கள் முழங்கப்பெருத நாட்டிற் பிறவாமல் இவை முழங்கப்பெறும் நாட்டிடைவந்து தோன்றல் பெரும் புண்ணியமாகும். இப்புண்ணியமுடையவர் பல்லூழிகாலம் பயின்றரனையருச்சித்தால் நல்லறிவுசற்றே நகும் ஆகையினுல் இங்ஙனம் அரன்நாமம் பயின்றவருக்கு, ஆண்டவன் குருவடிவாகி வந்து ஆட்கொண்டருளுவன். இதுபற்றி திருவாசகச் செய்யுள் வருமாறு:

முந்திய முதனடு விறுதியு மானுய்
    மூவருமறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
    பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரை திரு மேனியுங்காட்டித்
    திருப்பெருந் துறையுறை கோயிலுங்காட்டி
அந்தண னுவதுங் காட்டிவந் தாண்டாய்
    ஆரமுதே பள்ளி யெழுந் தருளாயே.

என்பதாம்.

ஆகவே மக்கள் அறுவகைச்சமயத்தினராக உள்ளனர். இச்சமயம் அகமும், புறமும், அகப்புறமும் புறப்புறமும் என நால் வகைப்படும்.

அறுவகைச் சமயத் தோர்க்கும்
    அவ்வவர் பொருளாய் வேறும்
குறியது வுடைத்தாய் வேதாக
    மங்களின் குறியிறந் தங்கு
அறிவினின் அருளாய் மன்னி
    யம்மையோ டப்பனுகிச்
செறிவொழி யாது நின்ற
    சிவனடி சென்னி வைப்பாம்

என்பது சிவஞான சித்தியார் திருவாக்காகும்.

உலோகாயத மதம் முதலாக சைவசித்தாந்த மீருக வுள்ள அறுநான்கு சமயங்களுள் அகச்சமயம் ஆறனுள் சைவசமயக்கொள்கைகள் எட்டாக வுள்ளனவாம் இவை பற்றியகொள்கை எட்டாக விவரித்து அவ்வொவ்வொரு சமயக்கொள்கையும் பூர்வபட்சம் பண்ணி மறுப்புரைத்துச் சித்தாந்தம் பண்ணலே சங்கற்பநிராகரணம் என்னும் நூலாகும்.

இங்ஙனம் சைவசாத்திரம் பதினன்கனுள் ஒன்ருகிய உமாபதிசிவம் செய்தருளிய சங்கற்ப நிராகரணம் என்னும் நூலும் ஒன்ரும். அது அகவற்பாவாலாயது, இந்நூல் திருக்குறட்பாக்களால் ஆகியது. இந்நூலினே யாத்த மறை ஞானசம்பந்தர் குறட்பாக்களால் பலநூல்களே யாத்துள்ளார். இதனேப்பற்றி குறிப்பு இவருடைய வரலாற்றின்கண் காண்க.

எழுசீரால் ஆகிய குறட்பாக்களால் ஒருநூலே யாத்தல் அரிதினும் அரிதாகும், கலேகளே (சாத்திரங்களே) எழுசீரான் குறிப்பது எளிதன்று, இதனுல் மதிநுட்பமும் நூல் நுட்ப மும் இப்பெற்றித்தென வியம்பலரிதாகும்.

இவர் கலேநூல்களில் நிலேபெற்ற பேரறிஞரும் தெய்வப் புலமைவாய்ந்தவரும், நான் பெற்றபேறு பெறுக இவ்வைய கம் என்றவாறு தான் பூசையிலும் தியானத்திலும், யோகத் திலும், ஞானத்திலும், கண்டமுடிபுகளே, ஒருவாறு, திரட்டி நூலாக்கி உருப்பெறச் செய்வது எளிதேயோ?

இந்நூலினே முதன்முதலில் ஏட்டுச்சுவடியினின்றும் எடுத்து ஆய்ந்து மூலத்தினேமாத்திரம் திருத்தமுறச் செய் தேன், அதன் பின்னர், திருவாவடுதுறையிற் பதித்த நூலி னேயும் இதனேடு ஒத்துப் பல பிரதிபேதங்களேக் கண்டேன். அதன்பின்னர் ஒருரை காணநேர்ந்தது. இதனேவிரைந்து முடிக்கவேண்டுமெனும் ஆணேபிறந்ததால், பாயிரத்திற்கும்

முதலிரண்டு இயல்கட்கும் ஒருவாறு ஓர் உரைகண்டேன். அதன் பின்னர் ஏனைய இயல்கட்கும் சத்திய ரூபமாகிய உரை நடையொன்று வரையலாயிற்று.

இதுபற்றி யொரு பேருரையும் விரைவில், கண்டுமுடிக்கத் திருவருள் கூட்டும் எனக்கருதியுள்ளேன். இதனைக் கலைநூல் வல்லபெருமக்கள் குற்றங்களைந்து நல்லனகொண் டருள்வாராக.

இதனை விரைந்து முடித்தல் வேண்டுமென, பலவகையிலும் நல்லூக்கங் காட்டியருளிய, இச்சரசுவதிமால் நூல் நிலைய கௌரவ காரியதரிசி, பிர்மஸ்ரீ. O. A. நாராயணசாமி ஐய்யர் அவர்கட்கும் அடியேனுடைய நன்றியும் வணக்கமு முரித்தாகுக.

> "வாழிமறைஞான சம்பந்தர் மலர்த்தாள்
> வாழிசைவ சித்தாந்த மன்."

இங்ஙனம்,
பண்டித வித்துவான்,
இராம. கோவிந்தசாமி பிள்ளை,
முன்னாட்டமிழ்ப் பேராசிரியர்.

திருவையாறு,
12—1—64.

பதிப்புரை.

பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை யோர்முடிமேல்
மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிரமன்னி
ஆணிக் கனகமும் ஒக்குமை யாற னடித்தலமே

அப்பர்—திருவிருத்தம்.

பேரறிவுசான்ற கலைநிலை கொண்ட பெருமக்களே!

உலகிலுள்ள ஆத்திக மக்கள் உய்யும்பொருட்டுச் சாத்திரங்களும் தோத்திரங்களும் அவதார புருடர்கள் ஆக்கியருளினர். அளவைநூல்கொண்டு ஆய்ந்து நிலைபெறுத்தப் பெற்றவை சாத்திரங்களாம். துதிபூர்வமாக உள்ளது தோத்திரமாகும். வேதாகமங்கள் வழிவந்தனவே யாகும். இவை பொதுவும் சிறப்புமாம்.

சைவம், வைதிகசைவமும், சித்தாந்தசைவமும் ஆகும். சித்தாந்த சைவம்பற்றி யெழுந்த நூல்கள் பலவாகும். சித்தாந்த சாத்திரம், பண்டாரசாத்திரம், வள்ளலார்சாத்திரம், மறைஞான சம்பந்தர் சாத்திரம், சகாதேவர் சாத்திரம் என்பன வாதியினவாகப் பலவுள

இவற்றுள் மறைஞானசம்பந்தர் கண்டு இயற்றிய உபாகமங்களுள் ஒன்ருகிய சிவதருமோத்தரம் சைவர் பலரும் படித்தின்புறற் பாலதாகும். இதுபோலவே ஏனைய நூல்களுமாம்.

இப்பெற்றிவாய்ந்த நூலினையாய்ந்து வெளியிடு செய்தல் எம்மை யொத்தார்க்கு எளிதன்று. சிவபூசனையும் சிவசிந்தனையும், சிவயோகமும், சிவஞானமும் உடையவர்கள் எவர்களோ அவர்களே நூல்களை யாய்தற்குரியர்.

இங்ஙனமாகவும், இந்நூலினை யச்சிடற்குக் காரணம் ஏடு சிதிலமாதல் கண்டு கண்ணோட்டஞ் செய்ய நேர்ந்தது. இவ்வளவிளாதல் இதனைப் புரிந்தமைக்குத் தமிழுலகம் பொறை செய்யுமாக.

இதனை யச்சிடுங்காலத்து, ஒத்துப்பார்த்தல், செய்யுள் முதற்குறிப்பகராதி வரைந்தமை முதலியனவாகிய நல்லுதவி புரிந்த புலவர் திருவளர்செல்வி **கோ. ஞானப்பூங்கோதை** தமிழாசிரியை அவர்கட்குத் திருமுருகன் எல்லாநலன்களும் தந்தருள்வானாக

போதிய காலத்தே சீரிய முறையில் அச்சிட்டுதவிய தஞ்சை வெற்றிவேல் அச்சகத்தார்க்கு என் நன்றி யுரித்தாகுக.

இங்ஙனம்,

பண்டித வித்துவான்.

திருவையாறு 7—2—64

இராம. கோவிந்தசாமி பிள்ளை,

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

திருச்சிற்றம்பலம்.

சங்கற்ப நிராகரணம்

(மூலமும் உரையும்)

நூலாசிரியர் வரலாறு.

தமிழ் கேட்லாக் வால்யூம் II-710 (N) சங்கற்ப நிராகரணம்.
LINES 9 IN A PAGE.

சைவ சித்தாந்த நூல்கள் வரிசை எண் (1)

சங்கற்ப நிராகரணம் என்னும் இந்நூலை இயற்றியவர் சிதம்பரம் **கண்கட்டி** மறைஞான சம்பந்தர் என்னும், பெரியோராவர். மறைஞான சம்பந்த நாயனுர் என்றும் அழைக்கப் பெறுவர். புறச்சந்தான குரவருள் ஒருவராகிய மறைஞான சம்பந்த சிவாசாரியார் வேறு. இவர் திருப் பெண்ணுகடம் என்னும் ஊரில் அவதரித்தவராவர். இவரும் சிதம்பரதலத்தை வாசஸ்தலமாகக் கொண்டு ஞானநிட்டை கூடினவர். இவருடைய சமாதிக்கோயில் சிதம்பரம் திருக்களாஞ்சேரி யென்றும் திருக்கோயில் பிரம தீர்த்தத் தென் கரைக்கண் உள்ளது. திருவடி மாத்திரம் அமைக்கப் பெற்றுள்ளது. இக்கோயிலும் விளைபுலங்களும், சமாதிக்கோயிலும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தின் தருமபரிபாலனத்தில் அமைந்துள்ளது. இச்சிவாசாரியார் உமாபதி சிவாசாரியாருக்கு சிவஞான உபதேசஞ் செய்தருளிய தொன்றுமே யெனக் கொள்வர் அறிஞர்.

மறைஞான சம்பந்தநாயனுர் சைவசமய நெறித் திருக்குறள், சிவதருமோத்திரம், புவனகோசம் முதலியனவாகப் பல நூல்கள் இயற்றி யருளியுள்ளனர். சைவசமய நெறித்

திருக்குறள் போல இச்சங்கற்ப நிராகரணமும் குறட்பாவினால் செய்யப்பெற்றுள்ளது. சைவசமய நெறித் திருக்குறள் பதிகம் போலவே சங்கற்ப நிராகரணத் திருக்குறள் பதிகமும் அமைந்துள்ளது அந்நூலில் காரைக்காலம்மையார் துதி, சந்தானகுரவர் துதி முதலியனபோல இந்நூலிலும் உரைக்கப் பெற்றிருப்பது ஆய்தற் குரியது.

இந்நூற் பெயர் சங்கற்ப நிராகரணத் திருக்குறள் என்றுதான் இருந்திருத்தல் வேண்டும். பின்னர் ஏடு எழுதினவரால் இது நேர்ந்திருத்தல் கூடும் என வூகிக்கவிடந் தருகின்றது. சங்கற்பம்—கொள்கை (மதம்) நிராகரணம்—மறுப்பது சைவசமயத்தில் எட்டுவித கொள்கை யுண்டு.

அவையாவன:—

1. ஐக்கியவாத சங்கற்பம்
2. பாடாணவாத சங்கற்பம்
3. பேதவாத சங்கற்பம்
4. சிவசமவாத சங்கற்பம்
5. சங்கிராந்தவாத சங்கற்பம்
6. அவிகாரவாத சங்கற்மம்
7. நிமித்தகாரண பரிணாமவாத சங்கற்பம்
8. சைவ சங்கற்பம் என்பனவாம்.

இந்நூற் செய்யுட்டொகை 421 திருக்குறட் பாக்களாகும். எட்டு வாதங்களும் எட்டு மறுப்புக்களுமாக பதினாறு உட்பிரிவுகளும் பதிகப்பகுதியாகிய பிரிவு ஒன்றும் பதினேழு உட்பிரிவுகளை யுடைத்தாம்.

வெண்பா

நிரந்தவர்சங் கற்ப நிராகரிக்கு மிந்நூல்
பரிந்துலகோ ருய்யப் பகர்ந்தான்—திருந்திமறை
யோங்கி விளங்க உதித்தமணை யோட்டினன்போ
தாங்கினனுய்ந் தாகமமுத் தன்

ஆரியனூ லையந் திரிவுமற வாராய்ந்த
கூரியரே யிந்நூல் குறித்தறிவார்—தேரும்பா
வார்ந்தவர்தம் பாதத் தறிக அவலமலம்
தீர்ந்துவிடும் வாய்க்கும் சிவம்

அயிக்கியவாதி முதல் சைவாந்தமான எட்டுப்பெயர் சங்கற்பங்களையும் நிராகரித்தவர் சைவசித்தாந்தியெனக் கொள்க ஞானப்பிரகாசன் றிருவடி வாழ்க. மறைஞான சம்பந்தர் திருவடி வாழ்க. சிவனடியார் தழைக்க. இவை ஏட்டிற் கண்டவை.

உ

இந்நூலாசிரியர் வரலாறு

(வேறு ஒருவகையாக வருமாறு.)

திருச்சிற்றம்பலம்

" அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர் உண்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்
கண்ணவன் என்று கருதும் அவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே "

(திருமூலதேவர்)

இந்நூலாசிரியரைப்பற்றிப் பலரும் பலவிதமாகக் கூறுவர். அவருள் ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார் மறைஞானசம்பந்த சிவாசாரியர் என்பவரும் மறைஞானசம்பந்த நாயனாரும் ஒன்றாகவே சிலர்கருதுவதால் இதனை விரிவாக வரைய வேண்டுவதாயிற்று.

திரு, மறைஞானசம்பந்தர் என்னும் பெயருடைய ஆசிரியர் ஆவார் பலர். அவருள் திரு மெய்கண்ட தேவருடைய மாணவராகிய திரு அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருவருள் பெற்ற திரு மறைஞானசம்பந்தர் என்பவர் புறச்சந்தான குரவருள் மூன்றாமவராவர். இவர் கொற்றவன்குடி உமாபதி சிவத்திற் குபதேசஞ் செய்தருளிய ஞானாசிரியராவர். இவர் திருப்பெண்ணாகடத்தில் அவதரித்தவர். இவர் தில்லைச்சிற்றம்பலத்தின் வடமேற்கில் ஒருகல் தொலைவிலுள்ள திருக்களாஞ்சேரியில் ஞான சமாதி கொண்டருளியுள்ளார்கள்.

உமாபதி சிவத்துக்குச் சிவஞானபோத உபதேசமும், சாத்திரோபதேசமுஞ் செய்தருளியதன்றி வேறுஒரு நூலுஞ்

செய்தருளிலர். இவருடைய காலம் கி. பி. 1313க்கு முன்னும் ஆகவே 13-ம் நூற்றூண்டாம்.

இனி மகாசிவராத்திரிகற்பம், மாதசிவராத்திரிகற்பம், சோமவார சிவராத்திரிகற்பம், சோமவாரகற்பம், வருத்தமற உய்யும்வழி, உருத்திராக்க விசிட்டம், சங்கற்பநிராகரணம் முதலியவற்றை இயற்றி யருளியவர்கள் திரு மறைஞான சம்பந்தரே. பதிபசுபாசப்பனுவல், சைவசமயநெறி, பரமோபதேசம், சிவதருமோத்திரம், கமலாலய புராணம், சிவமயம், தொல்காப்பியம், முத்திநிலை என்னும் நூல்களைச் செய்தருளியவர்களும், அம் மறைஞான சம்பந்தரே. அருணகிரிப்புராணம், பரமததிமிரபானு, இறைவனூற்பயன், சகலாகமசாரம், ஐக்கியவியல் முதலியவற்றை அருளியவர்களும் அவர்களே மறைஞான சம்பந்தர். மறைஞானசம்பந்த பண்டாரம், மறைஞானசம்பந்த தேசிகர், மறைஞானசம்பந்த நாயனூர் என்ற பெயர்கள் ஒருவரையே குறிப்பன. இந்நூல்கள் எழுதப்பட்டுள்ள பிரதிகளில் அவ்வாறு ஆசிரியர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர் சிதம்பரத்திலே வாழ்ந்தவராகலின் சிதம்பரம் என்னும் ஊர்ப்பெயர் முன்னும் உலகிலுள்ளார் செய்யும் இழிதகவான செயல்களைக் கண்ணூல் காணப்பெருதவராய்த் தம் கண்ணை மறைத்துக் கொண்டு வாழ்ந்தார் ஆகலின் கண்கட்டி என்னும் பெயர் அதன் பின்னுமாக வைத்து மறைஞானசம்பந்தர் என வழங்கப்படுவர். இவர் திருமடம் சிதம்பரத்திலே தெற்குவீதியும் மேலைவீதியும் கூடுமிடத்தில் இருந்ததென்பர் பெரியோர். அது கண்கட்டி மடம் என வழங்கப்பட்டது.

இனி, கண்கட்டி மடத்தைக் குகைமடம் எனவும் கூறுவர். இது திருவண்ணாமலையில் சிவவரப் பிரசாதியாய் எழுந்தருளியிருந்த குரு நமச்சிவாய சுவாமிகளின் சீடர் குகை. நமச்சிவாயர் என்பவர் சிதம்பரத்திலிருந்து திரு, ஆனந்ததாண்டவ மூர்த்தியின் திருக்கோயிற் றிருப்பணி செய்துகொண்டு தங்கியிருந்த திருமடமாம். அந்த மடத்திலே

வந்த பெரியோரே திரு மறைஞான சம்பந்தர். இவர் கல்வி கேள்விகளில் வல்லவர். சிவாகம சிவபுராணங்களில் நல்ல பயிற்சி யுள்ளவர். ஆகமங்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர். பலபுராணங்களும், சைவசமய நூல்கள் பலவும் செய்தவர். பதிபசுபாசப் பனுவல் என்னும் நூலின் பாயிரத்து

"திருந்துதொல் காப்பியம் சிவமயம் செய்தோன்
ஆதி கமலா லயமுதற் புராணம்
சிவதரு மோத்தரம் தமிழாற் செய்தோன்
நண்ணிய தவமறை ஞானசம் பந்தன்
பதிபசு பாசப் பனுவல் செய்தனனே"

எனவும்

"செறிமா செறியும் பரமோபதேசம்—மறைஞானசம்பந்தன் வாக்கு" எனவும், "முத்தி நிலையணுக்கள் சேர மொழிந்திட்டான்—சத்திய மெய்ஞ்ஞான சம்பந்தன்" எனவும், "சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்—மையலற வாய்க்க வரம்" எனவும் அவ்வந்நூல்களின் இறுதியிற் கூறியுள்ளமையே இதற்குச் சான்று பகர்வனவாம் கமலாலய புராணம் இயற்றிய காலம் கி. பி. 1548 என்றும், அருணகிரிப் புராணம் இயற்றிய காலம் கி. பி. 1555 என்றும் கூறுவர். இவ்வாசிரியர் காலம் பதினாறும் நூற்றாண்டு என்பர்.

இனி, இவ்வாசிரியர் இயற்றியுள்ள நூல்களில் சைவ சமயநெறி — 727 திருக்குறட்பாவும், பரமோபதேசம் — 41 குறட்பாவும், சங்கற்ப நிராகரணம் — 421 குறட்பாவும், பதிபசுபாசப் பனுவல்— 336 குறட்பாவும், மகாசிவராத்திரி கற்பம் — 39 குறட்பாவும், மாதசிவராத்திரிகற்பம் — 14 குறட்பாவும், சோமவார சிவராத்திரிகற்பம் 17 குறட்பாவும் சோமவாரகற்பம்—216 குறட்பாவும், வருத்தமறஉய்யும்வழி —17 குறட்பாவும் முதலிய நூல்கள் குறள் வெண்பாக்க

ளால் செய்யப் பெற்றவை. ஐக்கியவியல் — 15 வெண்பாக் களும், உருத்திராக்க விசிட்டம் — 108 வெண்பாக்களும் என்பன வெண்பாக்களால் இயன்றுள்ளன. "சாற்றினனே கண்டிவரந்தன்னையெணிச் சம்பந்தன்........ஆய்ந்து" என்றும் சிறப்புப்பாயிர வெண்பாவால் உருத்திராக்க விசிட்டத்தை யும் இயற்றியவர் இவரே எனத்தெரிகிறது. இவருடைய மாணவருள் ஒருவர் இயற்றினார் என்பாரும் உளர். ஆராய் தற்குரியது. சிவஞான சித்தியாருக்கு உரையியற்றிய மறை ஞான தேசிகர் இவருடைய மாணவர் என்பது உறுதியாம். பரமோபதேசம், ஐக்கியவியல், சங்கற்பநிராகரணம் முதலி யன எழுதியுள்ள ஏட்டுச்சுவடிகளில் கண்கட்டி—"மறை ஞான பண்டாரம்' அருளியது என எழுதப்பட்டுள்ளன. இதனால், இப்பெரியார் சைவாசாரியர் மரபிலே தோன்றி யுள்ளவர் எனத்தெரிகிறது. இவர் சைவசமயத்தவர். ஆயி னும், ஆன்மானந்த வாதியாவர் என்பது இவர்செய்த 'முத்திநிலை' யால் விளங்கும். இதனை மறுத்துத் தருமை யாதீனத்துப் பிரதம பரமாசாரியார் திரு. குருஞானசம்பந்த மூர்த்திகள் முத்திநிச்சயம் என்றும் சிறந்த சித்தாந்த நூல் ஒன்று செய்தருளியுள்ளமையும் காண்க.

உ

திருச்சிற்றம்பலம்

மறைஞான சம்பந்தர்

வரலாறுபற்றிய ஒரு குறிப்பு.

இவ்வாசிரியப் பெருந்தகை தில்லையெனுஞ் சிதம்பர தலத்திலே வாழ்ந்தவர். வடமொழி தென்மொழிக் கலைகளையும் திருமுறையாதியனவற்றையும் நன்கு துருவியாய்ந்தவர். திருக்குறட்பாக்கள் புனைவதில் மிகவல்லுநரெனல் இந்நூலாலும் சைவசமயத் திருநெறித் திருக்குறளாலும் நன்கு புலனாகும்.

திருப்பெண்ணாகடம் என்னும் திருக்கடந்தையில் அவதரித்தருளியவரும், அருணந்தி சிவாச்சாரியர் சுவாமிகள்பால் சிவஞானோபதேசம் பெற்றவருமாகிய மறைஞான சம்பந்த சிவாசாரியரும் இவரும் வேறாவர். இவர்கள் யாதொரு விதமான பிரபந்தமும் செய்திலர். இவர்கள் சிதம்பர தலத்தை யடைந்து கூத்தப்பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்தவர். இவருடைய மாணாக்கர் பௌட்கராகம விருத்தியுரையும் கோயிற்புராணமும், மெய்கண்ட சாத்திர நூல்களுட் பலவும் இயற்றியருளிய தில்லைவாழந்தனருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர் ஆவர்..

இம்மறைஞான சம்பந்தர் சந்தான குரவருள் மூன்றாமவராவர். இவர் தில்லையின் வடமேற்கிலுள்ளதும் தில்லைக்குரித்தாகிய பத்துத் தீர்த்தங்களுள் ஏழாவதாக வைத்து எண்ணப்படும் பிரமதீர்த்தத் தென்கரையில்சமாதி கொண்டெழுந்

தருளியுள்ளார். இவர் தம்மாணுக்கராகிய உமாபதிசிவம் தில்லையின் கீழ்பாலுள்ள கொற்றவன் குடியில் சமாதி கொண்டு எழுந்தருளியுள்ளார். இவ்விருவர் தமக்கும் காலத்தாற் பிற்பட்டவர் இச் சங்கற்ப நிராகரணத்திருக்குறளாசிரியர். இவர் செய்தருளிய சைவ சமய நெறித் திருக்குறளுக்கு யாழ்ப்பாணத்து நல்லூர் அருட்டிரு ஆறுமுக நாவலர் அவர்கள் உரை வகுத்தருளியுள்ளனர். இதனுல் அவர் பெருமையும் ஒருவாறறிதல் கூடும். ஆகவே, இவரும் அவரும் வேறெனல் தெற்றென வறியலாம்.

இம் மறை ஞானசம்பந்த நாயனுர் பாயிரத்துட் காரைக் காலம்மையாரையும், மணிவாசகப் பெருமானையும் மிக மிகப் போற்றியுள்ளனர்.

சைவ சமய நெறி:— (காரைக்காலம்மையார்)

"நம்மடிகள் நாடகத்தை ஞானவிழி யாற்றினைக்கும்
அம்மைதிருப் பாதநினைப் பாம்"

(இ - ள்.) திருவாலங்காட்டின்கண்ணே நம்முடைய கடவுளாகிய சிவபெருமானது (தாண்டவத்தை ஞானக் கண்ணினுலே தரிசித்து அநுபவித்த காரைக்காலம்மையாருடைய திருவடிகளைச் சிந்திப்பாம். (எ-று.)

மாணிக்கவாசகர்:—

"பரிமேல் வரவமலன் பாடிய மெய்ப் பத்தர்
இருபதமும் சென்னியில்வைப் போம்"

என்பதாம்.

(இ - ள்.) சிவபெருமான் குதிரையின் மேலேறி வரும்படிப் பாடியருளிய மெய்யன்பராகிய மாணிக்கவாசக சுவாமி

ளுடைய இரண்டு திருவடிகளையும் சிரசின் மேலிருத்தி வணங்குவோம். இனி சங்கற்ப நிராகரணமாகிய இத்திருக் குறளில் அவ்விருவர் துதிப்பாக்கள் வருமாறு.

காரைக்காலம்மையார்:—

"பாட்டுக்கு வித்தாம் பசுபதியை யாலவனத்
தாட்டுவித்தாள் பாத நினைப்பாம்"

மாணிக்கவாசகர்:—

"வேதாகமத்தின் விளைவையெனையாண்ட
பேதா யென்றுனை நினைப்பாம்"

என்பதாம்.

இப்பாடல்களுக்கு வகுக்கப்பட்ட உரையினைக் காண்க.

ஆகவே இம்மறைஞானசம்பந்த நாயனார் ஞானவிழிக் கொண்டு மோனநெறி முற்றிய பெரியோர்களைத் தியானித் துத் தெளிந்து நிட்டை கூடிய நிமலர் என்பது தெளியற் பாற்றும்.

வாழ்க மறைஞான சம்பந்தர்
வாழ்க தமிழ் மறை

உ

திருச்சிற்றம்பலம்

சங்கற்ப நிராகரணம்.

சிறப்புப்பாயிரம்

வெண்பா

நிரந்தவர்சங் கற்பம் நிராகரிக்கும் இந்நூல்
பரிந்துலகோர் உய்யப் பகர்ந்தான்—திருந்துமறை
ஓங்கி விளங்க உதித்தமனே ஒட்டினன்பேர்
தாங்கினனுய்ந் தாகமமுத் தன் (1)

ஆரியனல் ஐயம் திரிவுமற ஆராய்ந்த
சூரியரே இந்நூல் குறித்தறிவார்—தேரும்பா
வார்ந்தவர்தம் பாதத் தறிக அவலமலம்
தீர்ந்துவிடும் வாய்க்கும் சிவம் (2)

இப்பாக்களாலாய சிறப்புப்பாயிரத்தினைச் செப்பியவர் இன்னாரெனத் தெரிந்து கோடற்கியலவில்லை யாயினும் இச் சங்கற்ப நிராகரண வேட்டினிற் செறிந்துள்ளது. பாயிரம் பகர்வதற்குரியார்.

" தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணக்கன் தகு முரைகாரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே "

என்னுஞ் சூத்திரப்படிப் பாயிரம் பகர்தற்குரியார் இவரெனத் தெரிக்கப் பெற்றுள்ளது.

பாயிரம் என்றால், வரலாறு என்பது பொருளாம். பாயிரம்-பொதுப்பாயிரமும், சிறப்புப்பாயிரமும் எனஇருவகைத் தாம்.

அவற்றுள் இப்பாயிரம் சிறப்புப்பாயிரமாம். ஒருநூலை கற்கின்றுழி நூலாசிரியன் வரலாறு முதலியன தெரியாக்கால் நூலைக் கேட்டற்கண் ஊக்கஞ்செல்லாது.

"பருப் பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு
நுண் பொருட்டாகிய நூலினது விளங்கும்"

ஆகலின் பாயிரங்கேட்டே தீரல் வேண்டும் என்பது. கேளாக்கால்,

குன்று முட்டிய குரீஇப் போலவும்
குறிச்சிபுக்க மான்போலவும் மாணுக்கன் இடர்ப்படுவன்

என்பதாம்.

இப்பாயிரம் பொதுவும் சிறப்பும் இரண்டேயன்றித் தற்சிறப்புப்பாயிரம் என்பதும் ஒன்றும்.

"தெய்வ வணக்கமு செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது தற்சிறப்பாகும்"

என்பது தற்சிறப்புப் பாயிரம் ஆக்கியோனல் ஆக்கப்படுவதாய் நூலகத்ததாய் இருப்பது. பாயிரம் புறவுரையாய் இருப்பது.

சிறப்புப்பாயிரத்தின் இயலாவது: பதினொரு வகையான பெற்றிமை யுடையது. அவை,

ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே

எனவும்,

காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரும் உளரே

எனவும், வருஞ் சூத்திரங்களால் ஆக்கியோன் பெயரும், வழியும், எல்லையும், நூற்பெயரும், யாப்பும், நுதலியபொருளும், கேட்போரும், பயனுமாகிய எட்டுடன் காலமும், களனும், காரணமும், ஆகிய மூன்றினையும் கூட்டிப் பதினொரு பொருளையும் தெரிப்பதென்பர்.

இங்ஙனமாக நன்னூல் முதலிய இயல்நூல்கள் பாயிரத் திலக்கணம் பகரா நிற்கும்

இப்பாயிரச் செய்யுளின் பொருள் வருமாறு.

(இ-ள்) திருந்துமறை ஓங்கிவிளங்க — இயல்பாகவே திருந்தியவேதங்கள், உலகின்கண் உயர்வுற்று விளக்கமுறுமாறு, உதித்தமனை ஓட்டினன்பேர் — ஆன்மாக்களிடத்து அநாதியே பற்றியிராநின்ற அறியாமை யென்னும் இருளை விரட்டியடித்து ஞானவொளி யுண்டாக்கினவனுடைய திருப்பெயர். தாங்கினன் ஆய்ந்து ஆகமம் மூத்தன்—தரித்தவன் யாவனோ வென்னில், மூலாகமமும் உபாகமமும் ஆயவற்றினை முறையே நன்காய்ந்து தெளிந்தவனாகிய மறைஞான சம்பந்தன் ஆவன். இம்மேலோன், நிரந்தவர் சங்கற்பம்— உலகிடைத்தோன்றியநாலாறுசமயத்தில் மேலாறுக்கொண்ட அகச்சமயத்தில் வந்தவர் கூறும் அயிக்கியவாத முதல் எட்டுச் சமயவாதங்களுடைய கொள்கையினை, நிராகரிக்கும்—மறுக்கும், இந்நூல்—இந்தமெய்ந்நூலை, பரிந்து—உலோகோபகாரமாக உலகமக்கள் பொருட்டு விரும்பி, உலகோர்—உலகினர், உய்ய—பிறவிப்பிணியினை வீட்டி பிறவா நெறியினைப் பற்றி கடைத்தேற, பகர்ந்தான்—ஐயந்திரிபற ஆக்கி அருளினான் என்பதாம். ஆகமமுத்தன் பகர்ந்தான் எனவினைமுடிவு, காண்க.

நூற்பயன்

(இ-ள்) ஆரியனால்—குருவினால், ஐயந்திரிவும்அற—சந்தேகமும் விபரீதமும் ஆகிய குற்றம் நீங்க, ஆராய்ந்த சூரியர் ஏ—நன்குதெளிந்த நுட்ப மதிவாணராகிய மாணவர்களே இந்நூல் இச்சங்கற்பநிராகரணம் என்னும் இத்திவ்விய நூலை, குறித்து அறிவார்-குறிக்கோளாகக்கொண்டு அறியப் பெறுவோராவர், தேரும்பா ஆர்ந்தவர் பாதத்து அறிக—தெளிவுற்ற பாக்களின் பொதிந்து நிறைந்து கிடக்கின்றமையினை, தெளிந்தவர் திருவடி தரிசனப்பேற்றால் நன்கறியக் கடவர், அவலம்மலம் தீர்ந்துவிடும் — அவலமாகிய பாசவளி கெட்டே யொழியும், சிவம் வாய்க்கும்—சிவமாந்தன்மை பெருவாழ்வு வாய்த்தல் உண்டாம் (எ—று)

இச்செய்யுள் ஆசிரியன் இயலும், மாணவன் இயலும் அவர் கேட்டுத் தெளியுமாறும் கேட்டுத் தெளிந்தவரே அவலமலம் அறுக்கப்பெறுவர் என்பதும், இவ்வவலமலம் தீர்ந்தவரே சிவமாந்தன்மைப் பெருவாழ்வெய்துவர் என்பதும் குறிக்கப் பெற்றதாம்.

திருந்துமறை ஓங்கிவிளங்க உதித்து அமணை ஓட்டினன்பேர் தாங்கினன் ஆய்ந்து ஆகமமுத்தன்—ஆகமங்களைத் துருவியாராய்ந்து சிவஞானமுற்றவனும், இயல்பாகவே யுயர்ந்து திருந்தி விளங்கிய வேதங்கள் உயர்ந்து விளங்குமாறு சீகாழிப்பதியில் கவுணியர் குலத்து வந்தவதரித்தருளி வேதவேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லிய அமணர்களாகியபகைவரை வேதாகம முழக்கமுறுமிந்நாட்டில் உறையாதவாறு விரட்டியருளிய திருஞானசம்மந்தபெருமான் திருப்

பெயரைச் சூட்டினவனும் ஆகிய மறைஞானசம்பந்தர் உலகுய்யச் சங்கற்பநிராகரண மென்னு மிந்நூலைச் செய்தருளினார் எனப்பொருள் கோடலே ஏற்புடைத்தாம்.

பன்னிருதிருப்பெயர் தாங்கிய கழுமலநகரில் குருஇலிங்க சங்கம வடிவாக வெழுந்தருளிய திருத்தோணியப்பரும், சட்டையப்பரும், கழுமலநாதராகிய பிரமபுரீசரும். எழுந்தருளிய சிறப்புடைய திருப்பதியில் சிவபாத இருதயர் செய்தவத்தால் திருவவதாரம் புரிந்தனர் திருஞானசம்பந்தர். இவர் பிள்ளைத்திருநாமம் பாலறுவாயர் என்பது.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரைபொலிய புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவமாற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

என்பது சேக்கிழார் திருவாக்காகும்.

இச்சம்பந்தப்பெருமானார் பருவ மூன்றினிற் பாடத் திருமுலைப்பாலுண்டருளித் 'தோடுடைய செவியன்' முதலிய தேவாரப் பதிகங்களை யோதிக் கோலக்காவினில் பொற்றுளம் பெற்று திருத்தாதையார் தோளில் எழுந்தருளி யிருந்து கொண்டு சிலவாண்டுகள்வரை பல தலங்களை தரிசித்துப் பதிகங்களைபாடி முத்துச்சிவிகை முதலியன பெற்று அதிலமர்ந்து பலபதிகங்கள் திருமறைக்காட்டில் அப்பரும் தாமும் எழுந்தருளி வேதங்களாகிய மறைகள் பலகாலங்கள் பூசித்து அடைக்கப்பட்ட கதவினை பாடித்திறக்கவும் திருக்காப்புக் கொள்ளவும் செய்துகொண்டிருந்த காலத்தில் வளவர்கோன் பாவையாகிய மங்கையர்க்கரசியார் ஆணைவழி பாண்டி நாடாளும் மன்னவன் சமண்குழியில் விழ்ந்து சைவ சமயமும் வீழுந்தருவாயினிள்ளதைக் கண்டு குலச்சிறையாராகிய அமைச்சர்வந்து விழ்ந்து வணங்கி மதுரையம் பதிக்கு அழைத்துச்சென்றனர்.

அங்குத் திருஞானசம்பந்தப்பெருமான் சைவசமயம் காத்த தையலார் ஆகிய பேரரசியைக் கண்டு அஞ்சற்கவென ஆசியருளி, பலவகையான மந்திரசாலங்களையுடைய ஆனைமா மலையாதியாய எட்டுமலைகளிலும் உறைந்துகொண்டிருந்த எண்ணாயிரவரும்வந்து வாதிடலாயினர். வாதிட்ட அவர்களைப்பாண்டியனுக்குற்ற சுரநோயைத் தவிர்க்கக் கூறி அவர்கள் தவிக்கர்லற்ருது தவிக்க அதுபோதுத் திருநீற்றுப் பதிகம் பாடி திருநீற்றுக்காம்பணிந்து பாண்டினுடைய கூனையும் சுரநோயினையும் நீக்கியருளினர்.

பின்னரும் அவர்கள் கனல் வாதம் புனல் வாதம் ஆகிய வாதங்களுக் கழைக்க சுவாமிகள் தாம்பாடி யருளிய பதிகங்களையே கொண்டு அவ்விரண்டிலும் வெற்றியுருது அவர்களை கழுமரத்திலேற்றியழித்து ஒழித்தனர் என்பது வரலாறு.

இப்பாடலின் ஆக்கியோன் பெயர் முதலியனவற்றை எனவாய்வாம்.

திருந்துமறை ஓங்கிவிளங்க உதித்து அமணை ஓட்டினன் பேர்தாங்கினன் என்றதனுல் மறைஞானசம்பந்தர் என ஆக்கியோன் பெயரும், ஆய்ந்து ஆகமமுத்தன்—ஆகமநூல் வழி இந்நூல் வந்ததெனவழியும், பரந்துலகோர் உய்யப்பகர்ந்தான் என்றதனுல் வேதாகமாக வந்து தமிழ்நூல் வழங்கும் குணகடல் குமரி குடகம் வேங்கடம் ஆகிய இந்நான்கெல்லைக் குட்பட்ட தமிழகம் என்பதும் சங்கற்பம் நிராகரிக்கும்— எனவே சங்கற்ப நிராகணம் என நூற்பெயரும், கட்டளை முதலிய நூல்கள் கற்றுக் சரியையாதி பாதங்களையுணர்ந்தவர்க்கே இந்நூல் ஆய்தல் வேண்டுமெனும்யாப்பும் (இயையும்) அயிக்கவாதம் முதலிய எட்டுமத வாதியர்களை மறுப்புரைத்து சித்தாந்தஞ்செய்ததே முதலியபொருளும், பக்குவ முற்றவர்களே கேட்போரும் உண்மை நெறிஇதுதான் எனக்கடைப் பிடித்தலே பயனும் ஆக எட்டு வந்தவாறு காண்க என்பதாம்.

இங்ஙனமாகப் பாயிரச் செய்யுளின் பருப்பொருளை யுண ரின் நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கும் எனல் பாயிரத் திலக்கணமாம்

இவர் செய்த சிவதருமோத்தரமெனும் பெருநூலும் ஆகமச்சார்பாகிய சைவசமயநெறித் திருக்குறளும் கண் டுணர்ந்து இந்நூலாசிரியர் திறன் இப்பெற்றித்தாம் என முடிவுகாணல் வேண்டும்.

வாழி மறைஞான சம்பந்தர் செய்நூலும்
வாழி யவர்புகழும் மாநிலத்தில்—வாழிநனி
உய்யுநெறி காணு முத்தமருமே வாழி
தெய்வக் கலையாவுந் தெளிந்து

ஒரு குறிப்பு :— உலகிடை மக்கள் உய்வான் வேண்டி முதற்பாவலராகிய திருவள்ளுவனார் அறம் பொருள் இன்பம் என முப்பால் வகுத்து, வீட்டுப்பாலை துறவறவியலிடைக் கூறியருளினார். முதன் முதலில் செந்தமிழில் உள்ள இந்நூல் இப்போது எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெற்று எந்நாட்டு மக்களும் இந்நூலைக் கற்றுணர்ந் தின்புறுகின்றனர்.

இந் நூலாசிரியர்க்கும் பின்னர்த் தோன்றினவர்களுள் குறட்பாவால் நூல்கள் பல பாடினவர் மறைஞான சம்பந்தரேயாவர். ஔவையார் ஞானக்குறள் என ஒரு நூலுமுண்டு. கண்கட்டிமறை ஞானசம்பந்தப்பண்டாரமென அழைக்கப்பெறும் இவரோ பல குறள் நூல்கள் யாத்துள்ளனர்.

இந்நூல்கள் பெரும்பாலும் ஞானநெறி நவிலும் பெற்றியனவேயாம். இந் நூல்களனைத்தையும் ஒருங்கேயுடைய சுவடிகள், நம் பெருமன்னர் பிரான் கனம் சரபோசி மன்னர் சரசுவதிமால் நூல் நிலையத்தில் ஏட்டிடையில் உள்ளன. இதனை நல்ல முறையில் வரைந்து வெளிப்படுத்தினார் யாருமில்லை.

ஆகலான், பொறுமையுடன் சாத்திரம்வல்ல புலவர் பெருமக்களைக்கொண்டு நல்லுரை காணவேண்டும். இங்ஙனமாகச் செய்து வரலே முக்கிய குறிக்கோளாகக்கொண்டுள்ளது ஷை நூல் நிலையம் ஆகும். இப் பெற்றி வாய்ந்த நூல் நிலையமும் இதனைக் கண்காணித்து வரும் அரசினரும் பல்லாண்டு வாழியர் என அறம் வளர்த்த நாயகியொடு அமர்ந்தருள் திரு ஐயாற்றீசன் திருவடிகளைச் சிந்தித்து வணங்குகின்றேன்.

இங்ஙனம்,
பண்டித வித்துவான்,
இராம. கோவிந்தசாமி பிள்ளை
முன்னாட் தமிழ்ப் பேராசிரியர்.

iii

உ

திருச்சிற்றம்பலம்.

சங்கற்ப நிராகரணம்.

(மூலமும் உரையும்)

விநாயகர் வணக்கம்

செய்யவுரு வேழ விநாயகன்றாட் சிந்திப்பாம்
மய்யலற வாய்க்கநல்கும் வாக்கு.

வணக்கம் இருவகைத்து; ஏற்புடைக்கடவுள் வணக்கமும் வழிபடு கடவுள் வணக்கமும் என, அவற்றுள் இவ் வணக்கம் வழிபடு கடவுள் வணக்கமாகும் சைவசமயிகள் ஒரு செயல் செய்யுங்கால் முதன்முதலில் விநாயகர் வணக்கம் புரிதல் மரபு. எடுத்துக்கொண்ட காரியமாகிய இந்நூல் இனிது முடிதல் வேண்டி வழிபாடு செய்தனர் ஆசிரியர்.

(இ-ள்) அழகிய செவந்த நிற வடிவமுடைய யானை முகமுற்ற மேலான தலைவனாகிய கணபதியின் திருவடிகளைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துவாம். அங்ஙனஞ் சிந்தித்தால் ஐயம் திரிபு அறியாமையாகிய முக்குற்றங்களும் ஒழிய வாக்குவன்மை வாய்க்க எல்லா நலன்களையும் கொடுத்தருளுவர் (எ—று)

விநாயகன் என்பதற்கு தனக்கொரு தலைவனில்லாதவன் மேலான கடவுள் என்பது பொருள்.

(பாயிரம்)

சிவ வணக்கம்

பூமேலான் மாலமரர் போற்றமணி மன்ருடி
யோமேன னென்னுளத்து முண்டு (1)

(இ-ள்) பிரமதேவனும் மகாவிட்டுணுவும் நின்று துதித்தலைப்புரிய அழகிய பொன்னம்பலத்தின்கண் அநவரதமும் ஐந்தொழில் ஆடல் புரிபவன் ஓங்காரத்துருவன் ஆவன். அந்நடராசப்பெருமான் அடியேனுடைய உள்ளக்குகையில் எப்பொழுதும் உளனுகுவன்.

"பணைக்கை மும்முத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்"

என்னும் அப்பர் திருவாக்கும் இதனை வலியுறுத்தும். இம்முதற்றிருக்குறள் மன்றிலாடு மாமணியாகிய நடராசப் பெருமானைப் பற்றியதாகும். "ஓமெனும் எழுத்தின் வடிவாய் நடநவிற்று புலியூரன்" என்னும் பாடலைக் காணல் வேண்டும்.

சிவகாமசுந்தரியம்மையார்

செடச்செயலோ ரைந்தினையுஞ் செய்யாதே செய்யும்
மடக்கொடிதாள் வைப்பாம் மனத்து (2)

(இ-ள்) செடச் செயலாகிய படைப்பு காப்பு அழிப்பு மறைப்பு அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் தான் முன்னின்று செய்யாமல் சிவபெருமானேடும் வேற்றுமையின்றி ஒற்றித்து ஒருமுதலாகி நின்று நடத்தும் இளங்கொடியாகிய சிவகாமவல்லித் தாயாருடைய திருவடிகளை மனத்தில் வைத்து தியானிப்பாம். (எ-று)

பஞ்சகிருத்தியங்கட்கும் பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என்பவர்களாக நின்று நிகழ்த்துவள்

ஈறிலாதவளாகிய ஒருத்தி என்பது கருத்தாம். அக்கினி சத்தி யொன்றே யாயினும் சூடு, விளக்கம், அடுதலாகிய தொழில் வேறுபாட்டினாலே பலவாகத் தோன்றுமாறு போலச் சிவ சத்தி யொன்றேயாயினும் படைத்தல் காத்தல் முதலிய தொழில் வேறுபாட்டினாலே பலவாகத் தோன்றுமென்பது சிவாகம நூற்றுணிவு

விநாயகர் வணக்கம்

எநாயகனே வென்னவிட ரெல்லாங் களையும்
விநாயகனைத் தாள்பணிவாம் வீழ்ந்து. (3)

(இ-ள்) எம் நாயகனே என்ன — எம்முடைய பரம தலைவனே என்று பலபடியாகத் துதிப்ப, இடர் எல்லாம் — பிறவிப் பிணியாயின. அனைத்துத் துன்பங்களையும். களையும் —நீக்கியருளும், விநாயகனை — தனக்கொரு தலைவனில்லாத வனாகிய கணபதியின், தாள்—இருதிருவடிகளையும், வீழ்ந்து பணிவாம்—விரும்பி வணங்குவாம் (எ-று)

“ விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து ”

என்னும் பதினொராந் திருமுறைச் செய்யுளால் நன்கினிது விளங்காநிற்கும்.

குறிப்பு :— இடர் — துன்பம், பிறவிப்பெரும்பிணி மூவகைத்தாம். தன்னாலும் பிறவுயிராலும், தெய்வத்தாலும் வருவனவாம். இவற்றை வடநூலார், ஆதியாத்மிகம் ஆதி தெய்விகம், ஆதிபௌதிகம் என்பர்.

சுப்பிரமணியர் வணக்கம்

என்னிருளை நீக்கு மிகையோர்க் கிடர்கடியும்
பன்னிருதோட் பாலன் பதம். (4)

(இ-ள்) பன்னிருதோள் பாலன்பதம்-பன்னிரண்டு திருக் கரங்களையும் ஆறுதிருமுகங்களையும் உடைய குமாரக்கடவுளாகிய சுப்பிரமணியருடைய திருவடிகள், என் இருளை நீக்கும்—அடியேனுடைய உள்ளிருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞான வொளியைத் தந்தருளிப்புரக்கும். இமையோர்க்கு இடர்கடியும் — இமையா நாட்டமுடைய தேவர்கட்கு அசுரர்களால் வரும் பல்வகையான துன்பங்களைப் போக்கி யின்பத்தை அருளிச்செய்யும் (எ—று)

திருமுருகப்பெருமாற்குக் குமாரபரமேசுரன் என்னு நாமம் உண்டு. நமோகுமாரய என்பது சடக்கரமனு வென நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப் படையுரையாற் கூறியது காண்க. திருமுருகப்பெருமான் பன்னிருகைகளும் தமிழ் மொழியிலுள்ள பன்னிருயிராகவும், வேலாயுதம் ஆய்த வெழுத்தாகவும், மூவாறு கண்களும் மூவாறுமெய்களாகவும் கூறுவதுண்டு. பழனிநாதன் ஒருதிருமுகமும் இருதிருக் கரங்களுமுடைய குருவுரு என்பர். "அருள்சேர் துங்கப் பழனியில் முருகா" வென்பது திருப்புகழ். இவ்வாறு மக்கட்குஅருள்புரியும் வடிவாம் ஒருமுகமும் ஈரிருதிருக்கரங்களுமுடைய அவசரம் ஒன்று. இதனைக் குமரக் கடவுள் என்பர் ஆறுமுகமும் பன்னிரு கரமுமுடைய அவசரத்தை சண்முகக் கடவுள் என்பர். உலகத்துயிர்கட்கு இச்சாஞானகிரியைகளை யருளுவதற்கு வள்ளி தெய்வானை ஞானசத்திவேல் ஆகிய வைகளுடன் சேர்ந்த அவசரம் ஒன்று. இதனை "மங்கையர் கணவ" என்னுந் திருமுருகாற்றுப் படையடியும் வலியுறுத்தும் சேயோன் மேய மைவரையுலகம் என்பதனால் குமாரக் கடவுளை மலைமேல் மருந்தாகிய தெய்வம் என்பர்,

திருநந்திதேவர் வணக்கம்

நாற்றமலர் சூட்டுவ மேநந்தி மாகாளர்
ஏற்றினடி தன்னினுமே யாம். (5)

(இ-ள்) நந்தி மாகாளர் ஏற்றின் அடி தன்னினும்— நந்திமாகாளர் எனவும, இடபதேவர் எனவும் அழைக்கப் பெறும் சிவகணநாதராகிய திருநந்தியெம்பெருமான் திருவடி களிடத்தும், நாற்றமலர் யாம் சூட்டுவம் (ஏ) நறுமணங் கமழும் கோட்டுப் பூ, கொடிப் பூ, புதற் பூ, நீர்ப்பூவாகிய நால்வகைப் பூக்களையும் அணிந்து துதித்து மகிழ்வாம்யாம் (எ-று)

அங்கணன் கைலைகாக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற்கெல்லாம் முதற்குரு நாத னாகிப்
பங்கயந் துளவநாறும் வேத்திரப் படை பொறுத்த
செங்கையெம் பெருமானந்தி சீரடிக் கமலம் போற்றி.

என்பது காஞ்சிப்புராணம்.

சண்டேசுரர் வணக்கம்

தந்தைதனைத் தாடடிந்த சண்டேசர் தாளிணையைச்
சிந்தைசெய் வாம்பூசை செய்து. (6)

(இ-ள்) தந்தைதனை தாள் தடிந்த — எச்சதத்தனாகிய தன் தந்தையின் சிவபூசனைக்காம் பாலை யிடறிய இருகால் களையும் மழுவால் வெட்டி வீழ்த்திய, சண்டேசர் தாள் இணையை — சண்டேசர்பதம் இறையருளாற் பெற்ற விசார சருமரின் இருதிருவடிகளையும், பூசை செய்து — பூக்களைக் கொண்டு பூசனை புரிந்து, சிந்தை செய்வாம் — சிந்தையில் வைத்து நீடு நினைந்து வணங்குவாம். (எ-று)

“ பாதகமென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும்—சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலாற் றான் ”

என்னுந் திருக்களிற்றுப்படியார் செய்யுளால் இவ் விவரம் அறிதல்கூடும்.

சனற்குமாரனுதியோர் வணக்கம்

சனற்குமர னுதி தபோதனர்க்கா ளானேம்
எனற்குவர முன்னியற்றி னேம். (7)

(இ-ள்) சனற்குமரன் ஆதி தபோதனர்க்கு — சனற்குமரன் முதலிய தவத்தைத் தனமாகவுடைய முனிவரர் தமக்கு, ஆளானேம்—அடிமைப்பட்டுள்ளோம், எனற்கு—என்று கூறிக்கோடற்கு, வரம்–வரமாகிய தவத்தை, முன்னியற்றினேம் (யாம்)-யாங்கள் முற்பிறப்பிற் செய்துள்ளோம் சனற்குமரனுதிதபோதனர்கள் —சனகர் சனந்தனர் சனுதனர், சனற்குமாரர் என்பவர்களாம். சதுர்முகன் மைந்தன் சனற்குமரன் ஆம். திருக்கயிலாயபரம்பரை அகச்சந்தானகுரவருள் ஒருவர் இவர். இந் நால்வரும் தென்முகப்பரமாசாரியரை நோக்கிப் பல காலந்தவமியற்றி, வேதாந்த முத்தியினை யெய்தினர் என்று வரலாறு.

காரைக்காலம்மையார்

பாட்டுக்கு வித்தாம் பசுபதியை யாலவனத்
தாட்டுவித்தாள் பாதநினைப் பாம்.

(இ-ள்) பாட்டுக்கு வித்து ஆம் பசுபதியை—வேதப் பாட்டினுக்கு வித்தாகிய பசுபதியாகியநடராசப்பெருமானை ஆலவனத்து—திருவிலங்காடென்னும் திருப்பதியில், ஆட்டுவித்தாள் — தான்பாட அவரை யாடிக்கொண்டேயிருக்குமாறு அன்பால் விண்ணப்பித்தவராகிய காரைக்காலம்மையாரின், பாதம்—திருவடித்தாமரைகளை, நினைப்பாம் (யாம்) சிந்தையில் வைத்து வணங்குவாம். (எ—று)

> " நம்மடிக ளுடகத்தை ஞானவிழியாற் றிளைக்கும்
> அம்மை திருப்பாத நினைப்பாம் "

என்பது இவ்வாசிரியர் இயற்றிய சைவசமய நெறித் திருக்குறளாகும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்

ஈசனரு ளாலெரியிட் டேடெடுத்து(ம்) வாதுவென்ற
பூசுரனைப் பாதநினைப் பாம் (9)

(இ-ள்) ஈசன்அருளால் — திருவாலவாய்ச் சிவபெருமான் கருணையினுல், எரியிட்டு ஏடுஎடுத்து — சமணர்களோடு எதிர்த்து அனல்வாதபுனல் வாதங்களில் தீயிலிட்ட ஏடு கருகாமல் பச்சென்றிருக்கவும் வைகைப் பெருகுவெள்ளத்தின்கண் இட்ட ஏடு நீர்வழி யோடாதே எதிரேறிச்செல்லவும் அவ்வேடுகளைப்பலருமறிய எடுத்தும், வாது வென்ற பூசுரனை — வாதுக்கழைத்த சமணர்களை வென்றருளிய காழி வருகவுணியக்கன்றுகிய திருஞானசம்பந்தப் பெருமான்றன் பாதநினைப்பாம் — திருவடிகளைச் சிந்தித்து வழிபாடு செய்வோம்யாம் (எ — று) பூசுரனை உருபு மயக்கம், பூசுரனுடைய என்பது பொருள்.

கனலிலிட்ட ஏட்டிற் கண்ட பதிகமாவது :—

"தளிரிள வளரொளி தனதெழி றருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரின வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே"

என்பதாம்.

புனலிலிட்ட ஏட்டிற்கண்ட பதிகமாவது :—

"வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தியதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

என்பதாம்.

இவ் வாதுக்கழைத்தவர் சமணர்களே. இவர்தமை வென்ற அற்புதச் செயலினைக் குறிப்பிடவே வாதுவென்ற பூசுரனை யென்றார்; பூமியில் வந்து அவதரித்தருளிய தேவனார் என்னும் பொருள்பற்றி.

திருநாவுக்கரசு நாயனார் வணக்கம்

வாக்கியலி னாலே மறைவனத்து வன்கதவை
நீக்கினன்றா ணீங்காதென் னெஞ்சு. 10

(இ-ள்) மறை வனத்து வன்கதவை சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்றாகிய வேதாரணிய மெனுந்திருப்பதியில் வேதங்கள் பல காலங்கள் பூசித்துத் திருக்காப்பிடப்பட்ட வலிய கதவினை, வாக்கு இயலினாலே—இறைவன் நிறையருள் பெற்ற திருநாவுக்கரசர் தன் வாக்கினின்றெழுந்த, 'பண்ணினேர் மொழி எனும் பதிகத்தால் ; நீக்கினன்தாள்—திறப்பித்தருளிய. அவ்வாசீசப் பெருமானுடைய திருவடிகள், என் நெஞ்சு நீங்காது — இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருத்தலால் அடியேனுடைய மனத்தினை விட்டகலாது (எ-று) என்னெஞ்சுள் எப்போதும் இருந்தருளும். நீக்கினன் என்றதனால் நீக்கற் கருமை குறிப்பிட்டதாகும்.

வன்கதவந் திறப்பித்த பதிகம் வருமாறு:—

"பண்ணி னேர்மொழியா ளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ்செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே"

என்பதாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார் வணக்கம்

வீட்டியுயிர் முன்முதலை தான்விழுங்கும் பாலகனை.
மீட்டவனைத் தாள்பணிவா மே (11)

(இ—ள்) (அவிநாசிப்பதியின்கண்) முதலை முன் உயிர் வீட்டி விழுங்கும் பாலகனை—நீராடச்சென்ற அந்தணர்சிறு வனைமுதலையானது முன்பு உயிரைக்கொன்று விழுங்கிய அப் பாலகனை, மீட்டவனை—அருள் கொண்டு பதிகம்பாடி அம் முதலைவாயினின்றும் வருமாறு அழைத்தருளிய தம்பிரான் ருேழராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய, தாள்பணிவாம் (ஏ) திருவடிகளைத்தொழுது வணங்குவாம் யாம் (எ—று) தான் அசைநிலை.

வரலாறு: திருப்புக்கொளியூர் அவிநாசிப்பதியில் உள்ள தொரு பெரிய ஏரியின்கண் நீராடப்புக்க அந்தணர் சிறுவன் றன் உயிரினைக்கொன்று, உடலினை விழுங்கிய அப்பழைய முதலையே சிலகாலஞ் சென்றும் அவ்வேரிக்கண்ணே உடலும் உயிரும் ஒன்றி வளர்ச்சியுற்ற பாலகனைக் கொண்டு வந்து விடச்செய்து தாய் தந்தையரையும் ஊரவர்களையும் மகிழு மாறு அற்புதப்பதிகம் பாடினார் என்பதாம்.

பாலனையுண்ட முதலை மீட்டுங் கொணருமாப்பாடிய பதிகம்:

"உரைப்பார் உரையுகந்துள்க வல்லார்தங்க ளுச்சியாய்!
அரைக்காடரவா! ஆதியும் அந்தமு மாயினாய்!
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு
[காலனையே.

என்பதும்.

தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்தது முதலையுண்ட பாலனை யழைத்ததும் சுந்தரர்தம் அற்புதசெயல்களுள் மிக மிக மேலான தாகும்.

திருவாதவூரடிகள்

வேதா கமத்தின் விளைவை யெனையாண்ட
பேதாயென் ருனைநினைப் பாம். (12)

(இ-ள்) வேதம் ஆகமத்தின் விளைவை — பொதுவுஞ் சிறப்புமெனப்படும்வேதம் ஆகமங்களின்பெரும் பயனுயுள்ள பரம்பொருளை; எனையாண்ட பேதாய் என்றுனை—நாயேனை யாண்டருளியவன் பேதையேயாவன் என்று தன் திருவாசகத்தில் பாடியருளிய பண்பனுகிய மணிவாசகப் பெருமானை; நினைப்பாம்—உள்ளத்திடத்து வைத்து வழிபடுவாம் (எ-று) பேதாய் என்றழைத்த பதிகம் வருமாறு:—

''தாதாய் மூவே மூலகுக்குந்
 தாயே நாயேன்றனை யாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
 பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதாமணியே! யென்றென் றேத்தி
 யிரவும் பகலும் எழிலார்பாதப்
போதாய்ந்தணைவ தென்றுகொல் லோஎன்
 பொல்லா மணியைப் புணர்ந்தே''

திருவாசகம் புணர்ச்சிப் பத்து.

அடியார் வணக்கம்

கைதடிந்தும் கண்ணிடந்தும் கண்டமரிந் தும்பிறரே
துய்யவல்லார் தம்மைநினை வோம் (13)

(இ-ள்) கைதடிந்தும் கழற்சிங்கநாயனுர் தம்பட்டத்துத் தேவி இறைவனுக்காம் பூவையெடுத்து மோந்ததற்காகக் கைகளை வெட்டிவிழ்த்தியும் கண்இடந்தும் — காளத்தியப் பருக்குக் கண்ணப்ப நாயனுர் தம்முடைய கண்களைப் பறித்தப்பியும், கண்டம் அரிந்தும்—சோழநாட்டுக்கணமங்கலம் எனும் பதியில் அரிவாட்டாய நாயனுர் நிவேதனப் பொருள் சிந்தியதற்காக கழுத்தைவெட்டியும், பிறர் ஏது உய்யவல்லார் தம்மை பொன்மீனைக்கொணர்ந்தும் வாளான் மகவரிந்தும் ஆதியகாரணங்களைச்செய்தும் உய்ந்த வல்லவர்களாகிய

ஏனைய திருத்தொண்டர்களுடைய திருவடிகளை, நினைவோம்—எப்போதும் வைத்துத் தியானிப்பாம். (எ—று)

ஒருசில அடியார்கள் செயல்

''வாளான் மகவரிந் தூட்டவல்
வேனல்லன் மாது சொன்ன
சூளான் இளமை துறக்க வல்
லேனல்லன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லே
னல்லன் நானினிச் சென்று
ஆளாவ தெப்படியோ திருக்
காளத்தி யப்பருக்கே''

என்பது பட்டணத்துப் பிள்ளையார் பாடல்

திருமாளிகைத் தேவரடியோர் வணக்கம்

சிந்தித்து மாளிகைத் தேவனெழு வாயரடி
வந்தித்தேங் காணேமுண் மாசு (13)

(இ-ள்) மாளிகைத் தேவன் எழுவாயர் அடி—திருமாளிகைத் தேவர் முதலிய திருவிசைப்பாத் திருமுறை பாடிய பெரியார்களுடைய திருவடிகளை, சிந்தித்து வந்தித்தேம்—தியானித்து வணங்கினோம். ஆகையினால், உள் மாசு காணோம்—உள்ளிடத்து அஞ்ஞான விருளாகிய மாசினைக் காணப் பெற்றேமில்லை.

திருவிசைப்பாச் செய்தோர்கள் பெயர் :—

''சீரார்மாளிகைத் தேவர் கருவூர்த் தேவர்
திகழ்நம்பி கண்டரா தித்த தேவர்
பாராள்வே ணாட்டடிக டிருவாலி யமுதர்
பரவுபுரு டோத்தமர்பண் புளசேதி ராயர்

ஏராரு மிளம்பெருமா னடிகள் சேந்த
ரெண்ணிலதி ராவடிக ளிவர்க ளோடும்
பாராளுங் கல்லாடார் பட்டணத்துப் பிள்ளை
பரவுதிரு விசைப்பாவைப் பாடி னுரே"

என்போராவர்.

மெய்கண்ட தேவநாயனுர் வணக்கம்

திருவெண்ணெய் மானகருண் மெய்கண்ட தேவன்
அருளியவாக் காலறுத்தா மாசு. (15)

(இ - ள்). திருவெண்ணெய் மால் நகருள்—நடுநாட்டுத் தலங்களுள் ஒன்றுன திருவெண்ணெய்நல்லூர் என்று சிறப் பித்தோதப் பெறும் பெருமை பொருந்திய நகரினிடத்து மெய்கண்டதேவன்-சமாதி கொண்டருளிய மெய்கண்ட தேவ நாயனுர், அருளிய, வாக்கால்—திருவாய் மலர்ந்தருளிய சிவ ஞான போதப் பெருவாக்கால், மாசு அறுத்தாம் — மன மாசினை யொழித்தோம். வாக்காலேதாம் எனவும், அழித் தாம் அழுந்தாம் எனவும் பாடபேதங்களாம்.

பதியுண்மை யுணர்ந்தார் வணக்கம்

ஓதித்தான் மெய்கண்ட தேவ னுரையெமக்குப்
போதித்தார் பாதநினைப் பாம். (16)

(இ ள்) மெய்கண்டதேவன் உரை ஓதி – மெய்கண்ட தேவநாயனுர் அருளிய சிவஞான போதவாக்கை ஆசிரியர் முகமாக (பரம்பரைவழி) உபதேசிக்கக்கேட்டு ஓதியுணர்ந்து (அந்நெறியை) எமக்குப் போதித்தார் பாதம் — எமக்குப் போதனை செய்து நல்வழிப்படுத்திய பரமாசிரியர் திருவடி களை, நினைப்போம்—தியானித்து வணங்குவாம் (எ—று)

இது சந்தான குரவர் நெறியினை யுணர்த்திற்று. அகச் சந்தான குரவர் புறச்சந்தான குரவர் என இருவகைப்படுவர்

அகச்சந்தான குரவர் திரு நந்தியெம்பெருமான் சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள் பரஞ்சோதி என நால்வராவர். புறச்சந்தான குரவர் மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியர், மறைஞானசம்பந்த சிவாச்சாரியார் உமாபதி சிவாச்சாரியார் என நால்வராவர். பதிபசுபாசம் எனும் முப் பொருளின் இயலுணர்ந்து பசுபாச ஞானங்கள் நீங்கப் பெற்றுப் பதிஞான முற்ற சத்திநிபாதத்துத்தமர்களை போதித்தார் என்றார்.

வாழ்த்து

மழைபொழிக வாழ்க மறையவர்வா னேருந்
தழைககுழ மிக்கோ தனம். (17)

(இ-ள்) மழைபொழிக—மழைவளஞ் சுரக்க. மறையவர் வானேரும் வாழ்க—அந்தணரும் தேவர்களும் வாழ்க. கோதனம் குழுமித்தழைக — பசுக்கூட்டங்கள் கூட்டமாகக் கூட்டித் தழைவதாக.

வாழ்க மநுநீதி மன்னவர்கண் மண்மகிழத்
தாழ்ககொடுங் கோன்மன்னர் தாம். (18)

(இ-ள்) மநுநீதி மன்னவர்கள் மண்மகிழ வாழ்க—மநுநீதியும் மன்னவர்களும் மண்ணுலகத்தவரும் மகிழுமாறு வாழ்வாராக, கொடுங்கோல் மன்னர்தாம் தாழ்க—கொடுங்கோன்மை கொண்டு ஆளுதலைப் புரியும் அரசர்கள் தாழ்வையடைவார்களாக. (எ—று)

அகத்தும் புறத்து மமலனுள னென்று
மிகத்தெளிந்தார் பல்கநில மீது (19)

(இ-ள்) அகத்தும் புறத்தும் — உள்ளும் புறமும் அமலன்-மும்மலமுமற்றவனாகிய பரமேசுரன். உளன் என்று —உள்ளவன் என்றுகருதி, மிகத் தெளிந்தார்-மிகவும் தெளி

யுற்றவர்களாகிய ஆத்திகர்கள். நிலமிது—இப்பூமியின் கண் பல்க—மிகவும் நிறைவுறுவார்களாக. கடவுள் உண்டு என்று நம்பிக்கை பல்காலம் செய்தவத்தான் வருவது. "தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி" என்பதும்,

"பல்லூழி காலம் பயின்றரனையர்ச்சித்தால்
நல்லறிவு சற்றே நகும்"

என்பதும் சிந்திக்கற் பாற்று.

பாங்குறமெய்ஞ் ஞானிக்கன் னுதிப் பரிந்தளிப்பார்
ஓங்குகவுள் ளாசழித்தின் புற்று. (20)

(இ-ள்) மெய்ஞ்ஞானிக்கு—சிவஞானிகட்கு, பாங்குற—அன்புடன் உபசாரமுற, அன்னம் ஆதி-உண்டி நாலுவிதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலாவாறு உணவுகளை, பரிந்து—விரும்பி, அளிப்பார்—கொடுப்பவர்கள், உள் ஆசு—மனத்திடமாக உள்ள குற்றங்களை, அழித்து — அறவே களைந்து, இன்புற்று-சிவப்பேருகிய நலனுற்று, ஓங்குக-உயர்வார்களாக.

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலாரடியார்தமை யமுது செய்வித்தல்
கண்ணினுல் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்"

மன்னிடுகமண்டலத்தின்மாதவர்க்கும்வேதியர்க்கு
மன்னமளிப் பாரருளினுல். (21)

(இ-ள்) மண்டலத்தின் — மண்ணுலகின் கண், மாதவர்க்கும் — பெருந்தவமுடையவருக்கும், வேதியர்க்கும் — மறையவர்கட்கும், அன்னம்—சோற்றை, அருளினுல் அளிப்பார் — கருணையினுல் கொடுப்பவர், மன்னிடுக—நிலைபெறுவாராக.

விருத்தர் மிடியர் விழியிலர்க்கு மன்னம்
அருத்துமவர் வாழ்கவரு ளால். (22)

(இ-ள்) விருத்தர் மிடியர் விழியிலர்க்கும் — முதிய வர்க்கும் வறுமையாளருக்கும் கண்ணிலாதவருக்கும், அன்னம்-சோற்றை, அருளால் அருத்துமவர் - கருணையினால் உண்பிப்பவர். வாழ்க—நீடு வாழ்வார்களாக. (எ-று)

ஆதுலர்க்குச் சாலையமைத் தன்பான் மருந்தளிப்பார்
பூதலத்தும் வாழ்க புரிந்து. (23)

(இ-ள்) ஆதுலர்க்கு—தரித்திரர்க்கு, சாலையமைத்து —உணவு உறையுள் ஆகிய இடங்களையுண்டாக்கி, மருந்து— பிணிக்கு மருந்து (அவுடதம்) அளிப்பார்-கொடுத்தருளுபவர் பூதலத்தும் விண்ணுலகில்போய்ப்பவன் றுய்ப்பதோடன்றி மண்ணுலகினிடத்தும், புரிந்து வாழ்க—விரும்பி நீடுவாழ் வார்களாக

ஓங்கிடுக யாவரையும் உச்சிதனி னீங்காதே
பாங்குறவே யன்னமளிப் பார். (24)

(இ-ள்) உச்சிதனில் — உச்சிப்போழ்தில், நீங்காதே —விலகாதே, பாங்குறவே — செம்மையாகவே, அன்னம் அளிப்பார்—சோற்றை அளிப்பவர்கள் ஓங்கிடுக — உலகில் உயர்வுற்று வாழ்வார்களாக.

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் தவர்க்கணுக்கர்
சீருடனே மல்க செகத்து. (25)

(இ-ள்) ஆரியமும் செந்தமிழும் — வடமொழியும் தென்றமிழும், ஆராய்ந்தவர்க்கு ஆசிரியர் பால்நன்கு கற்று ஆராய்ந்தவர்களுக்கு, அணுக்கர்-அணுகிய வியல்பாயுள்ளவர் செகத்து—பூமியின்கண், சீருடனே, மல்க-பல்வகைச்சிறப்பு களுடன் நிறைவுறுவார்களாக.

திருப்பணியை யீசற்குச் செய்வார்க்குச் செம்பொன்
விருப்புடனீ வார்பெறுக வீடு. (26)

(இ-ள்) ஈசற்கு — பரமேசுரனுக்கு, திருப்பணியை— திருக்கோயில் கட்டுவித்தலாகிய தொண்டினைச்செய்வார்க்கு —செய்யும் அடியவர்க்கு, செம்பொன் — செம்பொனாகிய திரவியங்களை, விருப்புடன்—ஆசையன்புடன், ஈவார்—தரும் தருமசீலர்கள், வீடுபெறுக—முத்தியின்பாகிய ஆராவியற்கையினை அடைவார்களாக.

பாயிரம்

இயலின் பொருண்முறையா லெண்ணா ருளத்தின்
மயன்மறுப்பா ரோர்ந்தமல வாக்கு (27)

(இ-ள்) அமலவாக்கு—மலரகிதனாகிய பரமேசுவரன் வாக்கினை, ஓர்ந்து—உணர்ந்து, உளத்தி மயல்மறுப்பார்— உள்ளத்தின்கணுள்ள மயக்கத்தை நீக்குபவர் இயலின் பொருள் — இயலின் பொருளினை, முறையால் — ஒழுங்கு முறையால், எண்ணார்—கருதார் (எ—று)

இப்பாடலில் மயன்மறுப்பாராந்த மலவாக்கு எனவும் பாடமுண்டு அமலவாக்கினை மனமயக்கத்தில் மறுத்தலைப் புரிவர். இயலின் பொருளை முறையால் எண்ணுதலைச் செய்யார் எனப் பொருள் கோடல் ஏற்புடைத்தாம். அமல வாக்கினை யோர்ந்து உளத்தின் மயலினால் மறுதலைச் செய்யார்எண்ணார் எனப் பொருள் கொள்க. ஆகவே இறையருள் ஞானமிலார், இச்செயல் புரிவர் என்பதாம்.

துயக்கமவர்க் குத்துடைக்கை யாலிந்த நூற்பேர்
மயக்கத்தை மாற்று மருந்து. (28)

(இ ள்) துயக்கம் அவர்க்கு துடைக்கையால் — மனத் தளர்ச்சியினை அவர்க்கு அறவே போக்கலால், இந்த நூல்

பேர்—இந்த நூலினுடைய பெயரானது, மயக்கத்தை மாற்றும் மருந்து—மன மயக்கத்தையறவே போக்கித் தெளிவினை யுண்டாக்கும் அவுடதமாம். (எ-று)

துயக்கம்—தளர்வு, துடைக்கை—ஒழித்தல், மாற்றும் —நீக்கும், மயக்கம்—திரிபுணர்ச்.

**அரிக்குமறன் மண்ணினைத்தோ ருய்ந்தா ரியலைப்
பிரிப்பரிந்த நூலின் பிழை. (29)**

(இ-ள்) அரிக்கும் அறல் மண்ணினை — ஆற்றின் கண் அரித்துக்கொண்டோடும் கருமண்ணினை, தோறு ஆய்ந்தார் இயலை—இடைவிடாது ஆராய்ந்தவர் தன்மையினை. இந்த நூலின் பிழை பிரிப்பர் — இந்த நூலின்கண் தவறுகளைப் பிரித்துக்காண்பர். ஒப்பாவர் என்பதாம்.

'' மணற்சோற்றில் கல்லாய் வதனை யொக்கும்''

என்பது உலகர் பழமொழி.

**மொழியின் பொருள்கொள்க முக்கியத்தி னாலும்
ஒழிவில் கவுணத் தினும். (30)**

(வடமொழியில் கவுணம் முக்கியம் என விருவகையுண்டு கவுணத்தினை அமுக்கியம் என வழங்குவதில்லை)

(இ-ள்) மொழியின் பொருள் — சொற்களுக்குற்ற பொருளை, முக்கியத்தினாலும்—முக்கியத்தினாலும்,ஒழிவில்— நீங்காத, கவுணத்தினும்—கவுணத்தினாலும், கொள்க — கொள்ளக் கடவர். (எ-று)

ஒரு சொற்குப் பொருள்கொள்ளும் வகை இப்பெற்றித் தென இயம்பப் பெறுகின்றது. வடமொழியின் கண் வழங்கப் பெறுநிலை கொண்டு இக்குறட்பா வியற்றப்பட்டது.

இலக்கணையா னுணு மெனுக விரியும்
இலக்கணைதான் மூன்ருகி யே. (31)

(இ-ள்) இலக்கணையினுனும் — வடமொழியின் கண் (இலட்சணு விருத்தி யென்பதனை இலக்கணையென்பர்) இலக்கணை யென்றுங் குறிப்பினுலும் இலக்கணை தான் மூன்று ஆகிவிரியும் — இலக்கணை யென்னுஞ் சொற்ருன் மூவகைப்பட்டு விரிந்து நிற்கும். இலக்கணை ஒரு பொருளை நேரேயுணர்த்தும் பதம் அப்பொருளை யுணர்தாது அதனேடியைபுடைய பிறிதொன்றனை யுணர்த்துவது. அஃது ஆதாரம், காரணம் காரியம் என மூன்ருகும். இதனேடு சமீபம் உபகாரம் தர்மாரு கிருஷி எனும் மூன்றினையும் கூட்டி யறுவகைப்படுப்பதுமுண்டு. இலக்கணை வாச்சியம் வியங்கியம். என்பனவற்ருலும் பொருளையாராய்தல் கூடும். (விட்ட இலக்கணை, விடாதவிலக்கணை, விட்டும் விடாத விலக்கணை)

விட்டதும் விட்டுவிடா தவ்வும் விடாதவ்வும்
ஒட்டவொரு மூன்ரு வுறும். (32)

(இ-ள்) விட்டதும் — விட்டவிலக்கணையும், விட்டு விடாதவ்வும்—விட்டும் விடாத விலக்கணையும், விடாதவ்வும் —விடாதவிலக்கணையும், ஒட்ட-ஒருசேர, ஒரு மூன்று ஆ (க) உறும் — ஒரு மூவகைப்படும், விடாதவ்வும் — விடாதவும் எனற்பாலது விடாதவ்வும் என விரித்தல் விகாரம் உற்றது.

வெண்மைசிவப் பென்று விளம்பில் நிறந்தன்னை
யெண்ணுதலே முக்கியமென் றெண். (33)

(இ-ள்) நிறந்தன்னை—நிறத்தினை, வெண்மை சிவப்பு என்று — வெளுப்புத் தன்மையினை வெண்மையெனவும், சிவப்புத்தன்மையினைச் சிவப்பு நிறம் என்றும், விளம்பில்— கூறுங்கால், எண்ணுதலே — ஆராய்ந்து கோடலே, முக்கியம் முக்கியமாம், என்று—என்று கருதி, எண்—என்ணுவாயாக

வெண்மைசிவப்பென்றுவிளம்பிலவற் றின்குணியை
யெண்ணுவது தான்கவுண மே. (34)

(இ-ள்) வெண்மை — வெண்மை நிறத்தினை, சிவப்பு என்று—செவப்பு நிறமென்று, விளம்பில்—கூறினால், அவற்றின் குணியை — அந்நிறம் உடைய பொருளாகிய குணப் பொருளை (குணமுடைய குணியை) எண்ணுமிதுதான் — கருதுவதானதுவே, கவுணம் ஏ — முக்கிய மல்லாததுவாம் ஏ—அசைநிலை.

அகத்திய னென்ப ரறிவுடை யானைச்
சகத்தினியோர் விட்டதிது தான். (35)

(இ-ள்) அறிவுடையானை சகத்தினியோர்-அறிவுடைப் பெருமகனை உலகப் பெருமக்களாவார், அகத்தியன் என்பர் —தவச்சிரேட்டனாகிய அகத்தியமாமுனிவரர் என்று வியந்து கூறுவர், இதுதான்—இங்ஙனங் கூறுவதானது, விட்டது—விட்டதுவாகிய இலக்கணமாம் (விட்ட விலக்கணையாம்)

கங்கையிருப் பென்றாற் கரையிருப்பென் றேகாண்பர்
அங்கதுவே விட்டுவிடா தாம். (36)

(இ-ள்) கங்கையிருப்பு என்றால் — கங்கை இருப்பு என்று ஏ. காண்பர் — கங்கையினுடைய கரைகண்ணது வாகிய இருக்கை யென்பயே கண்டுகொள்வர். அங்கு அதுவே -அல்லன கொள்ளுமதுவே விட்டுவிடாது ஆம்-விட்டுவிடாத இலக்கணையாம்.

கரியனிவ னென்கைவிடா லக்கணைகா ணின்னும்
விரியும் விடாத விதம் (37)

(இ-ள்) கரியன் இவன் என்கை—கருமையான வண்ண முடையான் இவன் என்று கூறலானது, விடா(த) இலக்கணை

காண் — விடாத இலக்கணையென்னும் இலக்கணமாகும் (காண்—முன்னிலையசைநிலை) இன்னும் மேலும், விடாத விதம்–விடாத இலக்கணையின் வகைகளை, விரியும்—கூறத் தொடங்கினால் விரிவடையும். (எ-று)

கரியன் — கருமையாகிய நிறமுடையவன் கண்ணன் என்றுமாம்.

குறிப்பிற் பொருள்கோளுங் கொள்கநன் றென்றால்
வெறுத்தா னறிதென்றே விளங்கு. (38)

(இ-ள்) குறிப்பின்—குறிப்பினால், பொருள்கோளும் கொள்க—பாட்டின் பொருள் கோடலையும் கொள்வாராக, நன்று என்றால் — நல்லது என்று கூறினால், வெறுத்தால் நறிது என்று ஏ விளங்கு — வெறுத்தால் நல்லது என்று விளங்குவாயாக. (எ-று)

பொருள்கோள் எண் வகைப்படும் :— அவையாவன, 1. யாற்றுநீர்ப் பொருள் கோளும், 2. மொழிமாற்றுப் பொருள் கோளும், 3. அடிமறி மாற்றுப்பொருள் கோளும் 4. விற்பூட்டுப் பொருள் கோளும், 5. நிரனிறைப் பொருள் கோளும், 6. அளைமறி பாப்புப் பொருள் கோளும், 7. தாப்பிசைப் பொருள் கோளும், 8. கொண்டு கூட்டுப் பொருள் கோளும் ஆக எட்டாம்.

ஒருநான் குபமான முண்டவற்றி னெல்லா
மொருபுடைகொண் முற்றெழிமா றோர்ந்து (39)

(இ-ள்) உபமானம் ஒரு நான்கு உண்டு — உவமானம் என்று கூறப்படும் அணியின்றன்மை ஒரு நான்கு வகையுள்ளதாம், அவற்றின் எல்லாம் — அவைகள் அனைத்தின் கண், ஒருபுடைகோள்—ஒருபகுதி மாத்திரம் கொள்க (வினை பயன் மெய் உரு என்ற நான்கனுள்)

முற்று ஒழிமாறு ஓர்ந்து—முழுதும் வேறுமாறு உணர்ந்து. (மற்றைப்பகுதியாகியன விலகுதலை நன்குணர்ந்து கோடல் வேண்டும் என்பதாம்) ((எ-று)

ஒரு பொருளைக் கூறுமிடத்துக் காண்டல் அளவையும் அநுமான வளவையும். உபமானவளவையும், ஆயவற்றினைக் கொண்டு துணிதல் பண்டையோர்து மரபு (நூல் வழக்காறுமாம்)

கொண்டல்போ லுங்கரத்தா னென்றுற்
கொடையெனுவர்
கொண்டலுருக் கையிற் கொளார். (40)

(இ-ள்) (ஒரு கொடையாளியை நோக்கி) கொண்டல் போலும் கரத்தான் என்றால்—மேகம் போலும் கைகளை யுடையவன் என்றுரைத்தால் கொடை எண்ணுவர்—அவன் கைம்மாறு கருதாதே வழங்குதலையே கருதுவர். கொண்டல் உரு—நீருண்ட கரியமேகத்தின் வண்ணத்தினை, கையால் கொள்ளார்—கையினிடத்துக் கொள்ளமாட்டார் அதுபோல இதுவினையினைக் கருதிற்றும். கொண்டல்—மேகம். எனுவர் (எண்ணுவர்) இடைக்குறை

பான்மொழியென் றுலினிமை பார்ப்பதலாற்
சொல்லினுக்குப்
பானிறந்தித் திப்புமிலை பார். (41)

(இ-ள்) பால் மொழி என்றால் — பால்போலும் சொல் என்று கூறினால், இனிமை பார்ப்பது அல்லால் — இனிமைத் தன்மையினை யாராய்வது அல்லாமல், சொல்லினுக்கு— மொழிக்கு, பால்நிறம் தித்திப்பும் இல்லை — பால்போலும் வெள்ளை நிறமும் பாலினுடைய இனிப்பும் கிடையாது யார் இதனை நன்கு ஆராய்வாக (எ—று)
பயன் கருதிற்று இதுவாம்,

அவாப்போலு மல்கு லெனினகலங் கொள்வர்
அவாப்போ லறிவோ வது (42)

(இ-ள்) அவா போலும் அல்குல் எனின் — ஆசை போலும் நிதம்பம் என்றால் ஒருவர், அகலம் கொள்வர்— அதனுடைய விரிந்த பகுதியினைக் கொள்வார், அது-அவ்வல் குலானது அவா போல் அறிவு ஓ-ஆசைபோல அறிவாகுமா இல்லை.

வெயிலனைய மெய்யென்னில் கொள்வர் விளக்கம்
வெயில்வெப்பங் கொள்வரோ மெய்க்கு. (43)

(இ-ள்) மெய் வெயில் அனைய என்னில்-மெய்யானது வெயில் போல என்றுரைத்தால், (ஒருவர்) விளக்கம் கொள்வர் — பிரகாசம் போன்றது என்றே கருதுவார். மெய்க்கு—உடலினுக்கு, வெயில் வெப்பம் கொள்வர் ஓ— சூரியனுடைய வெயிலின் சூட்டினைக் கொள்வரோ கொள்ள மாட்டார். இஃது உருப்பற்றியதாம் (எ-று)

பிரதாபம் விளக்கத்திற்கு எனக்கோடல் வேண்டும். சூரியனைப் பிரதாபத்தினுக்குக கோடல் வழக்காறும்.

இதுகாறும் நான்கு குறட்பாக்களால் உபமானம் பற்றிக் கூறப்பட்டது.

எண்ணு மெழுத்து மெணிமுனதன் பின்றையால்
எண்ணுகமெய் மேலாகு மே. (44)

(இ-ள்) எண்ணும் எழுத்தும் எண்ணி முன்—எண்ணை யும் எழுத்தையும் முன்னர் ஆராய்ந்து, அதன்பின் முறை யால் எண்ணுக — அதன் பின்னர் வரிசையால் ஆய்க (அங்ஙனம் ஆராயப்புகின்) மெய்மேல் ஆகும் ஏ — மெய் யெழுத்தின் மேல் உண்டாம் (எ-று) ஏ. அசைநிலை.

" எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு "

என்னும் குறட்பாவினையும்

" எண்ணு மெழுத்தும் கண்ணெனத் தகும் "

என்னும் ஔவை வாக்கியமும் நோக்குதல் வேண்டும்.

எண்ணெழுத்தென் ணுனுமெய் யெண்ணினே
னென்கையுருக்
கண்ணிலன்கை தொட்டறிகை காண் (45)

(இ-ள்) எண் எழுத்து எண்ணுனும்—எண்ணை யெண்ணுலும் எழுத்தை எண்ணுலும், மெய் எண்ணினேன்—மெய்யை எண்ணினேன் (கருதினேன்) என்கை—என்றுகூறுகையானது, உரு—வடிவினை, கண்ணிலன்—கண்ணில்லாதவனுகிய குருடன் கைதொட்டு—கையினைப்பரிசித்து, அறிகை—அறிதலை, காண்—ஆய்வரயாக. (எ—று)

குருடனுக்கு, உரு கண்ணிற்காண்டல் கூடாது உணர்ச்சிவயத்தான் கைதொட்டறிதல் கண்கூடு.

எண்காண்டலாதி யெழுத்தெழுத்து முன்னிவையுட்
கண்ணுயிருக் கென்றே கருது. (46)

(இ-ள்) எண் காண்டல்—எண்ணினை யாய்தல், ஆதி எழுத்து—முதலெழுத்தும், எழுத்து—சார்பெழுத்தும், முன் இவையுள்—முன்னர்த்தாக இவற்றினுள், உயிருக்கு—ஆன்மவர்க்கங்கட்கு, கண் என்று ஏ கருது—கண்ணுகிய சிறந்த உறுப்பு என்று எண்ணுவாயாக. எ—று.
காண்டல்—காணுதல் (ஆய்தல்)

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"
என்ற வாக்கியத்தை நோக்கிற்று இக்குறள்

அநாதிமல முத்தன் சிவனவனு தாரம்
மநாதீதன் வாக்கா கமம். 47

(இ-ள்) அநாதி மலம் முத்தன்—இயல்பாகவே பாசங்களினின்றும் விடுபட்டவனும், மனமஅதீதன் — மனமாகிய பொறியினைக் கடந்தவனும் ஆகியவன், சிவன்-சிவன் எனும் திருப்பெயர் உடையவனும், அவன் ஆதாரம்-அவனே உலகப் பற்றுக்கோடாவன், அவன் வாக்கு — அப்பெருமான்றன் திருவாக்கே. ஆகமம்—மூலாகமமும், உபாகமும் ஆகிய இவ்விரண்டும் இவ்விரண்டு இருபத்தெட்டாகமங்களாம் (எ-று)

ஆகமங்கள் ஈசானாதி ஐம் முகங்களின்றும் திருவாய் மலர்ந்தருளப்பட்டவையாம்.

சீரார் சிவாகமத்தி னையந் திரிபறவே
யோராதார் தாம்பலரீண் டுண்டு. (48)

(இ-ள்) சீர் ஆர் சிவாகமத்தின்—சிறப்புப் பொருந்திய சிவாகமங்களுடைய பொருளினை, ஐயம் திரிபு அற ஏ–சந்தேகமும், விபரீதமும் இல்லாதவாறு, ஓராதார் தாம்—உணராதவர்கள், ஈண்டு பலர் உண்டு—இவ்வுலகின் கண் பலராவர். (எ-று)

சமயம் விசேடம் நிருவாணம் ஆதி தீட்சைகளைப் பெற்று சரியையாதி தொண்டுகளைப் புரிந்து பஞ்சாக்கர செபம் இடையீடின்றிப்பண்ணி சிவஞானம் கைவரப் பெற்று ஆசாரிய அபிடேகமாகிய (சம்ஸ்காரம) சிறப்புப் பெற்றவர் சிவகாமங்களின் நுண்பொருளை யுள்ளவாறறிதல் கூடும் ஆகலின் இந்நெறிகைவரப் பெறுதவர் பலர் இவ்வுலகில் உண்டென்பார் ஆயினர்.

அயிக்கிய வாதியெழு வாயாவ ருள்ளத்
துயக்கஞ் சொலிமறுப்பாஞ் சூழ் (49)

(இ-ள்) அயிக்கிய வாதி எழுவாய் ஆவர்—ஒன்றுவது அயிக்கவாத சைவம் முதலாக எட்டாவது சைவர் (சங்கற்ப நிராகரணம்) அந்தமாக உளர். அவர் உள்ளம் துயக்கம் சொல்லி மறுப்பாம் — அவ்வவர் தம்ம சங்கற்பங்களாகின்ற துயக்கத்தினை (உறுதிப் பாடின்மையினை) கூறியுண்மையினை யெடுத்து மறுப்போம் (எ-று)

துயக்கம்-வேதனை, வருத்தமுமாம், சொலி-இடைக்குறை

முதலாவது அயிக்கவாதி சங்கற்பம் ஷை நிராகரணம். இரண்டாவது பாடாணவாதி சங்கற்பம் ஷை நிராகரணம் மூன்றுவது பேதவாதி சங்கற்பம் ஷை நிராகரணம். நான்காவது சிவசமவாதி சங்கற்பம் ஷை நிராகரணம். ஐந்தாவது சங்கிராந்தவாதி சங்கற்பம் ஷை நிராகரணம். ஆறுவது ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம் ஷை நிராகரணம். ஏழாவது நிமித்த காரண பரிணுமவாதி சங்கற்பம் ஷை சங்கற்ப நிராகரணம், எட்டாவது சைவர்சங்கற்பம் சைவர் சங்கற்ப நிராகரணம் இங்ஙனமாக இந்நூலிடை பதினாறு உட்பிரிவுகள் உள்ளன. இதன் பெற்றிமையை நூலினுட்காண்க,

(பாயிரவுரை முற்றிற்று)

கோவிலூர் ஆதீனம்
2171
023
கோவிலூர்-630 307

முதலாவது அயிக்கியவாத சைவசங்கற்பம்.

பதிபசு பாசம் எனவே பதார்த்த
விதிமூன் றிவைவிளம்பு வேம். (1)

(இ-ள்) பதி பசு பாசம் என-பதியும் பசுவும் பாசமும் என்று, பதார்த்தம்—பொருள்கள், விதம் மூன்று — வகை மூன்ருகும், இவை விளம்புவேம்-இவற்றினைப் பற்றிக் கூறு வோம் யாம். (எ-று)

என எண்ணிடைச்சொல், ஏ-அசைநிலை, விளம்புதல்—கூறுதல், விதம்-வகை, இவை—பன்மைச் சுட்டுப்பெயர்.

பாச மிலாதோன் பதி பசுக்கள் பாசமுளார்
பாச மிரண்டென்று பார். (2)

(இ-ள்) பாசம் இல்லாதோன் — பாசங்களாற் பந்தித்தல் இல்லாதன்யாவனே அவன். பதி — பதிப்பொருளாம் (அநாதி மல முத்தன் என்பதாம்). பசுக்கள் பாசம் உள்ளார் — அணுக்களாகிய (எண்ணிறந்தன) ஆன்மாக்கள் பாசங்களாற் பந்தித்தலையுள்ளவார்கள். (எஞ்ஞான்றும் மலசகிதராவர்) என்பதாம் பாசம் இரண்டு என்று பார் — ஆகவே பாசங்களானவை வலியுற்றிருப்பதும் வலியற்றிருப்பதும் என விரண்டு ஆம். இதனை ஆராய் வாயாக (எ-று)

பார்—முன்னிலையேவல் ஒருமை முற்று. பார்த்தல்—ஆராய்தல். பாசம் — பந்தித்திருப்பது. பதி — இறைவன், எல்லாவுயிர்களிடத்தும் கலந்து நிற்கும் பெரும் பெயர்க் கடவுளாம்.

ஒன்றுலகு தோன்று முபாதான மாயை மற்
றென்றுவினை யொன்றுள் ளுணர். (3)

(இ-ள்) உலகு ஒன்று தோன்றும் உபாதானம் மாயை —உலகமானது ஒன்று உண்டாகும் காரணம் (கருவி) மாயை யாகும். மற்று ஒன்று—வேறு ஒன்று, வினை என்று உள் உணர்—வினைகளாகும் என்று உள்ளே அறிவாயாக. (எ-று)

உள்—(உள்ளம்) மனம், மற்று—வேறு.

ஆக்கைவித மாயைதனி லாக்கியறம் பாவத்தால்
வீக்குமுயிர்க் காக்கையிலாது வேந்து. (4)

(இ-ள்) மாயைதனில் ஆக்கைவிதம் ஆக்கி — மாயையினிடத்து பேதங்களை (வகைகள்) யுண்டுபண்ணி. அறம் பாவத்தால்—புண்ணிய பாவங்களாகின்ற நல்வினை தீவினைகளால், ஆக்கை இல்லாத வேந்து-உடலில்லாத (கர்ம சரீரமில்லாத) இறை, உயிர்க்கு ஆக்கும்—ஆன்மாக்கட்கு அவ்வுடலங்களை யுண்டு பண்ணும். (எ-று)

வீக்கும்—கட்டும், ஆக்கை—(யாக்கை)சரீரங்கள். அறம் பாவம்—அறமும் பாவமும் (நல்வினையும் தீவினையும்) விதம் —வேறுபாட்டு வகைகள், இலா — ஈறுகெட்ட எதிர்மறை யெச்சம்.

பலம் பாசம் பாற்றல் பசுவுக் கிதனுல்
பலம் சிவனுக் இல்லையெனப் பார். (5)

(இ-ள்) பசுவுக்கு பாசம் பாற்றல் பலம் — சிவபெருமானுல் ஆன்மாகட்கு அனுதியே பிணித்து நின்ற பாசங்களின் வலியை நீக்கல் பலனுகும். இதனுல்—நீக்குவதனுல் சிவனுக்கு பலம் இல்லை எனப்பார் — சிவபெருமானுக்கு யாதொரு வகையான பிரதி பிரயோசனமும் இல்லையாகும் என்று (மாணவக நீ ஆராய்ந்து கொள்வாயாக) (எ-று)

குறிப்பு :— பலம்—ஊதியம், பசு—ஆன்மா, இல்லை—குறிப்பு வினைமுற்று, பார்—முன்னிலை ஏவல் வினைமுற்று. ஈண்டு வினைமுற்று விகுதி கெட்டு பார் என நின்றது. பார்த்தல்—ஆராய்தல்.

திளைக்கும் வினைப்பலத்தைத் தேகத்தால் ஆன்மா
விளைத்த வினைகள் விட. (6)

(இ-ள்) ஆன்மா—உயிர்கள், விளைத்த வினைகள் விட—உண்டாக்கின இருவினைகள் நம்மை விட்டு நீங்க, தேகத்தால்—எடுத்த உடலால், வினைப்பலத்தை—பண்டு செய்த இருவினைகளின் பயனாகிய இன்பத் துன்பத்தை விளைக்கும், திளைக்கும்—அனுபவியா நிற்கும். (எ-று)

குறிப்பு :— ஆன்மா-எழுவாய், திளைக்கும்—பயனிலை வினைப்பலத்தை — செயப்படு பொருள், விளைத்தல்—உண்டாக்கல், திளைத்தல் — நுகர்தல், வினைகள் — நல்வினை, தீவினைகள், வினைப்பலம் — இன்ப, துன்பங்கள், தேகம்—உடல்.

யானென் செருக்கா லெடுத்த வுடல் தோறு
மூனவினை பின்னு முறும். (7)

(இ-ள்) யான் என் செருக்கால் — யான் என்கின்ற செருக்கினால், எடுத்த உடல் தோறும்—வினையினால் எடுக்கப்பட்ட சரீரந்தோறும், ஊனம் வினை—பிறவிக்கேது வாக்கிய வினைகள், பின்னும் உறும்—மீண்டும் வந்தடையா நிற்கும். (எ-று)

குறிப்பு:— யானென் செருக்கு—அகங்கார, மமகாரங்களாகிய அகப்பற்றும் புறப்பற்றுமாம், செருக்கு-இறுமாப்பு ஊனம்—குற்றம் (இழுக்கு) உறும்—வந்தடையும்.

யானென் செருக்குக் கருவியுற ஏயுமுயிர்க்
கூனமலத் தாற்செருக்கா மோ. (8)

(இ-ள்) யான் என் செருக்கு கருவி உற — யான் என் கின்ற செருக்கு காரணமாக வந்தடைய, ஏயும் உயிர்க்கு — பொருந்திய ஆன்மாக்கட்கு, ஊனமலத்தால் — குற்றம் பொருந்திய பாசங்களினுல், செருக்கு ஆம் ஓ — செருக்கானது வந்தடைதல் உண்டாகுமோ உண்டாகாது என்றபடி. (எ-று)

குறிப்பு :— கருவி — காரணம், ஏயும் — இசையும் (பொருந்தும்) ஆகும் எனற்பாலது ஆம் என வந்தது. ஓ — ஓகாரம் எதிர்மறை.

செருக்கே உணர்வு திமிர மலத்திற்
குரைப்பார் உணர்விளைப்பா ரோது. (9)

பாடபேதம் :— விளையாரோது என்றலுமாம்.

(இ-ள்) திமிரம் மலத்திற்கு — இருளாகிய பாசத்திற்கு, செருக்குஏ உணர்வு உரைப்பார் — பற்றுகிய செருக்கினையே உணர்தற்கருவியாகிய அறிவு என்று உரைப்பார் (கூறுவார்) உணர்விளைபார் — அவ்வறிவின் நிலையை பார்ப்பாயாக, ஓது — இவற்றினை நன்கு தெளிந்து கூறுவாய், உணர்விளையார் ஓது என்னும் பாடத்திற்கு அறிவினையுடையார் உரைப்பார் என பொருள் கோடலுமாம்.

குறிப்பு :— திமிரம் — இருள், ஓது — முன்னிலையேவல் வினைமுற்று.

இளைத்தே நிரையத் திருநிலன் விண்போகந்
திளைத்தே பல்காலஞ் செல. (10)

(இ-ள்) இருநிலம் விண் நிரையத்து போகம் திளைத்தேம் — பெரிய நிலத்திடத்தும், சுவர்க்கத்திடத்தும், நரகத் திடத்தும் உண்டாகிய போகங்களை நுகர்ந்து அமிழ்ந்து

உறைந்தேம், பல்காலம் செல இளைத்து — பல காலங்கள் செல்ல இளைத்து இளைப்புற்று திளைத்தேம் என வினைமுடிவு காண்க என்றவாறு.

குறிப்பு :— நிரையம் — நரக உலகு தீவினையாகிய பாவத்தை செய்தவர் துன்பத்தை அநுபவிக்குமிடம். விண் சொர்க்க உலகு, நல்வினையாகிய புண்ணியத்தைச் செய்தவர் இன்பத்தை அநுபவிக்குமிடம். இருநிலம் — பூவுலகு. இரு வினை பயனாகிய இன்ப துன்பத்தை அநுபவித்தற்கும் இறத் தலும், பிறததலும், ஆகிய செயலைச் செய்தற்கும் உரிய இட மாகும் இதனை கரும உலகு என்பர். நரக உலகும், சொர்க்க உலகும் முறையே இன்ப துன்பத்தை அநுபவித்தற்கு மாத்தி ரம் உரிய இடம்; இதனை பாவ உலகு என்றும், புண்ணிய உலகு என்றும் கூறுவர். திளைத்து—நுகர்ந்து, இளைத்து— தேய்வுற்று, ஏகாரம் தேற்றமும் அசை நிலையுமாம்.

ஒத்தவினை கண்டே யுயிர்க்குயிராய் நின்ற சிவன்
சத்திபதிப் பன்கருணை சார்ந்து (11)

(இ-ள்) உயிர்க்குஉயிர்ஆய் நின்ற சிவன் — ஆன்மா விற்கு ஆன்மா ஆகி நிலைபெற்ற சிவனாகிய பரம்பொருளான வன், ஒத்த வினை கண்டு-இருவினை ஒத்தலாகிய தன்மையினை நோக்கி, கருணை சார்ந்து—அருள்வயமாய்ச் சார்ந்து, சத்தி பதிப்பன்—அருளாகிய சத்தியைப் பதித்திடுவன். (எ-று)

அஃதாவது ஆன்மாக்கள் ஈட்டிய இருவினை யொப்பு கண்ட வழி மலபரிபாக முறச்சத்தி நிபாத முறச்செய்குவன் என்ப தாம். இருவினை யொப்பாவது, நல்வினையிது தீவினையிது வென்ற போதமிழந்து சிவச்செயலாய் செய்யு நிலைமை வரு கின்ற போது நிகழ்வதாம். உயிர்க்குயிராய் நின்ற சிவன் ஆன்மநாயகன் என்பதாம்.

அப்போ தருவருத்திவ் வாக்கை யவல வினை
யெப்போது போமென் றிகழ்ந்து. (12)

(இ-ள்) அப்போது—அந்தச்சமயத்தில். இவ் ஆக்கை வினை —இந்தக் கருமத்தால் வந்தசரீரத்தின் வினைகளானவை அருவருத்து எப்போது போம் என்று இகழ்ந்து—அருவருப் புறச்செய்து எப்போழ்து நீங்குதலைப் புரியும் என்று இகழ்ந்து. (எ-று)

பரிந்த வரைச் சுற்றத்தைப் பாரிதனைப் பற்றி
இருந்தபதி தன்னையும் விட்டே. (13)

(இ-ள்) பரிந்தவரை — விரும்பியடைந்தவரை, சுற் றத்தை— தன்னைச்சூழ்ந்திருப்பவராகிய உறவு முறையினரை பாரிதனை—மனைவியை, பற்றி இருந்த பதிதன்னை — விருப் புற்று உறைந்திருந்த பதியாகிய ஊரினையும், விட்டு — ஏ— அறவே அவ்வப் பொருள்களிடத்துமுள்ள பற்றினையும் ஆசையினையும் ஒழித்து. (எ-று) ஏ—அசைநிலை.

பாம்பின்வாய்த் தேரையெனப் பஞ்சேந்திரி
யத்தழுங்கித்
தேம்பியயற் றேசத்திற் சென்று. (14)

(இ-ள்) பாம்பின் வாய் தேரையென — பாம்பின் வாய்ச்சிக் குண்ட தவளையானது பலபல பிதற்றுமாப் போல, பஞ்ச இந்திரியத்து அழுங்கி — ஐம்புலவயப்பட்டு வருந்தி, தேம்பி—தேம்புதலைச் செய்து, அயல் தேசத்தில் சென்று— அந்நிய நாட்டிற் பெருங்கவலையுடன் சென்று. (எ-று)

" ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளத்தோர்கொடுமை
வைத்துக்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலப்பல நினைக்கின்றேனே
ஓம்பிநீ யுய்யக் கொள்ளாய் ஒற்றியூருடைய கோவே "

என்னும் அப்பர் திருநேரிசையும் நோக்கற்பாற்றும்.

பிறவிப் பிணிதணிக்கும் பேரருளாளன்
உறையும் பதிகேட் டுணர்ந்து. (15)

(இ-ள்) பிறவி பிணிதணிக்கும் — பிறவியென்னும் பெருநோயினைப்போக்கும், பேர் அருண் ஆளன் — பெருங் கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான், உறையும்—எழுந் தருளியிருக்கும், பதிகேட்டு உணர்ந்து — உலகினை நன்கு கேட்டல் செய்து அறிந்து. (எ-று)

குற்றமறுத் தாரைக் குழகணடியிற் கூட்டக்
கற்றவனைத் தேசிகனைக் கண்டு. (16)

(இ-ள்) குற்றம் அறுத்தாரை—பிறவிப்பெரும் பிணி யாகிய குற்றங்களை யறுத்தவரை (நீக்கினவரை), குழகன் அடியில் கூட்ட கற்றவனை—என்று மிளையோனாகிய பரமேசு வரன் திருவடியின்கண் சேருமாறு நன்கு பழக்கம் செய்துள்ள ஞானாசிரியரைக் கண்டு—நன்கு தெளிந்து. (எ-று)

குற்ற மறுத்தாராகிய தேசிகனையென வினைமுடி செய்க. குற்ற — பிறவிப் பெருந்துயர், அல்லது ஆன்மாவினைப் பிணித்துள்ள பாசங்களாகிய குற்றமெனினும் ஆம். தேசி கனே இறைவன், இறைவனே தேசிகன் எனத் தெளிதல் வேண்டும்.

"பையிராவணிந்த வேணிப் பகவனே யனைய தங்கள்
ஐயனும் வியாழப் புத்தேள் ஆயிடையடைந்தானாகச்
செய்யதாள் வழிபாடின்றித் தேவர்கோன் இருந்தான அந்தோ
தையலார் மயலிற்பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ"

என்பது பரஞ்சோதி திருவிளையாடற் புராணம். குருவினுக் கும் இறைவனுக்கும் வேறுபாடின்மை விளக்கிற்றும்.

வலஞ்செய்து தெண்டனென மண்ணிற் பணிந்தே
யலந்தேக வாழ்வென் றமுது. (17)

வலம்செய்து—பிரதட்சிணம் புரிந்து, தெண்டன் என வணக்கமென்று, மண்ணில் பணிந்து—பூமியில் விழ்ந்து

வணங்கி, அலந்து ஏக—வருந்திச் செல்லும்படியான, வாழ்வு என்று—வாழ்க்கை நிலைமை யென்று அழுது—அழுதலைச் செய்து. (எ—று)

அஃதாவது பூமியில் வீழ்ந்து வணங்கி அடியேன் தெண்டமென்று கூறி வாடி மயங்கும் வாழ்க்கை எத்தன்மைத்து என்று அழுது என்பதாம்.

குறிப்பு: அலந்து—சுழன்று மயங்கி, அழுது—யாது செய்வேன் என்று ஓலமிட்டு கதறி, ஏ—அசைநிலை.

நையு மவனொருமை நாடிக்குர வன்னயந்து
உய்யச் செய் வோமென் றுரைத்து (18)

(இ-ள்) நையும் அவன்—வருந்தி பக்குவமுற்ற அவனுடைய, ஒருமை நாடி—ஒன்றுந்தன்மையை ஆய்ந்து (ஏகோபித்த நிலைமையை ஆராய்ந்து) குரவன்—ஆசிரியனானவன், நயந்து—விரும்பி, உய்ய—உன்னை பிறவிப் பெரும்பிணியினின்று நீங்கிக் கடைத்தேறுமாறு, செய்வோம் என்று உரைத்து—புரிகுவம் என்று சொல்லி (எ—று)

குறிப்பு: நைதல்—வருந்துதல், நாடி-ஆராய்ந்து, நயத்தல்—விரும்பல், உய்தல்—பிழைத்தல், குரவன்—தேசிகன்.

தீக்கை புரியவினை தீரும் வினைதிர
வாக்கையறு மான்சிவத் தாம் (19)

(இ-ள்) (ஆசிரியன் ஆனவன்) தீக்கைபுரிய—பக்குவமுற்ற மாணவனுக்கு சமயமாதி தீட்சைகளை பண்ணுவிக்க, வினைதிரும்—ஆன்மாவினை அனாதியே பற்றிநின்ற நல்வினை தீவினைகள் ஒழிந்துபோக, ஆக்கையறும்—உடலானது தூய்மைஉறும், ஆவிசிவத்துஆம்—வினைநீங்கிய உயிரானது சிவமாம் தன்மைப் பெருவாழ்வை உடைத்தாகும் (எறு)

5

குறிப்பு: தீட்சையாவன சமயம், விசேடம், நிருவாணம் ஆச்சாரிய அபிஷேகம் என்பனவாம், தீட்சை என்பதற்குப் பொருள் (பாவத்தை) இருளை ஒழித்து ஞானத்தை உண்டாக்குவது என்பதாம், வினைகளாவன பிராரர்த்தவினை, ஆகாமிய வினை, சஞ்சிதவினை என்பனவாம். இவ்வினைப் போகத்தால் தேகம் உண்டாகும். வினைநீங்கிடின் தேகம் ஒழியும். வினை நீங்கிய ஆன்மாக்களே சிவத்தையடையும் என்பதாம். ஆக்கை—சப்த தாதுக்களால் ஆகியது, சிவம்—முத்தி.

ஒன்ருமே நீர்நீரின் னுற்றுவினை யற்றுடலற்(று)
ஒன்ரு முயிர்சிவத்தை யுற்று (20)

(இ-ள்) நீர்நீரின் உற்று ஒன்றுஆம்—நீரும் நீரும் அடைந்து ஒன்ருதல்போல, வினைஅற்று—வினைகள் நீங்கப் பெற்று, உடல் அற்று-வினைப்போகமாகிய தேகமும் நீங்கப் பெற்று, உயிர்—ஆன்மாக்கள், சிவத்தை உற்று ஒன்று ஆம் —சிவத்தன்மை எய்தி ஒன்ருதலை அடையும் இரண்டற கலக்கும் என்பதாம். (எ—று)

குறிப்பு: ஏகாரம்—அசைநிலை, நீர்நீரின் என்ற விடத்து இன் உவமை பொருளில் வந்தது உயிர் சிவத்தை உற்று ஒன்ருதலாவது அத்துவிதமாதல்.

என்றியம்பு கின்றவயிக்கிய வாதத் தினையாம்
அன்றிமறுப் பாங்கேட் டறி (21)

(இ-ள்) என்றுஇயப்புகின்ற —மேற்கூறியபடி இவ்வாறும் என்று கூறுகின்ற, அயிக்கியவாதத்தினை—அயிக்கிய வாதி சைவ சங்கற்பத்தினை, யாம்அன்றிமறுப்பாம் — நாம் இங்ஙனம் சங்கற்பித்தல் பொருந்தாதென மறுத்தலைச் செய்வாம், கேட்டுஅறி—மாணவ நீ இதனை நன்கு கேட்டு அறிவாயாக (எ-று)

குறிப்பு: அயிக்கியம்—ஒன்றுதல், வாதம்—வாதித்தல் சங்கற்பம்—தோற்றுவித்தல், மறுத்தல்—நிராகரணம் செய்தல், அறி—முன்னிலை ஏவல்வினைமுற்று, கேட்டு—மனத்தை ஒருமுகப்படுத்திக் கேட்டலைச் செய்து, யாம்—தனித்தன்மை பன்மைப்பெயர்.

முதலாவது அயிக்கியவாதி சங்கற்பம் முற்றும்.

முதலாவது
அயிக்கியவாத சங்கற்ப நிராகரணம்.

இருண்மலந்தான் ஞவிக் கிலேயேற்றும் பின்பங்
கருவிகொடு காண்பதென்ஞே காண் 1

உயிர்க்குக் கருவி யொடுங்கும்போ துற்ற
மயக்கத்துக் கேதுமல மாசு 2

கருவி கலக்க மயக்கங் கழியும்
இருளொளிபோ லுங்கா ணிவை 3

அற்ருரே யானென்கை யாரியர்க்காட் பட்டாரிக்
குற்ரு மிருண்மலத்தின் கூறு 4

நெருக்கித் தமோகுணத்தி னின்ஞ ருயிர்க்குச்
செருக்கினே யாக்குதிமிர்த் தீங்கு 5

உண்டு மறப்பு முனக்கதனுக் கேதுவினேக்
கொண்டிலேயேன் மூலமலங் கொள் 6

வேண்டும் விழிவிளக்குண் டாய்விருத்த மாவியுடல்
வேண்டுதலா லுண்டுவிரோ தம் 7

இருளாற் றடைபடுவ தெங்கள் பெருமான்
பொருளோ விழியோ புகல் 8

பொருளேப் பொருவிழியிற் காணும் புலனே
இருட்டுக்கு மென்றேநீ யெண் 9

பொருளை யிருண்மறைக்கு மென்கை பொருந்தும்
பொருவிழிக்கே யாதுன் புகல் 10

கண்ணை மறையாது கருமுகிலா தித்தியனை
விண்ணின் மறைக்கு மிடைந்து 11

இரண்டுந் தடுக்கு மிருட்குணங்கண் ணள்ளேய்ந்
திரண்டுந் தடாதொளிநள் ளேய்ந்து 12

தடைபடுமோ க(ண்)சீன தர்ப்பணத்தி னுப்பண்
தடைபடுமே மண்ணினடுத் தான் 13

கொள்கையே கண்ணென்று கொள்வர் குறிப்பிலர்கண்
கொள்கைமட் டோவதற்குக் கொள் 14

திரியினள வோதிரியைப் பற்றியெரி தீபம்
விரியுமொளி யுங்கண் விழிக்கு 15

பருதிதனைக் கிட்டியே பார்க்கும் பகற்கண்
டுருவனைக்கிட் டும்மிரவிற் றெட்டு 16

அந்தத் துறுப்பதிதூ ளார்த்த தடையுங்கால்
அந்தப் பொருட் குத்தோன் றுது 17

சேர்ந்த வுருவந் திளைக்கும் பொழுதுவிழிக்
கூர்ந்தளக்கு முள்ளவுருக் கொண்டு 18

நீயுதவி யோசனைமே னிற்கும் பருதி
நீயுதமும் போமோகண் ணிகழ்த்து 19

கணத்தி னிமைமறைக்கத் தேசொடுங்குங் கண்ணுட்
கணப்பொழுதின் மீளுமெங்ஙன் காண் 20

கடத்நா லடக்கிய திபங் கனத்திற்
கடத்தையெடுக் கப்பரக்குங் காண். 21

நின்று திளக்குமே நேர்ந்தவிட யத்திற்முன்
சென்றுவிழித் தான்றிளக்குந் தேறு. 22

தூரத் தொலிவந்து தொக்கதோ சோத்திரம்போய்த்
தூரத்திற் கேட்டதோ சொல். 23

வானத் தொளிவிரைந்து மண்ணின் வருவதுபோல்
வானத் தொலியும் வரும். 24

எண்ணி னிருண்மன்மலமுண் டென்றியம்பும் போதிசைந்த
கண்ணினையுந் தேற்றினேங் காண். 25

இல்லார்க்கு மூலமல மேயாமா யாதனுவும்
உள்ளார்க் குடல்வினையு முண்டு. 26

முத்தர்க்கு மாக்கை முளைக்குமுயி ராசில்லாச்
சுத்தவறி வென்றே சொலின். 27

ஒன்றாகு நீர் நீரின் உற்றதுபோல் ஆவிசிவத்
தொன்றுஞ்சேர்ந் தென்றுமென் றே. 28

அநாதிமல முத்தன் சிவனவனுக் கொவ்வார்
அநாதிமல பெத்தர வலர். 29

ஒடுங்கு மொளியுடைய கண்கூ ரிருளுக்
கொடுங்கா மனத்தினுக்கொப் பே. 30

கண்ணு மனமுங் கலந்திரண்டற் றேநிலவும்
எண்ணுங்கா லொன்றல்ல வே. 31

இந்தமுறை போலவிரண் டற்றுயிர்தா னிற்குங்காண்
பந்தமறுக் கும்பதிபா தத்து. 32

சேருமுயி ரென்றாய் சிவனை வியாபகனைச்
சேருமா றெங்ஙன நீ செப்பு. 33

இருளடங்கும் போதுயிரு னீசனிணைத் தாளைத்
தெரிசிக்கைச் சேர்தலெனத் தேறு. 34

திருமள விற்றமிர மாவிதன்சிற் சத்திதனிற்
பேரின்பினைத் திளைக்கப் பேறு. 35

சூழ்வாரே யிந்தவியற் சுத்தசைவ சித்தாந்தம்
வாழ்வார் பேரின்ப மயத்து. 36

முதலாவது அயிக்கியவாதி சங்கற்பநிராகரணம் முற்றிற்று.

உ

இரண்டாவது பாடாணவாதி சங்கற்பம்.

பதியே யமலன் பசுக்கள் சமலர்
பதிபசுவார்க் கும்பாசம் மூன்று 1

இருண்மல மென்று வெழிண்மாயை யென்று
இருவினையென் றுமூன்று மெண் 2

நீக்க மலத்தை நிமலன் வினைக்கிசைந்த
வாக்கைப்பிணிப் பானனுக்கட் *கார்ந்து 3

வினைப்பலத்தை மேல்கீழ் நடுவு மிசைந்தே
யினைத்தென்றெண் ணுநாள்சென் றே 4

பரிபாக மாகமலஞ் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலு மிறை 5

ஆக்கைவெறுப் பப்பொழுதே ஆக வவனவலம்
போக்குமுபா யத்தைப் புரிந்து 9

பாசத்தைப் பாற்றும் பரமகுர வன்பதத்தின்
ஏசற்று விட்டிருந்த வில் 7

சிறந்தார்கள் சுற்றம் திருவென்ற மூன்றும்
துறந்தன் னியதேசந் தொட்டு 8

தேடியே தேசிகனைக் கண்டு சிரத்தவன்றாட்
சூடியே சொல்லித் துதி 9

(* சார்ந்து பா. பே.)

எய்த்தேனெய்த் தேனின்பத் துன்பத்துட லெடுத்துக்
கைத்தே யிருளுங் களை 10

என்றியம்ப வுள்ளத் திரங்கி யெழிற்குரவன்
நன்றென் றவனை நயந்து 11

பண்ணைச் சிவதீக்கை பற்றனைத்து மற்றேதும்
*எண்ணான் சிவத்தோ டிசைந்து 12

அறியப் படிற்சடமே யாகு மமலன்
அறியப் படானுயிரி னால் 13

விளங்கி னறிவு வினையதனுக் கேது
விளங்கா தறிவுவினை வீய்ந்து 14

இன்பத் துன்பத்தி னிளைப்பதே பெத்தமுத்தி
யின்பத்துன் பற்றிருப்ப தே 15

என்றியம்பும் பாடாண வா(தி) யிவன்மதமும்
அன்றிமறுப் பாங்கேட் டறி 16

இரண்டாவது
பாடாணவாதி சங்கற்ப முற்றும்.

(* எண்ணான் பா. பே.)

இரண்டாவது
பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்.

அறிவைத் தடுக்குமல மாணவமா சற்றால்
அறிவிலக்குங் காணுயிருக் கார்ந்து 1

விளங்காதே லாவிக் கறிவு விரையக்
களங்கந்தான் றீர்ந்தகலக் காண் 2

அநாதிமலம் போகா திருந்துமயர் வாக்காதேல்
ஆதிமிடற் றின்விடம்போ லெண் 3

புண்ணியபா வத்தின் *புசிப்பறுகை முத்தியெனிற்
புண்ணியமும் பாவமுமே போம் 4

மற்றைமல மெல்லாம் நிலவும் வரமில்லை
குற்றமே நின்முத்தி கொள் 5

கருவு மரமுங் கருவி கழிந்த
விருளும் பரமுத்தி யென் (யேன்) 6

அசித்தின்பத் துன்ப மவலத்தா மற்றால்
விசித்தின்பம் பெற்றிருக்கை வீடு 7

தீர்ந்தாற்கண் ணுனந் திளைக்குமுரு மூலமலந்
தீர்ந்தான் றிளைக்குஞ் சிவம் 8

(*புசிப்பவறுகை பா. பே.)

அருக்க னருள்புரிய வந்தன் விழிபெற்
றருக்கனைக்கண் டாற்போலப் பேறு 9

அட்ட குணனை யமலனைக்கண் டார்மலமற்
றட்டகுணத் தைப்பெறுவா ரங்கு 10

அநாதியே போதன் அனைத்து மறிவான்
அநாதிமல முத்தசத்தி யால் 11

ஒப்புயர்வில் லாத சுதந்தரனெல் லாவுயிர்க்குந்
தப்பா வியாபகனே தான் 12

நித்தியா னந்தன் பரிதிருத்தி நீங்காத
வத்தன் அலுத்தசத்தி யான் 13

அநந்தசத்தி மானென் றறிகுண மெட்டும்
இனதெனக்கில் லாவிமலற் கே 14

அட்டகுணம் பெற்றார் அவனுக்கொப் பன்றவன்
அட்டகுணத் துண்டுவிசிட் டம் 15

விட்டபொழு தூனம் விளங்குங் குணமூனம்
ஒட்டாக் குணத்தினுக்கொப் போ 16

அனைத்தறிவு நித்திய மநாதியே போதம்
அலுத்தசத்தி யார்திருத்தி யாங்கு 17

விசுத்தஞ் சுதந்தரம னந்தசத்தி வீறென்
றிசைத்தகுண மாதிமுத்தரக கெட்டு 18

இயற்றுதஞ் சத்தி யிலங்கியு முத்தர்
இயற்ருரற் றேகா ணியம் 19

முந்தியகர்த் தாச்சத்த ஞதிமுத்தன் மும்மலத்திற்
பிந்தியகர்த் தாவுடல்பெற் ருன் 20

முந்தினனும் பிந்தினனு மல்லனே யாதிமுத்தன்
இந்தநிலை முத்தியென வெண் 21

உத்தமன நாதிமுத்தன் ஆதிமுத்த ஞேதுங்கான்
மத்திமன்கான் பெத்தனத மன் 22

முத்திநிலை மூன்னு மொழிந்தோம் அதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு 23

ஆய்ந்தறிவா ரிந்தவியற் சித்தாந்த மாசனைத்தும்
காய்ந்தடைவா ரீசன் கழல் 24

இரண்டாவது
பாடாணவாதி சங்கற்ப நிராகரண முற்றும் 147.

மூன்றாவது
பேதவாதி சங்கற்பம்.

அநாதிமல முத்தன் பதிபசுக்கள் அம்மா
அநாதிமல பெத்தானந் தன்* 1

அநாதிமல மாயை யறமுங் கரிசும்
எனாதியைத்தீண் டாப்பாசி வை 2

போக்க மலத்தைப் புனிதன் வினைக்கியைந்த
வாக்கையுயிர்க் குப்பிணிப்ப னார்ந்து 3

நிலந்தன்னிற் றாழ்ந்த நிரையத் துயர்ந்த
தலந்தனினும் புக்குழன்று தான் 4

விரித்த வினையான் விளைந்தபல முண்டே
தெரிப்பரிய காலங்கட் சென்று 5

பரிபாக மாகமலஞ் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலு மிறை 6

பள்ளியிற்பாம் பென்னப் பயின்ற மனைவியையுந்
தள்ளியவ னப்பொழுதே தான் 7

அப்பதியை நீங்கி யடைந்தன் னியதேசம்
ஒப்பரிய தேசிகன்முன் னுற்று 8

அட்டாங்க பஞ்சாங்க மாக வடிபணிந்து(ப)
மட்டுமலர்த் தாடலைமேல் வைத்து 9

(* தர் பா. பே.)

கருவுங் கரிசும் களங்கமு நீக்கி
வரதனுரு வாக்கியெனை வை 10

என்றியம்பக் கேட்டே யெழிற்குரவன் றானிரங்கி
நன்றென் றவனை நயந்து 11

ஆய்ந்தாய்ந் தவன்றன் அகத்தினொருப் பாடுதனை
வாய்ந்தசெய லாலே மதித்து 12

சிவதீக்கை செய்யமலந் தீர்ந்துசிவன் றாட்சேர்ந்
தவனைப்போற் சுத்தனா வன் 13

பொற்குன் றடைந்துபொனாங் காகம் கருநிறம்போம்
அக்குன்றத் தொன்றியொன்றா காது 14

சிவனடிசேர்ந் தானுஞ் சிவனைப்போ லாவன்
அவனடியி னொன்றியொன்றா கான் 15

என்றியம்பும் பேத வாதி மதத்தினையும்
அன்றிமறுப் பாங்கேட் டறி 16

மூன்றாவது
பேதவாதி சங்கற்ப முற்றும் 163.

மூன்றாவது
பேதவாதி சங்கற்ப நிராகரணம்.

ஏகதே சம்போற்குன் றெங்கு நிறைந்துறையும்
ஏகனுக்கொப் பாமோ வியம்பு 1

வான்போல் அமலன் வளிபோ லுயிரெங்ஙன்
றான்பேத மாமாறு சாற்று 2

திரிவறவே யாகமமுந் தேர்ந்தசிவ ஞான
குரவனுக்காட் பட்டனைகொல் கூறு 3

யோகத்தி னுகு முருவங்கா ணின்முத்தி
யாகமுமற் றானேமுத் தன் 4

முத்திநிலை முன்னும் மொழிந்தோம் அதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு 5

எண்ணுவா ரிந்தவியற் சித்தாந்தத் தீர்த்திருளு(ம்)
மண்ணியார் ஈச னடிக்கு 6

பேதவாதி சங்கற்ப நிராகரண முற்றும் 169.

நான்கவது
சிவசமவாதி சங்கற்பம்.

அமலன் பதிபசுக்கள் ஆக்கையிற் பட்டார்
தமலமொரு மூன்ருென்று தான் 1

மலங்கரும மாயை மாயேயமே நான்கும்
விலங்குயிர்கட் கென்றே விளங்கு 2

ஒட்ட மலத்தை யுயிர்க்குக் கருவியுடல்
கூட்டுமிறை கன்மங் குறித்து 3

உண்டுணர வீசற் குயிர்க்குங் கருவியு
முண்டுணர வென்றே யுணர் 4

பாசத் தறிவாற் பசுவி னறிவுதனை
யீசனறிவி(ள) லக்கு மே 5

துய்த்தே வினைப்பலத்தைத் தேசங்க டோறும் போ
யெய்த்தேபல் காலஞ்சென் றே 6

பரிபாக மாகமலஞ் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலு மிறை 7

அப்பொழுதே யாக்கைவெறுப் பாகவவ னுக்க
வன்ருன்
ஒப்புடைய காதலியை யும் 8

விட்டு விரைந்து விதுர வயனுடு
கிட்டி நிலத்திற் கிடந்து 9

பித்தனெனக் மத்தனெனப் பேதையென்னப்
சுத்தனெனக் கண்டார் சொல [பேயென்னச் 10

நாணற்றுப் பூணுக நாட்டார் *நகையுணவின்
வேணதே தேனு மிசைந்து 11

ஆக்கைமுத னோய்நீக்கு மாரியன்றா னெங்குளனோ
தூக்கியலீர் கண்டீர்சொ லீர் 12

என்றென்று தேடு மிவனு தரவிவனுண்
ணின்ற சிவன் கண்டருள நேர்ந்து 13

சூரியனை யாரியனை யாவேசங் கொண்டிருக்கச்
சீரியன்றன் முன்னிவனுஞ் சேர்ந்து 14

கண்களிக்கக் கண்டு மனங்களிக்கக் கைதொழுது
பண்களிக்கப் பாடிப் பணிந்து 15

மாசுடல நீக்கி வரதா பொருவரிய
வீசனைப்போ லாக்கா யெனை 16

என்றியம்பக் கேட்டே யிரங்கி யெழிற்குரவன்
நன்றென் றவனை நயந்து 17

தீக்கைபுரி யத்திமிர மூலமலந் தீருமிரண் (டு)
டாக்கைவினை மாயையும்போம் அன்று 18

ஐந்து முகமும் அனைத்தறிவும் ஆரருளும்
ஐந்தொழிலும் பெற்றவன்போலாம் 19

(* தருமுணவின் பா. பே.)

மென்புழுத்தான் வேட்டுவனு வேட்டுவனைத்
தான்குறித்துள்
அன்பினுமிவ் வாறிறைக்கொப் பாம் 10

என்று சமவாதி யியம்பு மிவன்மதமும்
அன்றிமறுப் பாங் கேட்டறி 11

நான்காவது
சிவசமவாதி சங்கற்ப முற்றும் 190

நான்காவது
சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்.

ஆருயிர்க் குண்டேல் அறிவதனை யாணவமென்
கூரிருடான் மூடுமோ கூறு 1

உண்டே லுணர்வுயிருக் கோசையெழு வாய்க்கருவி
கொண்டறிவ தென்னெனக்குக் கூடு (கூறு 2

*அறிவுகரு விக்குளதேல் இந்தப்பலன் றன்னை
பிறியாத பேறும் பெறும் 3

(*அறிவுகரு விக்குளதே லந்தமலன் றன்னைப்
பிரியாத பேறும் பெறும்) ஏட்டின் சிதிலம்.

கருவிக் கறிவுளதேல் எண்கரண மாமற்
றொருவர்க் காராய்ந்தே யுரை 4

நிறையுடைய தேசிகன்சொன் னேர்மைப்
குறியாதார் கோளே நின் கோள் [பொருளைக் 5

சுத்த தனுவிற் றொழில்புரிவ தேபரம
முத்தியென்ற சொற்கீன முண்டு 6

உறுப்பெவையுங் காரியமென் றோர்ந்துநீ சொன்ன
உறுப்புமொடுங் குஞ்சடமென் றோர் 7

அபரமுத்தி யென்றே யறைவ ரிதனை
அபரவுபா தான மற லால் 8

மூலமல மற்று முழுதறிவுண் டாயதென்றால்
கோலவுடற் காரணமென் கூறு 9

ஆணவத்தை நீக்கவுறு மாக்கையுயிர்க் காக்கையறு
மாணவ மற்றாலென் றறி 10

ஐந்தொழிலுஞ் செய்யு மதுபரம முத்தியல
ஐந்தொழிலு முண்டனந்தே சர்க்கு 11

அவரபரமா முத்த ரல்லர்பர முத்தச்
சிவ வாக்கியத் தாலுந் தேறு 12

பரமுத்தி யென்றா அபரமுத்தி யென்றா
இருவிதங்காண் முத்தி யெனில் 13

பரமுத்தி மும்மலமும் பாற்றிப் பிரமப்
பிரமத்தின் வேற்று மைப் பெறும் (வேற்றுமைப்) 14

ஒப்பாகு மேற்குளிகைக் கூனமற்ற செம்பமலற்
கொப்பார் பரமுத்த ரும் 15

அபரமுத்தர் நாதாதி கேசத்த மாவார்
அவர் பரமமுத்த ரோ வன்று 16

எடுத்தார்கள் சுத்ததனு வெல்லா வறிவும்
படைப்பா தியுமுளர்தம் பால் 17

இத்தகைமை யாலே யிவர்களிறை யமலற்கு
ஒத்தவரென்னிற் பழுது முண்டு 18

உடலிலா வீச னுணர்வினுக் கொப்பாமோ
உடலுற் றுதிக்கு முணர்வும் 19

உயிர்க்குயிராய் நின்றமலன் ஓதிவன் உயிர்ச்செய்தி
உயிர்க் குயிராமோ சிற்றுயிர் 20

மென்புழுத்தான் வேட்டுவனு மெய்யன்
என்பதுசா ரூப்பியப்பேறே [பினுமிறையாம் 21

பெத்தத்தி னிகொண்ட முத்திக்குப் பேதமிலைச்
சத்தாதி யின்புறலாற் றூன் 22

சத்தாதி கீழ்மாயை தன்னிற் படைப்பென்னிற்
சுத்ததத்து வத்துமுண்டு சூழ் 23

சத்தாதி யைந்தினையுந் தாங்குஞ் செவிமுதலும்
அத்தனுவுக் குண்டென் றறி 24

பஞ்சேந் திரிய விடயங் களைப்பற்ற
வெஞ்சாம னுதியுமுண் டெண் 25

மனவெழுவா யுண்டாக மற்றெவையு முண்டு
நினதுமுத்தி பெத்தமென்று நேர் 26

சடமனைத்தையு நீங்கிச் சச்சிதா னந்தனடி
யடைந்தின் புணர்கைமுத்தி யாம் 27

முத்திநிலை முன்னு மொழிந்தோ அதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு 18

இளைப்பாரோ வாக்கையெடுத் திவ்வியற் சித்தாந்தத்
திளைப்பார் திளைப்பார் சிவம் 19

நான்காவது
சிவசமவாதி சங்கற்ப நிராகரண முற்றும் 219

(* பண்டெண் பா. பே.)

ஐந்தாவது
சங்கிராந்த வாதி சங்கற்பம்.

கட்டிலோ னென்றும் பதிபசுக்கள் கட்டுளார்
கட்டுமொரு நான்கென் று காண் 1

இருள்கரும மாயைமா யேயமெனவே
யொருநான்கு பாரனுயிர்க் குண்டு 2

இருண்மலத்தை நீக்க விறைவ னுயிர்க்குக்
கருவிகொடுப் பன்கருமங் கண்டு 3

விளக்கென்ன வாவி விளங்கு மதுதான்
கிளக்குமோ போகத் திறம் 4

ஆருயிரின் சன்னிதியி னுக்கைச் சடமியங்க
வோரும் பலங்கருவி யுற்று 5

விளைத்த வினைப்பலத்தை மேல்கீழ் நடுவுந்
திளைத்தே பலகாலஞ் சென்று 6

பரிபா கமலஞ் சத்தி பதிப்பன்
இருவினை யொத்தாலு மிறை 7

விரைய வுடல்வெறுப்புத் தோன்றவவ னப்போ
துரியமனை மற்றுமொழித் து. 8

போக்குவா னெங்குளன் போல்மலமும் புந்திசிவ
மாக்கியெனக் கென்றே யயர்ந்து 9

தேசிகனைத் தேடித் தெரிசித் தடிபணிந்து
*வாசமலர்த் தாடலைமேல் வைத்து 10

புன்புலா லாக்கை வினைமலமும் போக்கிப்
பொன்பா (ெ)வனைச் சிவத்தி னுக்கு 11

என்றியம்ப வுள்ளத் திரங்கி யெழிற்குரவன்
நன்றென் றவனை நயந்து 12

தீக்கை புரிந்துமலந் தீர்ந்து சிவகரணம்
மாக்கு மன மாகியவ னுக்கு 13

சித்தஞ் சிவத்தை திளைக்குமத னாலே
சுத்தக் கரணமெனச் சூழ் 14

தொல்லைவினை வாதனையி னும்பலத்தைத் துய்க்கு
இல்லைவினை சுத்தனுக்கென் றெண் [மனம் 15

ஊனுடலந் தானு மொடுங்க வுயிர்க்கமலன்
ஞான நிகழுமென நாடு 16

ஆடி யுருவி னுதிக்கு மருக்கனென
நீடுஞ் சிவஞான நேர் 17

சிவஞான மாவேசஞ் செய்ய வுயிருஞ்
சிவமா மெனவே தெளி 18

உப்பளத்திற் பட்ட வுலவையுமுப் பாமதுபோல்
அப்பொருளாம் ஆவியும்வே றற்று 19

(*வாசியிலாத்தாடலை பா. பே.)

என் றியம்புஞ் சங்கிராந்த வாதியிவன் மதமும்
அன் றி மறுப்பாங் கேட்டறி 10

ஐந்தாவது
சங்கிராந்தவாதி சங்கற்ப முற்றும்.

ஐந்தாவது
சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்.

தூண்டாத தீபமென வாவி துலங்குமெனிற்
றீண்டா ததனைத் திமிர் 1

சன்னிதியி னான்மாவி னாக்கைகா ணஞ்சரித்துத்
துன்னும் பலமென்கை தோல் 1

துன்னு மலத்தின் சுடரடங்குந் தோற்றவுடல்
சன்னிதியெவ் வாறுயிர்க்குச் சாற்று 3

அநாதிமல முத்தனுக்குச் சந்நிதியுண் டென்று
மநாதிமல பெத்தனுக்கெங் ஙன் 4

துஞ்சார்க்குச் சந்நிதிதான் உண்டென்று சொல்
துஞ்சுமவர்க் குண்டெங்கன் சொல் [லுமாந் 5

ஐயந் திரிவுமற வாகமமு மாராய்ந்த
துய்யனுக்காட் பட்டிலைகொல் சொல் 6

பாசப் பலம்பாசத் தாகா பசுவுக்கா
மீசனது சந்நிதியா லே 7

இந்திரியந் தானுணரி னெக்காலத் தும்முணரு
மைந்தினையு மில்லையிந்த வாறு 8

இருவரொரு காலத் திருசெவிவே றேதின்
இருசெவியுங் கேட்குமோ வீங்கு 9

ஒவ்வொன்று யொன்றி யுணருமுயி ரைந்தினையுங்
கவ்வ மனமனத்தைக் கண்டு 10

அந்தக் கரணங்கள் பற்றியவையறியி
னந்தவுயிர் வேறேவ வற்று 11

மனம்பொறி யெனத்த மதியாதே லான்மா
மனத்துதித்த லத்தமதி யாது 12

சன்னதியி னுன்மாவி னுக்கை சரிக்குமெனிற்
பின்னமுடற் செய்கைக்கென் பேசு 13

வெறுக்கப் பட்டான் கொடிய வேந்தனெதிர் வந்தால்
கறுத்துக் குவியாத கை 14

வெறுக்கப்பட்டான் கொடியவேந்தனெதிர் வந்தால்
கறுத்துத் தொழுவதென்னே காண் 15

இச்சை யுடலியக்கத் தேது வெனி லிருமல்
இச்சையற்றுந் தோன்றுமா றென் 16

அந்தக் கரணங்க ளாக்கையினுக் கேதுவெனில்
எந்தமா னத்தறிந்தா யீங்கு 17

காட்சியலா(லி) யாவருக்குங் காட்சிப் படாவிடயம்
மாட்சியநு மானத்த துமன்று 18

காட்சியநு மானத் தருத்தத்தி(லே)தம் தையும்
மாட்சியிது சொல்லானு மன்று 19

மானமுன் ருனு மதியாப் பொருள்கொள்கை
யூனமென வோர்ந்தே யொழி 20

தத்துவா தீதனெனச் சாற்றுமறையுஞ் சிவனைத்
தத்துவங் காணுமெங்ஙன் சாற்று 21

இந்திரியத் தத்தத்தை யெண்ணுமன மாதியெலாம்
இந்தவிதத் தொன்ரு மிறை 22

சித்தஞ் சிவத்தைத் திளக்குமெனச் செப்பியதும்
பித்தென்ருய்(னுய்) போமப் பிழை 23

எங்கும் நிறைந்திணையு மில்லா விறையமலன்
எங்ஙனுயிர்க் காவேர்சி யீங்கு 24

ஆவேசந் தானில்லா வெல்லையின மாதலின
லாவேசி யல்லனமலன் 25

ஏகதே சம்பருதி யெய்துமெழி லாடிதனில்
ஏகதே சன்சிவனன் றே 26

உப்பளத்திற் பட்ட வுலவையென வொன்றியுயிர்
அப்பொருளா மென்ற திரை(ற)ச யாது 27

சடங்கள் பரிணமித்துச் சார்ந்தசட மாகுஞ்
சடமலவான் மாச்சிவனுந் தான் 28

வளர்கை தளர்கை பரிணமம் மண்ணிற்
பிணமுனை யாதி பெறும் 29

உண்டோ வளர்ச்சி தளர்ச்சியுயிர்க் கொப்பிலிக்கு
மிண்டா நின் கொள்கை விடு 30

மனமாமோ விந்திரிய மன்னு மனத்துக்
கனனியமான் மாவமலத் தாங்கு 31

முத்திநிலை முன்னு மொழிந்தோ மதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு 32

அறிவாரே யவ்வியற்சித் தாந்தமா சற்றுச்
செறிவார் பரம சிவம் 33

ஐந்தாவது
சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரண முற்றும். 272

ஆறுவது
ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம்.

பசுமலமு மில்லாப் பதியொருவன் மூலப்
பசுமலமு முள்ளார் பலர் 1

இருள்கரும மாயைமா யேய மெனவே
யொருநான்கு பாசமென வோர் 2

இயங்கா னமல னியங்கான் சடத்தை
இயங்குமவன் முன்சடங்க ளேய்ந்து 3

துனைபலவாங் கும்பத்துட் சோதியென வான்மா
வொளிருமனத் திந்திரியத் தும் 4

சிவன்ஞா தாக்கத்தாப் போத்தாச் செடத்தமலன்
சிவனைப்போ லாமின் செயில் 5

செய்வித்தா ரும்பலத்தைச் சேர்வனத னலல்லன்
செய்விப்பான் ருனுஞ் சிவன் 6

இரவியெதிர் மண்ணோர் இயற்றுவ ரெல்லாம்
இரவிதான் செய்வித்ததன் றே 7

ஆக்கி வினையை யவன்முன் பலமருந்தி
யாக்கும் வினையினுமான் மா 8

விண்மண் ணிரயத்தும் துய்த்து வினைப்பலத்தை
யெண்ணரிய காலஞ்சென் றே 9

மலபாக மாக மனாதீதன் முன்னே
யலமாக்கை யென்றாசை யற்று 10

ஆக்கையு மாக்கு மருவினையு மாணவமும்
போக்கவலா னெங்குளனிப் போது 11

என்றவன்றா னாதரவுற் றேய்ந்த மனைவியையும்
கன்றவருங் கூற்றென்று கண்டு 12

துறந்தன் னியதேசந் தொட்டுக் குரவ
னுறைந்த பதியுங்கேட் டுணர்ந்து 13

அப்புரியை யெய்தி யருமறையு மாராய்ந்த
வொப்பரிய தேசிகன்முன் னுற்று 14

கடிமலர்தூய்க் கைதொழுது கண்ணீர் பொழியப்
படியிற் படியப் பணிந்து 15

நையு மவனொருமை நாடிக் குரவனயந்
துய்யச் செய்வோமென் றுரைத்து 16

புரியச் சிவதீக்கைப் புன்மலம்போம் போக
விருவினைபோம் மாயையும்போ மே 17

தேசிகன்செய் தீக்கையினாற் றீரமலமனைத்தும்
ஈசனடி ஞானம்பெற் றே 18

வெம்புவார் வெய்யிலினால் வேண்டுநிழற்
யெம்பெருமான் றாள்சேர்வனே [சேர்வதுபோல் 19

என்றே யவிகாரி வாதி யியம்புவது
மன்றிமறுப் பாங்கேட் டறி 20.

ஆறாவது
ஈசுவர அவிகாரவாதி சங்கற்ப முற்றும் 292.

ஆறாவது
ஈசுவர அவிகார சங்கற்ப நிராகரணம்

ஆக்குகையு மாக்குமறி வாருயிர்க்குண் டோவினையும்
ஆக்கையினை யாக்கவறி யாது 1

தானே தோன்றாது கடமித்தரணி தன்னிலற்
றானே தோன்றுதுசடந் தான் 2

ஆக்கையெழு வாயை யறிந்து வினையினையு
மாக்காதே யாக்குமம லன் 3

ஆக்கை விகாரத்தி னுதுங்கடஞ் சிவனு
மாக்கில் விகாரியெனி லன்று 4

சங்கற்பத் தாலே சமைப்பனத னலமலன்
அங்கு விகாரி யலன் 5

சமலரே செய்வித்துஞ் சார்வார் பலத்தை
யமலன்செய் வித்துமடை யான் 6

புந்தித் துணிவு புமானறியு மாருயிரென்
னெந்தை யெனும் மென்றேநீ யெண் 7

அவன்கணித மாராய்ந்தார் சொல்வர்க்கத்
அவனறி னென்கை வியப் பன்று [தெண்ணம் 8

உள்ளத்தி னுள்ளா னுணரு மவரவருட்
கள்ளமு மற்றனைத்துங் காண் 9

கள்ளரை யாழ்விப்பன் கடியநிரை யக்குழியுள்
வெள்ளரை வாழ்விப்பன்மேல் விண் 10

எற்றேவ லரா னியற்றல் பலமரைய
னற்றே செய்விக்குமம லன் 11

அறிவொளிரி னுவிக் கதற்குப் பொறியேன்
செறியா ததனைத் திமிர் 12

முன்னெடுபின் மாரும் மொழிநின் மொழிதினது
புன்மொழியை யிப்பொழுதே போடு 13

ஆதபத்தி னேந்தார் அணிநிழலைச் சேர்வாபோற்
சோதியைச்சேர் வாரென்கை தொல் (சொல்) 14

மனோதுக்க நீங்கியிட நீக்கியிட மாட்டார்
மனுதித னைச்சேர்வ ரோ 15

நீங்காதே யெங்கும் நிறைந்துறையும் நின்மலனைத்
தாங்கூடு மாறெங்ஙன் சாற்று 16

வான்றேடிக் கூடுவா ருண்டேல் வரதனடி(த்)
தான்றேடிக் கூடறகும் 17

தேடாதே தேடிச் சிவனைத் தனதுள்ளே
கூடாதே கூடுவதே கொள் 18

புந்திக்கு வேறு புமானன்றித் தானென்று
இந்த முறை யெண் ணுயிர்க் கீசற்கு 19

விண்டிடலு மூலமலம் வித்தகமா மாருயிர்தான்
கண்டிடு மெல்லாமென்று காண் 10

முத்திநிலை முன்னு மொழிந்தோ மதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு 11

ஓர்வாரே யிந்தவியல் சித்தாந்த மூனமெலாம்
தீர்வார் திளைப்பார் சிவம் 12

ஆறுவது

ஈசுவர அவிகாரவாதி சங்கற்ப நிராகரண முற்றும் 314.

ஆகச்செய்யுள் 314.

ஏழாவது
நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம்.

இருண்மலமு மில்லா னிறைவன் பசுக்கள்
இருண்மலமு முள்ளானென் றெண் 1

இருண்மல மாயை மாயேயந் திரோதங்
கருமமிவை யைந்துமலங் காண் 2

போக்க விருண்மலமும் புண்ணியத்து மாருயிர்கட்
காக்கையினை யார்க்கு மமலன் 3

அவன்வே றலன்பசுபா சத்து மதனால்
அவன்மயமெல் லாமென் றறி 4

அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
அறியப் படுவனவெல் லாம் 5

அவனிவ னானீ யென்னும் விகற்பம்
சிவஞானம் பேதமற்ற தே 6

அறிவணுவுக் கில்லை யமல னறிவாலே
யறியும் பலத்தையது வார்ந்து 7

அறிவணுவுக் கில்லை யமல னறிவாலே
இறையறிவுக் குண்டோ விருள் 8

தடுக்க வருள்வலியைத் தந்திடும்போ கத்தை
யெடுத்தவுட ரேறுந்துய்த் தே 9

எய்த்தேயெய்த் தேசெல்ல வாவிதா னெவ்விடத்தும்
இத்தனையெண் ணுநாள்சென் றே 10

பரிபாக மாகமலஞ் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலு மிறை 11

ஒழுகு மவ* நயவா பூனுவர்த்தப் போது
விழுமியமெய்ஞ் ஞானம் விழைந்து 12

தேசார் சிவஞானந் தேற்றிமலந் தீர்த்தருள்செய்
யாசா ரியன்பேரு ராய்ந்து 13

மாதரையும் விட்டவன்றான் மற்றையொரு
காதலுறத் தேசிகனைக் கண்டு [நாடுற்றிக் 14

விழிபொழிய வாய்குழற மெய்ம்முகிழ்ப்பக் கையாற்
றொழுதுவல முன்னுன சூழ்ந்து 15

பணிந்தே படியப் படியிற் சிரத்தின்
அணிந்தே யவன்றா ளலர் 16

வெறுத்தே னுடலம் விமலா! மலங்கள்
அறுத்தே யெனையமலத் தாக்கு 17

என்றியம்பக் கேட்டே யெழிற்குரவன் றானிரங்கி
நன்றென் றவனை நயந்து 18

திக்கையினைச் செய்யமலந் தீரும் பிராரத்த
வாக்கையறு மாவிசிவ மாம் 19

(* எற்பூண் உவர்ந்த பா. பே.)

என்றே நிமித்தபரி ணாம மியம்புவது
மன்றிமறுப் பாங்கேட் டறி 20

ஏழாவது
நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்ப முற்றும் 334

ஏழாவது
நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்ப நிராகரணம்.

அவனாலே யாக்கப் படுமண்ட பேதம்
அவனாமோ வன்னியமே யாம் 1

குலாலனாற் பண்ணப் படுங்குடமற் றெல்லாங்
குலாலனா மோ நீதான் கூறு 2

வானாகி வானினுண் மண்ணிருவாய் மாதேவன்
றானா முயிர்சடமுந் தான் 3

அவனெங்கு நீங்கான் அதனா லுலகும்
அவனென்னும் வேதா கமம் 4

விட்டும் விடாத விலக்கணையா லேவேதஞ்
சிட்டனுல கென்னுஞ் சிவன் 5

வாடியுடல் வாழ்க்கைக்கு மையலறுக் கைக்கவனேந்
தேடுமுயிர் தாவெனனே செப்பு

அனைத்துயிர்க ளும்மமலன் என்னும் விடாத
இலக்கணையாலே நூலெல் லாம் 7

விழிகுருடன் காணுன் விளக்குப் பெறினும்
ஒழிவினர் கண்ணோ டொளி 8

ஆதலினு லுண்டேற் றறியா வறிவுயிர்க்குப்
போதிப்பன் போக்கியரன் புன் 9

ஐந்தினையு மைந்தால் அறியுமணு வின்சத்தி
யோர்ந்தோந்தா யென்றே யுணர் 10

குன்று மொளிமலத்திற் குன்ரு வொளிதன்னே
டொன்றியொன்ரு மென்றறிசை வோ 11

கனவிருளுக் கொல்குங்கண் ணைல்காக் கருத்துக்
கனனியமொன் றன்றுயர்ச்சித் தாங்கு 12

முத்திநிலை முன்னு மொழிந்தோ மதுதனையும்
புத்திபணி நின்றுயக்கம் போக்கு 13

படித்துணர்ந்தா ரிந்தவியல் சித்தாந்தப் பாசம்
தடுத்துவிழிப் பாசமலன் ருள் 14

ஏழாவது
நிமித்தகாரண பரிணுமவாதி சங்கற்ப நிராகரணம்
முற்றிற்று.

ஆகக்குறள் வெண்பா 348.

எட்டாவது
சைவர் சங்கற்பம்.

பற்றென்று மில்லான் பதிபசுக்கள் பற்றுள்ளார்
பற்றுயிருக் கைந்தென்று பார் 1

இருள்கருமம் மாயைமா யேயந் திரோத
மொருநான்கு மொன்றுமல மோர் 2

அறிவுண் டணுக்கட் கவிருண்மே (லீட்டால்)
லறிவடங்கி நிற்குமென வாய் 3

கூட்டிக் கலையுங் குழக னிருள்சிறிதே
யோட்டவுல குண்ணுமுயி ருற்று 4

மண்ணகத்தும் விண்ணகத்து மாநிரயத்
எண்ணிய வாக்கையெடுத் தெய்த்து [தோமற்றும் 5

வினையின் பலத்தை மிசைந்தே மிசைந்தே
யெனையபல் காலஞ்சென் றே 6

பரிபாக மாகமலஞ் சத்தி பதிப்பன்
இருவினையொத் தாலு மிறை 7

ஆக்கையிற் சிற்றின்ப மரவின்வாய்த் தேரைவாய்
ஈச்சிறு தேனுண்டற் றென்று 8

எண்ணியவ னப்பொழுதே யில்ல மனைவிதனம்
மண்மோக மெல்லா மறந்து 9

மூலநோய் தீர்க்கு முனிவரன்றா னெங்குளனென்
றாலோப முற்றுற் றயர்ந்து 10

தேடுமவனொருமை சித்தத் திருந்த சிவன்
நாடியருள் செய்ய நயந்து 11

தேசிகனை யாவேசஞ் செய்து சிறந்திருக்கும்
வாசமலர் மண்டபத்தின் வந்து 12

ஆரணமு மாகமமு மாராய்ந் தறிவிக்குங்
காருணியன் றேசிகன்றாள் கண்டு 13

வலஞ்செய்து தெண்டதனை மானப் பணிந்தே
யலந்தே னடியேனை யா 14

அறுப்பையோ வாண்டருளி யாணவ மாதி
வெறுப்பையோ வென்னை விளம்பு 15

அருணிதியே யென்றென் றழுமவ னுள்ளத்
தொருமையினைத் தேசிகன்றா னோர்ந்து 16

சரண்பூண்ட கையைத் தடுத்தே யவனை
யிரங்கிக் கரத்தா லெடுத்து 17

ஆகமுறவே யணைத்துமோந் துச்சியினை
மோகமொழி யென்றே மொழிந்து 18

சாக்கிரா தீதச் சமாதிபுரிந் தாரருளா
னோக்கவறு மூலமல நோய் 19

யானெனதென் னுஞ் செருக்குமின்றி யந்தவுடல்
தானு மறச்சிவமாந் தான் 20

தற்காட் சியினறியத் தற்காட்சி தானுமின்றி
நிற்குநிலே முத்தி நிலத்து 21

என்றியம்புஞ் சைவர் மதத்தினையு மப்பொழுதே
யன்றிமறுப் பாங்கேட் டறி 22

எட்டாவது
சைவர் சங்கற்பம் முற்றிற்று. ஆகக்குறள் 370.

எட்டாவது
சைவர் சங்கற்ப நிராகரணம்.

உண்டா ருயிருக் கொளிரு முணர்விருளு
முண்டென்ற சொல்லிசையு மோ 1

ஆருயிருக் குண்டே லறிவதனுக் கேன்கருவி
கூரிருடான் மூடுமோ கூறு 2

சித்தாந்த மாராய்ந்த தேசிகன்ரு னுன்சிரத்திற்
கைத்தலத்தை வைத்திலனே காண் 3

சித்தன் றுயிர்திமிரத் தீண்டுதலா லேசிவத்தோ
டத்துவிதத் தாலசித்து மன்று 4

சிதசித்துச் சீவனெனச் செப்புவர் தேர்ந்தோர்
விதிமற் றனைத்தும் விழைந்து 5

தம்மைச் சிவனைத் தமோமலத்திற் ருங்காணர்
என்னிருடீர்ந் துங்காண் கிலர் 6

மாணுநோய் தீர்தலுந்தம் முள்ளுறையும்
காணுதே கண்டிருப்பர் காண் [வாய்மையினைக் 7

இலங்குமுயி ரின்சத்திக் கின்பமுந்தீர்ந் தாசு
களங்கமறுஞ் செம்பொளிபோற் காண் 8

முனைப்பின்றி யான்மாத்தான் சத்தியின்முற் றின்பந்
தினைத்திருக்கை முத்தியெனத் தேறு 9

ஆரும் பதிபசுபா சங்க ளறிவிஞெடும்
வேறென் றிரண்டை விடு 10

நான்காகி மூன்ருகி ஞானநாட் டத்திரண்டற்
ருூம்பேறே சைவசித்தாந் தம் 11

பரோக்காப ரோக்கச் சிவஞானத் தாற்பார்த்து
விருபாக்க னைப்பெறுகை வீடு 12

சிவனருளாற் றேசிகனுற் றேசுடை வாக்கால்
சிவஞானம் வாய்க்குமெனத் தேறு 13

பாசபசு ஞானம் பழித்துச் சிவஞானத்
தீசனைக்கண் டார்க்கிலங்கு மின்பு 14

பாசபசு ஞானப் பலங்க ளழிந்துவிடு
மீசன்ஞா னப்பலத்தி னிற்று 15

பாசபசு ஞானம் பவுத்தரெழு வாயருக்குண்
டீசனடி ஞானமெமக் கே 16

பவுத்த ரெழுவாயான் மாதிபயின் ருய்ந்தார்
சிவத்தையடை வார்சைவஞ் சேர்ந்து 17

ஒற்றைவரி மற்றை யுறுப்புப் பயின்ருரே
மற்றை வரியெழுது வார் 18

எச்சமயத் துற்று மிறையமல னேகனென
நிச்சயித்தார் மீளார் நிலத்து 19

கல்லெறிந்த சாக்கியனுட் கண்டருள்செய்
நல்லநக ரீசன்மூன் னுள் [தான்காஞ்சி 20

சீலத்தார் சேர்வர் சிவனடியை மற்றையுடற்
கோலத்தார்க் காம்பயனென் கூறு 21

வேர்மரத்துக் காதாரம் வேர்க்குமர மன்றமலன்
ஆருயிர்க்கா தாரமுயி ரன்று 22

என்றறிந்தீ சன்ரு ளிருக்கினடக் கிற்கிடக்கிற்
பொன்றும் பொழுதினே போற்று 23

ஆக்கைவிடுங் காலத்தி லாவியகத் தேநினைந்த
ஆக்கைபெறு மென்றே யறிந்து 24

சதாசிவமு மாதி தனைநினையிற் சாங்காற்
சதாசிவமு மாமாவி தான் 25

உயிர்க்குயிரை நோக்கி னுயிர்விடுங் காலத்
துயிர்க்குயிராய் மீளா துயிர் 26

தேசிக னுலே தெருள வுயிருள்ளே
யீச னிலங்கு மியல்பு 27

தேசிகனை யீசனெனச் சிந்தனைசெய் வார்திளைப்பார்
பாசமறுத் தேபேரின் பம் 28

எங்கு முளனமல னென்றிலிங்கத் தும்பணிவார்
சங்கைதடுப் பார்சிவத்தைச் சார்ந்து 29

ஈசனடி நேசரடி யெண்ணுவார் நண்ணுவார்
பாசமற மேலாம் பதம் 30

தேசிகர்க்குத் தீங்குசெயுந் *தீம்பரைவெல் [லல்லதுநீ
நாசமுறு சேர்வாய் நலம் 31

அந்தணரை.மாதவரைக் கொல்லாதே வெல்லல்லார்
சிந்தவுஞ்செய் நீசெறிவாய் தீங்கு 32

ஆக்கையினே யற்றே யறிந்துவிதி யந்தணனும்
ஆக்கை விடுகை யழகு 33

காசிவிசு வேசன் கழல்பணிந்தாங் காலத்தி
லுசந் தனையும் நவின்று 34

கங்கையுட் புட்காக்கை கனைக பிறர்கையி
னங்குன் னபலங்க ளாம் 35

வதிதெருளான் நோய்க்குமழிந் தாக்கையைத்தான் [வீய்த்தான்
புதையிருளி னுழ்வன் புகுந்து 36

ஆக்கையினை நோய்க்குமழிந் தந்தணன்று [னீங்கினன்
சிக்குழிக்கு மாவன் செறிந்து 37

---

* தேந்நரகி னல்லது நீ' (பா. பே.)

அரும்பெரும் பன்னே யடர்த்தாலு மாற்றிப்
பிரித்திடச்செய் யாதுடலைப் பேணு 38

ஆக்கை யறவெறுத்தா ஞரியனுக் கும்மழற்புக்
காக்கைவிடி னேமுத்தி யாம் 39

சிவ்னெனவே தேசிகனை யன்பரையுஞ் சிந்தி
யவனையவ ராகநினை யல் 40

சிவனெனவே தேவரையுஞ் சிந்தி யவனை
யவனெனக்கண் டார்நிரயத் தார் 41

அரையனெனக் காண்பா மமைச்சையமைச் சாக
அரையனைக்கண் டாற்றுயர மாம் 42

ஆதலினுற் றேசிகனை யாதித் தனையயனை
மாதவனை மற்றும் வணங்கு 43

சிவனெனவே சிந்தித்துச் செய்பூசை கண்டே
சிவனே பலத்தைச் செயும் 44

இங்கியற்றிற் பூசை தவத்தார்க் கிவரன்றே
யங்கே பலமடைவிப் பார் 45

ஆதலினு லீசன் அவரவர்க்குச் செய்பூசை
காதலுறக் கொண்டளிப்பன் காண் 46

தனைக்குறித்துத் தன்கணத்தார் தாடொழவிண்
றனைப்பணிந்தா லென்னதரான் றூன் [ணீவான் 47

பற்றறுப்பீர் பற்றிலான் பற்றறுக்க வல்லான்ருள்
பற்றுமினும் பற்றையறுப் பன் 48

விரும்பீர் பலமெனினும் விண்ணும் விமலன்
றருந்தனது தாளுந் தரும் 49

சைவருக்குச் சித்தாந்தஞ் சாற்றும் பொழுதெவரும்
உய்யுநெறி தன்னையுஞ்சொன் னேம் 50

அறிவிக்க விந்நூலை யாரியனு சற்ருற்க்
கறிவிக்கி னுசுற் றவர்க்கு 51

இருவரும் வீழ்வா ரெரியு நிரையத்
தரிதரி தேறல் லவர் 52

பக்குவர்க்குப் போதித்தான் பக்குவரோ டும்பாசம்
பக்கடைவன் மூலன் பதம் 53

தேர்வரே யிந்தவியல் சைவசித்தாந் தந்திமிரஞ்
தீர்வார் திளைப்பார் சிவம் 54

எட்டாவது
சைவர்சங்கற்ப நிராகரணம் முற்றிற்று.
ஆகவெல்லா வியல்கட்குங் குறள் வெண்பா—424.
திருச்சிற்றம்பலம்.

முதலாவது
அயிக்கியவாதி சங்கற்ப நிராகரணம்.

அஃதாவது அயிக்கியவாத மதத்தினர்கொண்ட கொள்கையினை பலவகை யேதுககள்காட்டி மறுத்தலைச் செய்வது என்பது பொருள்.

(இ-ள்) ஆவிக்கி இருள் மலம் தான் இ(ல்)லையேல்— அணுக்களாகிய உயிர்கட்கு மறைக்கப்படுகின்ற இருளாகிய ஆணவ, கன்ம, மாயை யென்னும் மும்மலங்கள் இல்லை ஆகுமே ஆனல். இன்பம் துன்பம்—சுகதுக்கங்களை, கருவி கொடு காண்பது என் ஓ காண்—கரணங்களாகிய கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து அறிவது எங்ஙனம் கூடும். நீ ஆராய்ந்து கூறுவாயாக (எ—று)

குறிப்பு:— கொண்டு என்பது கொடுவென திரிந்து நின்றது, இல்லை என்பது இலையென இடைக்குறையாயிற்று. எவன் என்பது வினப்பொருளை உணர்த்தி என் என வந்தது ஓ, காண் என்பன அசைநிலைகளுமாம். (1)

(இ-ள்) உயிர்க்குக் கருவி ஒடுங்கும்போது—ஆன்மாக்கட்கு கரணங்களாகிய கருவிகள் தத்தமக்குரிய தொழில்களைப் புரியாது ஒடுங்குதலை உற்ற சமயத்து, உற்றமயக்கத்துக்கு—அடைந்த மயக்கத்திற்கு, ஏது—காரணம், மலம் மாசு—மலமாகிய குற்றங்களாம் (எ-று)

குறிப்பு:— இவ்வாறன்றி உற்ற மயக்கத்திற்கு மலம் மாசு, ஏது என கண்ணழிவு செய்து அடைந்த மயக்கமாகிய விபரீதத்திற்கு மலக்குற்றம் யாது என பொருள் கோடலுமுண்டு. மாசு—குற்றம், ஏது—காரணம் அல்லது யாது

என வினைபொருட்டாக்கலும் ஒன்று, ஒடுங்கள்—செயலற் றிருத்தல், போழ்து என்பது போது என இடைக்குறைந்து நின்றது (2)

(இ-ள்) கருவி கலக்க மயக்கம் கழியும் — கருவிக ளானவை கலக்குதலையுரிய மயக்கங்களானவை நீங்கப்பெறும் இவை—இவைகள் எங்ஙனம் எனில், இருள்ஒளிபோலும் காண்—இருளையும், ஒளியையும் ஒக்கும் (எ—று)

குறிப்பு:— காண்—அசைநிலை, இருள் — மறைத்து நிற்பது, ஒளி—கண்ணுக்கு பொருளை அறியுமாறு விளக்கு வது, போலும்—ஒக்கும் என்பதாம். (3)

(இ·ள்) யான் என்கை அற்றூர்—நான் என்று சொல் லப்பெறும் முனைப்போடு கூடிய அகங்காரம் அற்றவர்கள் எவர்களோ அவர்கள், ஆரியர்க்கு ஆட்பட்டார் — ஆச் சாரிய புருடனுகிய தேசிகருக்கு அடிமைப் பட்டவராவர். (தாசனுகுவர்) அவர்களே, இ குற்றம் இருள் மலத்தின் கூறு--இருளாகிய மலத்தின் பகுதியும் ஆன்மாவினை அநா தியே மறைத்து நிற்பதாகிய குற்றமும் ஆகிய இரண்டும் அற்றவராவர் (எ—று)

குறிப்பு :— யானென்கை அற்றூர் ஆட்பட்டாரென வும் குற்றம் இருண்மலத்தின் கூறு அற்றூர் எனவும் வினை முடிவு செய்க. ஏகாரம்—தேற்றம், இகுற்றம்—இந்தக்குற் றம், இருள்—ஆன்மபோதத்தை மறைக்கும் அஞ்ஞானம், ஆட்படல்—அடிமை பூண்டு ஒழுகல். (4)

(இ-ள்) ஆருயிர்க்கு செருக்கினை ஆக்குதிமிர்த்து — அரிய ஆன்மாவினுக்கு அகங்காரமாகிய செருக்கினை திமிர் உறச்செய்து ஆக்குதல், ஈங்கு—இவ்வுலகில், நெருக்கிதமோ குணத்து இன்று—செறிவுறச்செய்து வருத்தும் முக்குணங் களில் ஒன்ருகியதமோ குணத்தின்கண் இல்லையாகும் (எ.று)

குறிப்பு:— தமம்—இருள் (அறியாமை) குணம்—தன்மை, செருக்கு—யானென்கை, நெருக்குதல்—ஆன்மா வினை சிறுகச் செய்துதான் பெருகி நிற்றல், திமிர்த்தல்—மதோமத்தமாயிருத்தல் (5)

(இ-ள்) உனக்கு மறப்பும் உண்டு—அறியாமை வயப்பட்டு கிடக்கின்ற நினக்கு மறப்பாகிய நினைவு இன்மையும் உளதாகும் அதனுக்கு ஏது வினைகொண்டிலையேன்-அதற்கு காரணத்தை நீ கொள்ளவில்லை எதனல்? மூலமலங்கொள்—இதற்கு காரணமாகிய பாசம் உண்டெனலை கடைப்பிடித்துக் கொள்வாயாக.

குறிப்பு:— ஏது — வடமொழித்திரிபு, மறப்பு—நினைவற்றிருத்தல், உண்டென்பது குறிப்பு வினைமுற்றுச்சொல் மூலமலம் — ஆணவமலமுமாம், மூலம் — காரணமெனப் பொருள் கோடலுமுண்டு. (6)

(இ-ள்) ஆவி உடல் வேண்டுதலால்-உயிரானது உடலை விரும்புதலினுல், விரோதம் உண்டு — மாறுபாடு (பகை) உளதாகும், விழி—கண்களானவை, விளக்கு—தீபத்தினை, உண்டு ஆய்—உளதாகி, விருத்தம்வேண்டும்-வேறுபாட்டை விரும்பும் (எ—று)

குறிப்பு:— விளக்கு—கண்ணுக்கு விடயமானவற்றைக் காட்டுவது, ஆவி—ஆன்மா, இது அணுவடிவாய் கண்ணுக்குக் காணப்படாததாய் சேதனுய் ஒருபொருளை வேண்டுதலும், வேண்டாமையும் உடைமையால் இருவினையேற்பட்டு அதனுல் தாநுவினை எடுத்து இன்ப துன்பங்களை அனுபவிப்பதாய் பிறந்து இறந்து உழல்வது, உடல் — மாறுபட்டு இருப்பது அசேதனமுடையது, சேதனுகிய ஆன்மா அசேதனமாகிய உடலை எடுத்தபோது அவ்வுடலும் சேதனமாய் விளங்கும், வேண்டும்—விரும்பும், உண்டு—உள்ளது இது

குறிப்பு வினைமுற்று ஆகி என்பது ஆய் எனத்திரிந்தது. விரோதம், விருத்தம் என்பன மாறுபாட்டை உணர்த்தும் (7)

(இ-ள்) எங்கள் பெருமான்—எங்களை ஆட்கொள்ளுகின்ற பெருமையினையுடையவனாகிய பரமேஸ்வரன், இருள் ஆல் தடைபடுவது—இருட்சியினால் கண்ணுக்கு புலப்படாது தடைபட்டு போவது, பொருளோ விழியோ புகல்—விடயமோ கண்களோ என்று நீ கூறுவாயாக (எ—று)

குறிப்பு:— ஓகாரங்கள் வினாபொருள், பெருமான்—பெருமை உடையவன், தடைபடுவது — புலப்படாமல் மறைந்திருப்பது, பொருள்—விடயம் (8)

(இ-ள்) பொருவிழியின்—ஒன்றோடு ஒன்று பொருவுதலைச் செய்கின்ற கண்களினால், பொருளைக்காணும் புலனை—உருவப்பொருளைக் காண்டலைச் செய்கின்ற புலனை, இருட்டுக்கும்—இருளுக்கும், என்றே—என்று கருதியே, நீ எண்—நீ எண்ணுவாயாக (எ—று)

குறிப்பு:- நீ முன்னிலை-ஒருமை பெயர், எண்-முன்னிலையேவல் ஒருமை வினைமுற்று. ஏகாரம் தேற்றப்பொருள் (9)

(இ-ள) பொருளை இருள் மறைக்கும் என்கை—புலனாகும் உருவப்பொருளை இருளானது மறைத்தலைச் செய்யும் என்று கூறுதலானது, பொருவிழிக்கே பொருந்தும்—ஒன்றைப் பற்றுகின்ற கண்களுக்கே கூடுதல் உண்டாம், உன் புகல்யாது—உன்னுடைய கூற்று யாது கூறுவாயாக (எ-று)

குறிப்பு:— என்கை — என்று கூறல், கைத்தொழிற்பெயர் விகுதி, யாது-வினாப்பொருட்டு, புகல்—கூறு. (10)

(இ-ள்) கருமுகில் — நீருண்ட கரிய மேகமானது, ஆதித்தனை — பெரும் பிரகாசமுடைய கதிரவனை, விண்ணில்—ஆகாயத்திடத்து, மிடைந்து மறைக்கும்—நெருங்கி

நம்கண்ணுக்கும் புலனுகாவாறு மறைத்தலைச் செய்யும் (அது போல) கண்ணைமறையாது — விழிகளை உருவப்பொருளை காணுவாறு மறைக்க மாட்டாது (எ-று)

குறிப்பு:— கண்களுக்கு இயல்பாகவே ஒளிஉண்டு ஆனுல் கண்களுக்கு கருவியாக தீபவொளியும், சூரிய ஒளியும் வேண்டப்பெறும். (11)

(இ-ள்) இருள் குணம் — இருளாகிய குணமானது, இரண்டு கண்ணும்—இரண்டுகண்களையும், நள்ளேய்ந்து—நெருங்கிப்பொருந்தி, தடுக்கும்—பொருளைப் புலனுகாவாறு மறைக்கும், ஒளிநள்ளேய்ந்து — ஒளியாகிய தீபம் நெருங்கிப் பொருந்தி, இரண்டும் தடாது—இரண்டு கண்களையும் மறைத்தலைச் செய்யாது (எ—று)

குறிப்பு:— இதனுல் ஒளியாகிய கருவி இருந்தால் அன்றி கண்களாகிய பொறிகள் உருவப்பொருளை அறிதலைச் செய்யமாட்டாது என்பது புலனும், தடாது—தடுக்க மாட்டாது என்பதாம். (12)

(இ-ள்) சீனதர்ப்பணத்தின் நாப்பண்—கண்ணுடியின் நடுவில், கண் தடைபடுமோ — கண்களுக்குப் பொருளைக் காணுதல் தடைபடுதல் கூடுமோ ? (கூடாது) மண்ணின் அடுத்தான் தடைபடுமே—மண்ணினிடத்து தடைபடுதல் உண்டாம் (எ—று)

குறிப்பு:— தர்ப்பணம்—கண்ணுடி, நாப்பண்—நடு, தான்—அசைநிலை (13)

(இ-ள்) குறிப்பிலர் கொள்கையே கண்ணென்று கொள்வர்-குறிப்பு இல்லாதவர்கள் கோடலையே கண்ணுக்கு ஒளி என்று கொள்வர், அதற்கு கொள்கை மட்டோ— அங்ஙனம் கொள்கை மாத்திரமோ, கொள்—இதனைக் கருதி ஏற்பனகொள்வாயாக (எ—று)

குறிப்பு:— கொள்கை—பற்றுதல், மட்டு—அளவு, ஓ—வினுப்பொருட்டு, கொள்—ஏவல்வினை. (14)

(இ-ள்) திரியைப்பற்றி எரிதீபம்—நூலாகிய திரியினைப்பற்றி எரிகின்ற விளக்கானது, திரியின் அளவோ — திரிநூலின் அளவிலே யமையுமோ? (அமையாது) அது போல, உம்கண் விழிக்கு—உங்களுடைய கண்களாகிய நயனங்களுக்கு, விரியும் ஒளி—விரிகின்ற ஒளியானது கண்ணின் அளவோ. (எ—று)

குறிப்பு:— அகல் திரி எண்ணெய் மூன்றும் ஒன்று உற்ற வழியேதான் சுடர் யேற்றின் அச்சுடர் எரியும், ஓ வினுப் பொருளது. (15)

(இ-ள்) பகல்—பகலின்கண், பருதிதனைகிட்டியே கண் பார்க்கும்-பகலைச் செய்கின்ற காரணத்தால் பகலவன் என்ற பெயருடைய சூரியனை நெருங்கியே கண்களானவை தமக்குப் புலனாகிய உருவப் பொருளைப் பார்த்தலைச் செய்யாநிற்கும், இரவில்—கண்ணுக்குப் புலனாகாத இராப் பொழுதின்கண், உருவதனை தொட்டு-உருவப் பொருளைக் கைகளால் பரிசித்து, கிட்டும்—நெருங்கிப் பார்க்கும் (எ—று)

குறிப்பு :—பருதி—சூரியன், பூர்வ திசையாகிய கிழக்கின்கண் உதித்தலால் பருதி எனவாயிற்று. ஏகாரம் அசைநிலை, கிட்டி-நெருங்கி, பொருளைக் காண்டலின்கண் ஆயிற்று. தொட்டு—பரிசித்து. (16)

(இ-ள்) அந்தத்து உறுப்பு — முடிவின்கண் அவயவத்தின் (அழகிய அவயவத்தின்) அதிதூள் — மிகவும் அணுக்கள், ஆர்த்தது—சிக்குண்டதை, அடையுங்கால்—பற்றுங்கால், அந்தப் பொருட்கு உருத்தோன்ருது—அவ்வணுப் பொருட்களுக்கு வடிவமானது உண்டாக மாட்டாது.

குறிப்பு:— உறுப்பு—அவயவம், அந்தம்—முடிவு அல்லது அழகு, ஆர்த்தது—ஒன்றுபட்டது அல்லது கட்டுண்டது, அடைதல் —சென்றுபொருந்துதல், அந்தப் பொருள்-முன்குறிக்கப்பட்ட அணுப்பொருள், தோன்றல்—புலப்படல் அல்லது உண்டாதல் (17)

(இ-ள்) சேர்ந்த உருவம் திளைக்கும்பொழுது-அடைந்த வடிவத்தினை சென்று அநுபவிக்கும்பொழுது, விழி—கண்களானவை, உள்ள உருக்கொண்டு—தமக்கு புலப்படுகின்ற வடிவத்தினைக்கொண்டு, கூர்ந்து அளக்கும்—மிகநுட்பமாகச் சென்று அதன் பெற்றி ஈதுதான் என்று அளத்தலைச் செய்யா நிற்கும்

குறிப்பு:— உருவம்—வடிவம், கூர்ந்து—நுண்ணிதாகி உருக்கொண்டு—வடிவுற்று, விழிஅளக்குமென வினை முடிவு செய்க. (18)

இப்பாடலானது அயிக்கியவாத சங்கற்பமுடைய மாணவகனை ஆச்சாரியர் நோக்கி நீ இங்ஙனம் சங்கற்பம் கொண்டு இருத்தல் ஒல்லாது என நிராகரித்தலைப்பற்றியதாகும்.]

(இ-ள்) யோசனைமேல் நிற்கும் பருதி — யோசனை தூரத்துக்கு மேல் நிலை பெற்றிருக்கின்ற சூரியனானவன், உதவி—கண்களுக்கு விடயமான பொருளை காட்டற்கு ஒளியினை உபகரித்து, நியுதம் கண்போமோ—எக்காலத்தும் கண்களுக்கு உதவுதலை பொருந்துமோ, நீ நிகழ்த்து—மாணவக இதனை விவரமாக கூறுவாயாக (எ—று)

குறிப்பு:—பகற்காலத்தில் பருதியானவன் கண்களுக்கு பொருளைக் காட்டற்கு உதவுமே யல்லாமல் இரா காலத்தில் ஒளியினை தந்து உதவாது என்றபடி, நீ—எழுவாய், கூறு—பயனிலை, ஓகாரம்—எதிர்மறை. (19)

(இ-ள்) கணத்தின்-கணமென்னும் ஒரு நொடிப்பொழுதில், இமைமறைக்க—இமைத்தலைச் செய்து கண்ணுக்கு

விடயமான வற்றைமறைக்க, கண்ணுள் தேசு ஒடுங்கும்—கண்ணிடத்துள்ள ஒளியானது ஒடுங்கு தலையுறும், கணப் பொழுதின்—நொடிப் பொழுதின் கண், எங்ஙன்—எப்படி. மீளும்—மறைந்த ஒளியானது மீளுதல் உண்டாம், காண்—நீ இதனை ஆராய்வாயாக (எ-று)

குறிப்பு:— காண்—முன்னிலை யேவல்வினை, இமை—ஒரு நொடிப்பொழுது, தேசு—ஒளி, ஒடுங்கும்—அடங்கும், எங்ஙன்—எவ்விதம், (20)

இ-ள்) கடத்தால் அடக்கிய தீபம்-குடத்தால் அடக்கப்பட்ட விளக்கானது, கணத்தில்-ஒரு கணபொழுதின்கண், கடத்தையெடுக்க — தீபத்தை மறைத்து வைத்த குடத்தை அதனின்றும் எடுக்க, பரக்கும்—பரவுதலைச் செய்யும், காண் அசைநிலை.

குறிப்பு:— கடம்—குடம், தீபம்—விளக்கு, கணம்—ஒருசிறு காலஅளவை இது வடமொழிதிரிபு, பரக்கும் — செய்யுமென்னும் வினைமுற்று, பார்க்கும் எனபாடம் ஓதி பார்த்தலைச் செய்யா நிற்கும் என பொருள் கோடலும் ஒன்று (21)

(இ-ள்) நேர்ந்த விடயத்தில்—புலப்படா நின்றபொருளினிடத்து முன்நின்று திளைக்கும் ஏ—முன்னே நிலைபெற்று அநுபவித்தலைச் செய்யும், விழிசென்று தான்திளைக்கும்—கண்களானவை பார்வையால் சென்று அப்பொருளை நுகர்தலைச்செய்யும், தேறு—இதனை நீ தெளிவாயாக (எ—று)

குறிப்பு :— நின்று — நிலைபெற்று, திளைத்தல் — ஆழ்ந்து நுகர்தல், நேர்தல்—ஒன்றுறல் அல்லது பொருந்துதல், விடயம்—வடமொழிதிரிபு, தேறு—தெளிவாய் (22)

(இ-ள்) தூரத்து ஒலிவந்து தொக்கது ஓ — சேய்மையினின்றும் சப்தமானது வந்து குழுமியதோ, சோத்திரம்போய்

—காதுகளாவை சென்று, தூரத்தில்—சேய்மையில், கேட்டதோ—கேட்டலைச் செய்ததோ, சொல்—நீ இதனை ஆய்ந்து கூறுவாயாக.

குறிப்பு:— சோத்திரம் — காது, ஒலி—மொழிக்குக் காரணமனது அணுத்திரளாம், தொக்கது-ஒருசேர திரண்டது, சொல்—முன்னிலை ஒருமை யேவல் வினைமுற்று (23)

(இ-ள்) வானத்து — விண்ணிடத்திருந்தும், ஒளி—ஒளியானது, விரைந்து—வேகமாகச் சென்று, மண்ணின் வருவது போல் — மண்ணுலகத்திற்கு வந்து சேருவது போல், வானத்து ஒலியும் வரும் — வானத்திடத்திருந்து சப்தமும் வரும் (எ—று)

குறிப்பு:—விண்ணிடமாக கண்களுக்கும் காதுகளுக்கும் விடயமாகிய ஒளியும், ஒலியும் புலப்படுமெனல் தெளிவிக்கப்பட்டது (24)

(இ-ள்) எண்ணின் இருள்மன் மலம் உண்டு என்று சேராயின் இருளாகிய நிலைபெற்ற பாசங்கள் உண்டென என்று, இயம்பும்போது—கூறும்போது, இசைந்த—உடன்பட்ட, கண்ணிணையும்—விழிகளையும், தேற்றினேம்—தெளிவித்தோம், காண்—இதனைக் காண்பாயாக (எ—று)

குறிப்பு:—இசைந்த—உடன்பட்ட, இயம்பல் — கூறல், எண்ணல்—ஆய்தல், மன்—நிலைபெறல், மலம்—பாசம் அல்லது அழுக்கு. (25)

(இ-ள்) மூலம்மலம் இல்லார்க்கு-வினைகட்குக் காரணமாகிய பாசங்கள் அற்றவருக்கு, தனுவும் ஏயாமாயா-காயமும்வந்து பொருந்தமாட்டா அழிதல் உறவும்பெறு, உள்ளார்க்கு — மூலமலம் அறப்பெறுதவருக்கு, உடல்வினையும் உண்டு-தனுவினை எடுத்தற்குக் காரணமாகிய இருவினைகளும் உளவாம்.

குறிப்பு:— மூலமலம் — காரணமான பாசம், ஏய்தல் —பொருந்துதல் (உண்டாதல்), மாய்தல்—அழிதல், தநு —உடம்பு, இல்லார்—மலமற்றவர், உள்ளார்—மலமுடையவர். (26)

(இ-ள்) முத்தர்க்கும் ஆக்கை முளைக்கும்—பாசமற்றவருக்கும் (விடுபட்டவருக்கும்) உடலானது உண்டாகும், உயிர்—உயிரானது, ஆசுஇல்லா சுத்தஅறிவு என்று ஏ சொலின்——குற்றமில்லாத நிர்மல அறிவுடையது என்று கூறப்படுமேயானுல் (எ—று)

குறிப்பு:— முத்தர்—விடுபட்டவர், முளைத்தல்—உண்டாதல், ஆக்கை—தூலசரீரம், சுத்தஅறிவு-சிவஞானம். (27)

(இ-ள்) நீர்—நீரானது, நீரின் உற்றதுபோல் ஒன்றுகும்—நீரிேனுடு உற்று பிரிவின்றி ஒன்றுதல்போல இரண்டறக்கலக்கும், ஆவிசிவத்து — உயிரானது சிவத்திடத்து (ஒன்றுகும்) ஒன்றும் சேர்ந்தென்றுன் என் ஓ — ஒன்றுதலையுறும் கலந்து என்று கூறினுன் எங்ஙனம் (எ—று)

குறிப்பு:- ஓ-வினுப்பொருள் எதிர்மறையுமாம், ஆன்மா சிவத்தோடு திருவடிசேர்ந்து இன்புற்றிருக்குமேயன்றி நீரொடு நீர் கலந்தாற்போல பிரிவின்றி ஒன்றுய் இருக்க மாட்டாது என்பதுபோலும். (23)

(இ_ள்) அநாதிமல முத்தன் சிவன் — இயல்பாகவே பாசங்களினின்று விடுபட்டவன் பரசிவனுவன், அவனுக்கு— அப்பெருமானுக்கு, அநாதிமலபெத்தர்—அநாதியே பாசங்களின்று விடுபடாதவராகிய சீவர்கள், ஒவ்வார்—எவ்வாற்ருனும் ஒப்பாகமாட்டார்கள், அவலர்—அவலமுடையவராவர் (எ_று)

குறிப்பு:— அநாதிமல முத்தன் — வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் என்பதாம், சிவன்—அழி

வில்லாதவன் மங்களமுடையவன் என்பதாம். மலபெத்தர் —பாசங்களால் கட்டுண்டவர், அவலர் — யாதுசெய்வேன் என்று ஆவலிப்பவர், (அவலம்—இரக்கம்) (29)

(இ-ள்) ஒளியுடைய கண்—பிரகாசமுடைய விழிகள், கூர் இருளுக்கு ஒடுங்கும்—மிக்க இருளுக்கு, உருவினைக் காண மல்மறைப் புண்டு—ஒழுங்குதலையுறும், ஒடுங்கா(த) மனத்தினுக்கு ஒப்பு ஓ — எவ்வாற்றானும் சுருங்குதல் இல்லாத (பொருள்களிடத்து பற்றுதலைச் செய்து விரிந்து நின்ற) மனத்தினிக்கு, அவ்விழிகள் உவம மாதல் உண்டாதல் கூடுமோ கூடாது (எ – று)

குறிப்பு:— ஒப்பு — உவமம்; ஒடுங்கல் — சுருங்கல், கூரிருள்—மிக்க இருள், ஓ—ஓகாரம் எதிர்மறை பொருட்டு. (30)

(இ-ள்) கண்ணும் மனமும் கலந்து இரண்டு அற்று ஏ நிலவும்—கண்களும் மனமும் ஒன்ருய் இயைந்து இரண்டன் தன்மையற்று நிலவுதலைச் செய்யும், எண்ணுங்கால்—ஆராயுமிடத்து, ஒன்று அல்ல ஏ—மனமும் கண்ணுமாகிய இரண்டும் ஒன்ருய் கூடி பொருளைப்பற்றி நின்ருலும் உறுப்பாலும் செயலாலும் இரண்டாகுமேயன்றி ஒன்ருகமாட்டாவாம் (எ—று)

குறிப்பு:— கண்—புறக்கருவி (ஞானேந்திரியம்)மனம் —உட்கருவி, அந்தக்கரணத்தில் ஒன்று, கண்—காண்டலைச் செய்யும், மனம்—பற்றுதலைச் செய்யும், நிலவும்—விளங்குதல் உறும், ஏகாரம்—அசைநிலை (31)

(இ-ள்) இந்தமுறைபோல — இங்ஙனம் கூறப்பட்ட கிரமம்போல, உயிர்தான் இரண்டு அற்று நிற்கும்—உயிரானது இரண்டன் தன்மையும் (சீவத்தன்மையும், சிவத்தன்மையும்) அற்று முத்தி நிலையுறும், பதிபாத்து—பதியாகிய

இறைவனுடைய திருவடியினிடத்து உற்று, பந்தம் அறுக்கும் —உயிர்தன்னை அநாதியே பிணித்து நின்ற பாசங்களை வலி கெடச்செய்யும் (எ-று)

குறிப்பு:— பதிபாதத்து உயிர் உற்று பந்தம் அறுக்கும் என்பதே போந்த பொருளாம், பந்தம்—பந்திப்பது (கட்டு தல்) பாதம்-திருவடி, பதி-இறை, காண்-அசைநிலை (32)

(இ-ள்) சேரும் உயிர் ஒன்றாய்—சென்று அடையும் உயிரானது ஒன்றன் தன்மையாகி, சிவனை வியாபகனை—எங் கும் நிறைந்தவனாகிய சிவனை, சேருமாறு, எங்ஙனம்—எங்கும் நிறைவிலதாகிய உயிர் அவனைச் சென்றடைதல் எப்படி? நீ செப்பு—நீ இவ்வாற்றை தெளிந்து கூறுவாயாக (எ—று)

குறிப்பு:— வியாபகம்—நிறைவு. செப்புதல்—கூறுதல் எங்ஙனம்? நீ முன்னிலை ஒருமைப் பெயர். (33)

(இ-ள்) இருள் அடங்கும்போது — அஞ்ஞானமாகிய இருளானது அடங்குதல் உற்றபோது, உயிர் — உயிரானது, உள் ஈசன் இணைத்தாளை — உள்ளே நின்ற சிவபெருமா னுடைய இரண்டு திருவடிகளையும், தெரிசிக்கை—ஞான நாட் டத்தால் நோக்கி தெரிசித்தலே, சேர்தல்-இறைவனை அடை தல், என—என்று, தேறு—நீ தெளிதலை யுறுவாயாக (எ-று)

குறிப்பு:—

"ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே."

என்பது சிவஞானபோதச் சூத்திரம் ஆசையற்று பாசமற்று நிர்மலத்தன்மை எய்தி உயிர்க்குயிராய் நின்ற சிவனை அறிவு நாட்டத்தால் கண்டு தெரிசித்தலே முத்தியெனல் தெரிக்கப் பெற்றதாகும் இச்செய்யுள். (34)

(இ-ள்) திமிரம் தீருமளவில்-அஞ்ஞானவிருள்கெட்ட விடத்து, ஆவி — நிர்மலமுற்றஉயிரானது, தன்சிற்சத்தி தனில் — தன்னுடைய அறிவாகிய சத்தியிடத்து, பேரின் பினைத்திளைக்கபேறு—பேரின்பமாகிய முத்தியினை அடைய பெறலே பேருகும்.

குறிப்பு:— பேரின்பு-பெருஞ்சுகம் அஃதாவது பிறவா நெறியாம், திமிரம்—இருள், சிற்சத்தி—ஞானசத்தி. (35)

(இ-ள்) இந்த இயல் சூழ்வார் — இந்தஅயிக்கியவாத சைவசங்கற்ப இயலைச் சூழ்வார் ஐயம்திரிபு அறியாமை என்ற குற்றமும் அற ஆராய்பவர் எவரோ அவர், சுத்தசைவ சித்தாந்தம்—தூய சைவ சித்தாந்தமாகிய, பேரின்பம் அயத்து — பேரின்பபேற்றினை திளைத்து, வாழ்வார் —, சுகிப்பவர் ஆவர். (எ—று)

குறிப்பு:— சைவம்—சிவத்தொடர்புசைவம், சித்தம் அந்தம்—சித்தாந்தம் வேதத்தின் முடிபாகிய ஆகமத்தின் முடிபை உணர்த்துவது, சித்தம்—முடிபு, அந்தம்—முடிந்த தன்முடிபு, அயத்து—அநுபவித்து (36)

முதலாவது அயிக்கியவாத சங்கற்ப நிராகரணம் முற்றிற்று.

இரண்டாவது
பாடாணவாதி சங்கற்பம்.

பாடாணவாத சைவமாவது:— இவன் ஆன்மா முத்தியிலும் சகசமலம் நீங்காது கல்போற் கிடங்கும் என்பதாம் பாடாணம்-வடமொழித் திரிபு, பாடாணம்-கல் என்பதாம்.

(இ-ள்) அமலன்பதியே-மலமற்றவன் பதிப்பொருளே யாவன், சமலர் பசுக்கள்—மலங்களோடு கூடப்பெற்றவர் ஆன்மாக்களாகிய பசுப்பொருளாம், பதிபசுஆர்க்கும்—இறைவன் பசுக்களை கட்டும், பாசம் மூன்று—ஆனவம், கன்மம், மாயை என பாசங்கள் மூன்று வகைப்படும், ஏகாரம்—தேற்றம் (எ—று)

குறிப்பு:— பதி—எஞ்ஞான்றும் மலமற்றது, பசு—மலத்தோடு கட்டுண்டு இறைஅருளால் மலவலி யற்றிருப்பது பாசம்—ஆன்மாவை அநாதியே பற்றியிருப்பது பாசம், பந்தம், தளை, கட்டு, மலம், என்பன ஒருபொருள. (1)

(இ-ள்) இருள்மலம்என்று — அஞ்ஞான இருளாகிய ஆணவ மலமும், எழில்மாயை என்று — எழிச்சியுடைய (அழகுடைய) மாயை என்னும் மலமும், இருவினைஎன்று—நல்வினை தீவினைகளாகிய கன்மமலமும், மூன்றும் எண்—என மூவகைப்படும்.

குறிப்பு:— மலமென பாசங்களுக்கு பெயராயினும் சிறப்பாக ஆணவமலத்தைக் குறிக்கும். இதற்கு மூலமலம் எனவும் பெயருண்டு, மாயை—விரிந்து நிற்பது, அஃதாவது ஆன்ம வியாபகத்தை உரைத்து தான் வியாபகமாய் நிற்பது, வினை—கருமம் செயல் படுத்துவது என்பது பொருள் (2)

(இ-ள்) நிமலன் — மலமற்றவனாகிய இறைவன், மலத்தை நீக்க — பாங்களின் வலியை தொலைக்க, வினைக்

கிசைந்த — நல்வினை, தீவினைகளுக்குப் பொருந்திய, ஆக்கை— உடலினை, அணுக்கட்கு—அணுத்தன்மையாகிய உயிர்கட்கு, ஆர்ந்துபிணிப்பான்—இறுக கூட்டுவிப்பான் (எ—று)

குறிப்பு.— நிமலன்—தூய்மையானவன், பிணித்தல் —கட்டல், வினை—நல்வினை, தீவினை, அணுக்கள்—ஆன்மாக்கள். (3)

(இ-ள்) வினைப்பலத்தை — இருவினையின் பலனாகிய இன்ப துன்ப கூறுபாடுகளை, மேல், கீழ், நடுவும்-மேலுலகமாகிய சொர்கத்திடத்தும் கீழ் உலகமாகிய நரகத் திடத்தும், நடுவுலகமாகிய மண்ணகத்தும், இசைந்து—அவ்வினைப்பயன்களை நுகருதற்கு அவ்விடத்திற்கு ஏற்ற தனுவாதிகளைத் தந்து அதற்குரிய கால எல்லை வரை பொருந்துமாறுச் செய்து, இனைத்து என்று—இன்ன அளவினது என்று, எண்ணு நாள் —கருதலாகாத காலம் வரை, சென்று—போய் (எ—று)

இப்பாட்டும் அடுத்த பாட்டும் ஒருவினை முடிபாம். இது குளகமெனப்படும். (4)

(இ-ள்) மலம் பரிபாகமாக — பாசங்கள் பரிபக்குவத்தை அடைய, சத்தி பதிப்பன் — ஆன்மாக்களிடத்து அருள்சத்தி பதிய செய்தருளுவன், இறை — இறைவன், இருவினை யொத்தாலும் — இருவினைகளும் ஒத்தவிடத்தும். (எ—று)

இருவினை ஒப்பு மலபரிபாகம் சத்தினிபாதம், என்பன சைவ சம்பிரதாயம் உணர்ந்தார் வாய் கேட்டறியர் பாலது.

குறிப்பு:— தீவினை செய்தார் நரகத் திடத்தும், நல்வினைசெய்தார் சுவர்கத்திடத்தும் சென்று துன்ப இன்பங் அநுபவித்து மீண்டும் மண்ணிடத்து வந்து பிறப்பர். அவ்விரு உலகத்திடத்தும் வினைப்பயன்களைத் துய்க்கலாமேயன்றி வினைசெய்ய ஒன்றாது ஆகவே இருவினைகளைச் செய்வதற்

குரிய விடம் மண்ணுலகம் என்பதாயிற்று. இம்மண்ணுலகில் வினைகளை ஈட்டற்கு உவர்ப்பு வந்துழி மலம் பரிபாக படும். அதுகாலை ஆண்டவன் முன்னின்று அருட்சத்தி பதியவைத்து அருளுவன். இருவினை யொப்பாவது—நல்வினை செய்தால் புண்ணியம் என்றும் தீவினைசெய்தால் பாவம் என்றும் கருதா நிலையாம். இறை—எல்லா உயிர்களிடத்து சென்று தங்குபவன். சுவர்க்க, மத்திய, பாதல உலகங்களையே மேல், கீழ், நடுவு என்று குறிக்கப்பட்டதாம். (5)

(இ-ள்) ஆக்கைவெறுப்பு—உடலினிடத்து வேண்டா மையானது (உண்டான,) அபொழுதுஏ—அந்தச்சமயத்தின் கண்ணேயே, அவன்—பக்குவமுற்ற மாணுக்கனின், அவலம் —அவலத்தன்மையை, உபாயம் புரிந்துபோக்கும் — ஆச் சாரிய புருடன் மந்திரோபதேச மாகிய உபாயத்தினுல் நீக்கி யருளுவன். (எ—று)

குறிப்பு:— ஆக்கை—தோல், உதிரம், மச்சை, சுவேத நீர், மூளை முதலிய எழுவகை தாதுக்களினுல் கட்டப்பட்டது என்பது பொருள், வெறுப்பு — எத்துணைக்காலம் கருவின் ஊறி உடலினை எடுத்துப் பின் விடுத்தலைச்செய்வது என வேண்டாமை உண்டாவதாம். போக்கும்—நீக்குவன் என செய்யுமென்னும் வினைமுற்ருயிற்று. அவலம்—யாது செய் வேன் என்று அரற்றுதல். (6)

(இ-ள்) பரமகுரவன் பதத்தின்—மேலான ஆச்சாரி யருடைய திருவடிக்கண், ஏசற்றுவிட்டிருந்த இல்—மனக் குற்றமற்று அம்மனத்தை பற்றும்படிச் செய்தவிடத்து, பாசத்தைப் பாற்றும்—ஆன்மாவை நன்னிலை எய்த வொட் டாதபடி தளைந்திருக்கின்ற ஆணவ கன்மாதிகளாகிய பாச வலியை கெடுக்கும் (எ—று)

குறிப்பு:— குரவன்—ஆச்சாரியன், பாற்றும்—கெடுக் கும், பரமன் குரவன் பரமகுரவன் என இருபெயரொட் டாம், பரமன்—மேலானவன், ஏசு—குற்றம். (7)

(இ-ள்) சிறந்தார்கள் — தன்னுயிர்போலச் சிறந்தவர் களாகிய மனைவி மக்களும், சுற்றம்—சுற்றத்தினரும், திரு—பொருளும், என்ற மூன்றும் — என்றுசொல்லப்பட்ட இம் மூன்றினையும், துறந்து—வெறுத்து ஒதுக்கி, அந்நிய தேசந் தொட்டு—வேற்றுநாட்டை யடைந்து (எ—று) இதுவும் அடுத்த பாட்டும் குளகம்) (8)

(இ-ள்) தேடியே தேசிகனைக் கண்டு—ஆராய்தறியப் பட்ட பரம குரவனாகிய தேசிகனைத் தரிசித்து, அவன்தாள் —அவ்வாசரியனுடைய திருவடிகளை, சிரத்து சூடியே—தலை மேற்றாங்கி வணங்கி, சொல்லிதுதி—அவன் புகழ்களைக் கூறி தோத்தரிப்பாயாக.

குறிப்பு:— சுற்றம்—சூழவிருப்பவர், அந்நியதேசம் —தனக்குச் சம்பந்தம் இல்லாத பிறநாடு, திரு—செல்வம், தொட்டு—தொடங்கி, தேசிகன் — ஞான வொளி உடைய வன், கண்டு—தரிசித்து, சிரம் — தலை, தாள் — பாதம், சூடல்—தாங்கல், துதி—தோத்திரம், ஈண்டுதுதி என்பது ஏவல் கண்ணியது. நீ—எழுவாய். (9)

(இ-ள்) எய்த்தேன் எய்த்தேன் — இளைத்துப்போயி னேன் இளைத்துப்போயினேன், (மிக விளைத்துப்போயி னேன் என்றலுமாம்) இன்ப துன்பத்து உடல் எடுத்து-சுக துக்கங்களை அனுபவித்தற்கு ஏதுவாகிய சரீரத்தை யெடுத்து, கைத்து — வெறுத்து, இருளும்—மயக்கமாகிய இருளையும், களை—நீ களைவாயாக. (எ—று)

குறிப்பு:— உடலெடுத்து இன்ப துன்ப கூறுபாடுகளை நுகர்ந்து மிக இளைத்துப் போயினேன் என அவ்வுடலை வெறுத்து அவ்வுடலெடுத்தற்குக்காரணமாகிய மலவிருளைப் போக்குவாயாக நீ என வினைமுடிவு காண்க. (10)

(இ-ள்) என்று இயம்ப—மேலே சொன்னவாறு தன் னுடைய பிறவிப் பிணிக்குப் பயந்து கூற, யெழில்குரவன்—

மலமற்றவனுகிய அழகிய ஆச்சாரியன், உள்ளத்திரங்கி—மனத்திடத்து இரக்கங்கொண்டு, நன்று என்று—நல்லதென்று, அவனை நயந்து—அம்மாணவனை விரும்பி எடுத்து. (எ—று)

குறிப்பு:— இயம்பல்—கூறல், நயத்தல்—விரும்பல். உள்ளம்—மனம், நன்று—நல்லது. (11)

(இ-ள்) சிவதீக்கை பண்ண—ஆச்சாரியனுனவன் அம்மாணவனுக்கு சிவதீட்சை புரிய, சிவத்தோடு இயைந்து—சிவபரம் பொருளோடு ஒன்றுபட்டு, பற்றனைத்தும்—அகப்பற்றும், புறப்பற்றும் ஆகிய இருவகைப் பற்றையும், மற்றேதும்—இதன் தொடர்புடைய ஏனைய பொருள்களையும், எண்ணுன்—கருதுதலைச் செய்யமாட்டான்.

குறிப்பு: தீக்கை—பாவத்தை ஒழிப்பது, எண்ணல்—கருதுதல், இயைந்து—ஒன்றுபட்டு, சிவம்—என்றும் அழிவிலதாகிய பரம் பொருள். (12)

(இ-ள்) அறியப்படின் — ஆராய்ந்தறியப்பட்டால், சடமே ஆகும்—அவ்வுயிர் சடப்பொருளேயாகும், அமலன்—மலரகிதனுகிய இறைவன், உயிரினுல் அறியப்படான்—உயிராகிய சடப்பொருளால் அவ்விறைவன் அறியப்பெறமாட்டான். (எ—று)

குறிப்பு:— அமலன் — தூய்மையானவன், அறிவுப்பொருளாயிருப்பவன், சடம்—அறிவில்பொருள், உயிர்—ஆன்மா. (13)

(இ-ள்) வினை யதனுக்கு ஏது — வினைகளுக்கு மூலகாரணத்தினை, விளங்கின்—தெளிந்தால், அறிவு—அறிவாகும், அறிவினைவியந்து—அறிவினைக் கெடுத்து, விளங்காது—மூலத்தை அறியமாட்டாது.

குறிப்பு:— வினைக்கு காரணத்தை அறிந்து விளங்குவது அறிவாம், விளங்காதது அறியாமையாம் என்பது கருத்து. (14)

(இ-ள்) இன்பதுன்பத்தின்-இன்பமும் துன்பமுமாகிய சுகதுக்கங்களில், இளைப்பதே—சுகதுக்கங்களை நுகர்ந்து அதனிடத்து ஆழ்ந்து கிடத்தலே, பெத்தம்—பெத்தநிலையாகும், இன்பம் துன்பு அற்றிருப்பதே முத்தி—இன்ப துன்பங்களை நுகராமல் அவற்றிற்கேதுவாகிய வினைகளை புரியாமல் இருப்பதே முத்திநிலையாம்.

குறிப்பு:— இப்பாட்டு பெத்தநிலை இப்பெற்றித்தென இயம்பா நிற்கும். (15)

(இ-ள்) என்று இயம்பும்—மேலே கூறியவாறு இங்ஙனம் கூறுகின்ற, பாடாணவாதி—பாடாணவாதமாகிய சமயத்தினை, இவன்மதமும் — இவனுடைய கொள்கையும், அன்றி — இதுவல்லாமல் வேறொன்று உண்டு என்று, மறுப்பாம்—நிராகரணம் செய்வோம், கேட்டு அறி—அதனை செவ்விதாக கேட்டுத் தெளிவாயாக.

குறிப்பு:— இதனால் பாடாணவாத சமயத்தை பூர்வபட்சமாகக்கொண்டு மறுத்தலைச் செய்து சித்தாந்தம் செய்தலைக்கூறிற்று. பாடாணம் — கல், வாதி—எடுத்துச்சொல்லுபவன், அறி—தெளிவாயாக. (16)

இரண்டாவது

பாடாணவாதி சங்கற்ப முற்றும்.

இரண்டாவது
பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்.

அஃதாவது முற்கூறிய பாடாணவாத சமயகொள்கையை இங்ஙனம் கூறல் அளவைக்குப் பொருந்தாதென அளவை யான் எடுத்துக்காட்டி மறுத்துரைப்பதாகும்.

(இ-ள்) அறிவைத்தடுக்கும்—ஞானத்தை தடைப்படுக்கும், ஆணவமலம் — மூலமலமாகிய ஆணவம் என்னும் பாசம். மாசுஅற்றால்—குற்றம் நீங்கினல், உயிர்க்கு ஆர்ந்து அறிவு இலங்கும்—உயிர்களிடத்து நிரைந்து அறிவினை விளிரச்செய்யும். காண்—அசைநிலை (எ—று)

குறிப்பு:— ஆணவ மலமானது குற்றமற்று இருப்பின் உயிரோடு நிரைந்து அறிவைப் பிரகாசிக்கச் செய்யும் என்பதாம், காண்—நீ காண்பாயாக என்று பொருள் கோடலும் ஒன்று. (1)

ஆவிக்கு—உயிரினுக்கு, அறிவு விளங்காதேல்—அறிவானது விளக்கத்தை அடையாதேல், விரைய—விரைவாக, கலங்கம் தீர்ந்து அகல—களங்கமாகிய மலினமானது ஒழிந்து நீங்கப் பெறலே, காண்—நீ காண்பாயாக (எ—று)

குறிப்பு: தான்—அசைநிலை, தீர்தல்—விடல், களங்கம் —குற்றம், அகல—நீங்க, விளங்கல்—தெரிவுறப்பெறல், விரைய—விரைவாக (2)

(இ-ள்) அநாதிமலம் போகா திருந்தும்—இயல்பாகவே தொன்றுதொட்டு உயிர்களோடு சம்பந்தத்தி வருகின்ற பாசமானது ஆன்மாவை விட்டு அகலாதிருந்து, அயர்வாக்காது—தளர்வினை உண்டுபண்ணமாட்டாது, ஆதிமிடற்றின் விடம் போல் என்-ஆதியாகிய சிவபெருமானுடைய தேவர்

கள் உய்யவேண்டி அடைக்கப்பட்ட கழுத்தின் கண் உள்ள ஆலகால விடத்தைப் போல், ஆம்—ஆகுமென்று நீ எண்ணு வாயாக (எ—று)

குறிப்பு:— திருப்பாற்கடல் கடைந்த யான்று உண்டா கிய ஆலகால விடமானது தேவாசுரர்களை துன்புறுத்தக் கண்ட அவ்விடத்தைக் கையாலெடுத்து சிவபெருமான் வாரியுண்டனர், அவ்விடம் கண்டத்தில் தங்கி கருமையுற்றி ருந்தது. அன்றி அவ்விறைவனுக்கு யாதொரு வகையான இன்னலும் செய்ய இயலாதாயிருந்தது. அதுபோல பக்குவம் உற்ற ஆன்மாக்களுக்கு மல வலியானது தொலைந்து இன்னல் செய்யாது என்பதே போந்த பொருளாகும். அநாதி-பழமை யானது, ஆதி—சிவபெருமான், மிடறு—கண்டம், எண்— ஆராய்வாயாக. (3)

(இ-ள்) புண்ணிய பாவத்தின் புசிப்பு—புண்ணியத் தால் வரும் இன்பமும், பாவத்தால் வரும் துன்பமும் நுகர் தல், அறுகை—தீர்ந்துவிடலே, முத்தியெனின்—வீடென்று கூறினல், புண்ணியமும் பாவமும் போம்— நல்வினையும் தீவினையுமாகிய இரண்டு வினையும் அற்றுவிடும் (எ—று)

குறிப்பு:— புண்ணியச் செயல்—நல்வினை, பாவச்செ யல்—தீவினை, இவ்விரண்டாலும் வருவது இன்பமும் துன்ப முமாம். புசிப்பு—அனுபவித்தல், அறுகை—தீர்ந்துவிடல், போகும் என்பதுபோம் என விகாரமாயிற்று. ஒழியப்பெ றும் என்பது பொருள். (4)

(இ-ள்) மற்றைமலமெல்லாம்—ஏனைய பாசங்களெல் லாம், நிலவும் வரம்இல்லை—நிலவி உலாவும் மேம்பாடில்லை, நின்முத்தி—நினக்கு முத்தியாவது என்று கூறுவது, குற் றமே—குற்றமேயாகும். கொள்-இதன் உண்மையை ஆய்ந்து கொள்வாயாக (எ—று)

குறிப்பு:— வரம்—மேன்மை, இல்லை—குறிப்பு வினை முற்று, முத்தி—பாசங்களினின்றும் விடுபடுகை. (5)

(இ-ள்) கருவுமரமும்—வித்தாகிய கருவும், அது தோன்றுதற்குக் காரணமாகிய விருட்சமும் போல, கருவி கழிந்த இருளும்—வினைக்குக் காரணமாகிய பாசங்கள் நீக்கிய இருட்டன்மையும், பரமுத்தி ஏன்—மேலான முத்தியென்று கூறுவது எங்ஙனம் (எ—று).

குறிப்பு:— வித்து முந்தியதா, மரம் முந்தியதா என்று கூறும் மீசாங்குற நியாயம் போல, பாசம் முந்தியதா வினை முந்தியதா வென்னும் காரணங்களை ஆராய்ந்து அறிதலாம். இதனுல் இவ்விரண்டும் ஒருங்கே ஒழிய பெறல் பாச வலியாகிய விருள் நீங்க முறலாம். இருள்—மெய்மை அறியப் பெருமை, பரமுத்தி—மேலான அழிவிலதாகிய வீடு. (7)

(இ-ள்) அசித்து இன்பம் துன்பம் அவலத்தாம்—சித்தத் தன்மையல்லாத அசித்துத் தன்மையால் தோன்றப் பெறும் சுக துக்கங்கள் அவலத்தன்மை யுடையதாகும். அற்ருல்—இவ்விரு வினைகள் நீக்கப் பெற்ருல், இன்பம் விசித்து பெற்றிருக்கை-பேரின்பத்தில் சிக்குண்டு கட்டப்பெற்றிருத்தல், வீடு—மோட்சமாம் (எ—று)

குறிப்பு:— அசித்து—அறிவிலது, விசித்தல்—கட்டப் பெறல், இன்பம் — நிரதிசய வின்பம், அறுதல் — ஒழியப் பெறல். ஆகும் வென்பது ஆம் என வாயிற்று. (7)

(இ-ள்) கண் ஊனம் தீர்ந்தால்—கண்களுக்கு மறைப்பாகிய இருளென்னும் குற்றம் திர்ந்தால், திளைக்கும்—பிரகாசமாகிய ஒளியின்கண் சென்று பார்த்தலைச் செய்யும் அது போல, உரும் மூலம் மலம் தீர்ந்தான்—ஆன்மாவைப் பற்றியிரா நின்ற மூலமலமாகிய ஆணவமென்னும் பாசம் தீரப் பெற்றவன் எவனே அவன், சிவம் திளைக்கும்—பேரானந்தப் பெருவாழ்வாகிய சிவத்தோடு பொருந்தி இன்பத்தை அநுபவியா நிற்பான் (எ—று)

குறிப்பு:— தீர்தல்—விடுதல், ஊனம்-குற்றம், திளேக்கும்—நுகரும், மூலமலம்—ஆணவமலம். (8)

(இ-ள்) அருக்கன் அருள்புரிய—சூரியஞனவன் தனது கருணேயாகிய பிரகாசத்தைக் காட்ட, அந்தன்விழிபெற்று—பார்வையற்றவனுகிய குருடன் கண்களேப் பெற்று, அருக்கனேக் கண்டால் போல—உருவப் பொருளேத் தெரிவிக்கும் பிரகாசமாகி ஒளியினேயுடைய சூரியனேப் பார்த்து பெருமகிழ்வுற்ருற் போல, பேறு-பாசவிருளற்று பதிப்பொருளே ஞான நாட்டத்தால் கண்டு தரிசித்தலே முத்தியாம் (எ—று)

குறிப்பு:— கண் — ஞானக்கண்ணும், ஊனக்கண்ணுமென இருவகைத்து. ஊனக் கண்ணே மறைப்பது புறவிருளாம். ஆன்மாவின் சொரூபத்தை அறிய ஒண்ணுதபடி மறைத்து நிற்பது பாசமாகிய அகவிருளாம். அகவிருளற்ற வழி ஞான நாட்டம் தலேப்பெற்று சிவத்தைக் காண்பர் இங்ஙனம் சிவத்தைக் கண்டு அதனெடு ஒன்றலே பேரும். (9)

(இ-ள்) அட்டகுணனே — எட்டு குணங்களேயுடைய இறைவனும், அமலனே — மலமற்றனும் ஆகிய பரசிவனே, கண்டார்—ஞான நாட்டம் கொண்டு தரிசிப்பின், மலம்அற்ற —பாசங்கள் ஒழியப் பெற்ற, அட்ட குணத்தை-எண் குணங்களேயும், அங்கு — அப்பொழுதே, பெறுவர் — அடையப் பெறுவர் (எ—று)

குறிப்பு:—அட்ட குணம்—தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என்பனவாம். அமலன்—பாசமில்லாதவன், அநாதியே போதன்-இயல்பாகவே பாசங்களின்று விடுபட்டவனுகிய இறைவனே ஞானமயமாக உள்ளவன் அவனே, அனைத்தும் அறிவான்—எல்லாப் பொருள்களேயும் இயல்பாகவே அறிபவனும், அநாதிமல முத்தசத்தியால் — இயல்பாகவே பாசங்களின்று விடுபட்ட சத்தியின் தன்மையினுல். (10)

குறிப்பு:— சத்தியொடு சிவம் சேர்ந்திடில் எத்தொழி லிலும் வல்லதாம் என்ற ஞான நூல் முறைப்படி அநாதிமல சத்திவடிவினால் அநாதிமல முத்தனான ஆண்டவன் அனைத் துப்பொருளையும் காண்குவன் என்பது பெறப்பட்டது. (11)

(இ-ள்) ஒப்புயர்இல்லாத — தனக்கு மேலாக ஒரு உவமையும் உயர்வுத்தன்மையும் இல்லாத, சுதந்தரன்-சுதந் திரம் உடையவன் (தன்வயமுடையவன்) எல்லா உயிர்க்கும் —ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் இறுதியாகஉள்ள அனைத் துயிர்கட்கும், தப்பா(த) வியாபகன் — தவறாத எங்கும் நிறைந்த தன்மை யுடையவன் யாவன், ஏ, தான்—அசை நிலைகள் (எ—று)

குறிப்பு:— இறைவன் தனக்குவமை இல்லாதான், ஒப்புடையவன் நல்லன் என்னும் அடிகளால் மேம்பட்டவன் என்பது குறிக்கப்பட்டது. சுதந்திரன்—தன்வயமுடையவன், வியாபகம்—நிறைவு. (12)

(இ-ள்) பரிதிருத்தி நீங்காத அத்தன் — மேலான திருத்தித்தன்மை என்னும் நீங்காத பரமன், அலுத்த சத்தி யான்—அறிவில்லாத சத்தி தன்மையுடையவன், நித்தியா னந்தன்—எஞ்ஞான்றும் ஆனந்தமயமாக வுள்ளவன் (எ-று) (13)

(இ-ள்) இன்னது எனக்கில்லா விமலற்கு — இன்ன தன்மையை யுடையவன் என்று சொல்லப் பெறமாட்டாத தூய்மை யுடையவனுக்கு, அநந்தசத்திமான்—எண்ணில்லாத சத்திகளை யுடைய பரமனுக்கு, எட்டுகுணமும்—எட்டுகுணங் களும், என்றறிக—என்று அறிவாயாக (எ—று)

குறிப்ப:— இன்னது என்பது இனது எனஇடை குறைந்து நின்றது, விமலம்—தூய்மை (14)

(இ-ள்) அட்டகுணம் பெற்ருர்—எட்டுகுணங்களையும் அடையப் பெற்றவர் அவனுக்கு ஒப்பு—அப்பரம் பொருளுக்கு ஒப்பாவர், அன்று — அல்லர், அவன் அட்டகுணத்து விசிட்டம் உண்டு — அவனுடைய எட்டுகுணங்களிடத்து மேலான தெய்வத்தன்மையுண்டு. (எ—று)

குறிப்பு:— விசிட்டம்—மேம்பட்டநிலே, உண்டு—உள்ளது என குறிப்பு வினைமுற்று. (15)

(இ-ள்) ஊனம் விட்டபொழுது — குற்றம் நீங்கின காலத்து, விளங்கும்—விளங்கப்பெறும், குணம்—குணங்கள் ஊனம் ஒட்டாக்குணத்திறுக்கு ஒப்பு ஓ—எஞ்ஞான்றும் குற்றம் சேரப்பெருத இயல்பாகிய இறைவன் தன் குணங்களுக்கு ஒத்தல் கூடுமோ? கூடாது. (எ-று)

குறிப்பு:— அநாதி மலமுத்தனுக்கு அநாதியே உள்ள குணங்கள் எஞ்ஞான்று குற்றமில்லாதவை இயல்பாகவே பாசங்களையுடைய உயர்குணங்கள் குற்றமுடையவை என்பது போதரும் ஓ—வினுபொருட்டு (16)

(இ-ள்) அறிவு அலேத்தும் நித்தியம்—அறிவு முழுதும் என்றும் என்றும் உள்ளது, அநாதியே—அநாதியேயாகும், போதம் அலுத்த சத்தி—போதமானது அலுத்தசத்தியாம், ஆங்கு திருத்தியார்—அவ்விடத்தே திருப்தியாக உடையவர் யாவரேயோ (எ—று)

குறிப்பு:—அறிவு—அறிவது, போதம்—அறிவிக்கு விடயமாய் இருப்பது, யார்—வினுவினைக் குறிப்பு (17)

(இ-ள்) விசுத்தம் சுதந்திரம்—விசுத்தமான சுதந்திரமாம், அனந்தசத்தி வீறு—அனந்த சத்தியானது வீறு உடையது, என்று—என்று கருதி, இசைத்த—கூறப்பட்ட, குணம் எட்டு—குணங்கள் எட்டும், ஆதி முத்தர்க்கு—ஆதியாகிய பரம் பொருளுக்கு ஆம் (எ—று)

குறிப்பு:— முத்தர் — விடுபட்டவர், ஆதி — முதற் பொருள், விசுத்தம்—நிர்மலம், வீறு—பெருமை. (18)

(இ-ள்) இயற்று தம் சத்தி இலங்கியும் — இயற்றுத லைச் செய்கின்ற தம்முடைய சத்தி விளங்கப் பெற்றும், முத்தர்—விடுபட்டவர்கள், அற்றே இயற்றார்—பாசம் நீங் கப்பெற்றே, யாதொன்றனையும் இயற்றாராகுவர், காண் இயம—அசைநிலைகள் (எ—று)

குறிப்பு:— இயற்றல்-செயலினைப்புரிதல், சத்தியோடு கூட விளக்கமுற்று பாசனைக்கும் அற்றவர் யாதொன்றனை யும் அறியாமல் வாளாயிருப்பர் என்பது போந்தபொருளாம் (19)

(இ-ள்) முந்திய கர்த்தா—முற்பட்ட முதல்வன், சத் தன்—அறிவுத்தன்மையுடையவன், ஆதிமுத்தன் — முதல் வனும் விடுபட்டவனுமாவன், மும்மலத்தால் — மூவகைப் பாசங்களால், பிந்தியகர்த்தா — பிற்பட்டவனாகிய கட்டுப் பட்டுள்ள தலைவன், உடல்பெற்றான்—போகங்களை நுகர் வதற்கேற்றதனுவினை பெற்றுள்ளான் (எ—று)

குறிப்பு:- பாசம் நீங்கப் பெற்றவருக்கு வினைப்போகங் களைப் புசிப்பதற்குரிய உடலினைப் பெறான். பாசத்தால் கட் டுண்டவன் வினைப்போகங்களைப் புசிப்பதற்குரிய உடலினை எடுப்பன். (20)

(இ-ள்) முந்தினனும் — முற்பட்டவனும், பிந்தின னும் அல்லன் — பிற்பட்டவனும் அல்லாதவன், ஆதிமுத் தன் — ஆதியாகிய முதல்வன், இந்தநிலை—முற்பிற் கூறு பாடல்லாத இந்தத் தன்மையே முத்தியென எண்—வீடாகிய பேரின்ப நிலையென்று கருதுவாயாக.

குறிப்பு:— இறைவன் நிலை முத்திநிலையாம் இறை வனேவெனில் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்

பொருளாய் பின்னைப்புது மைக்கும் பேர்த்தும் அப்பெற்றிய ளுருவன் என்பதும் ஈண்டு கருதற்பாலதாகும் முத்தி—விடு பட்டநிலை. (21)

(இ-ள்) உத்தமன் அநாதி முத்தன்—முதனிலையுள்ள வன் அநாதி முத்தனுகிய இறைவனும், ஆதிமுத்தன் ஓதுங் கால் மத்திமன் — ஆதிமுத்தனுகிய பாசமற்றவன் கூறு மிடத்துநடுத்தரபட்டவனுவன், அதமன் பெத்தன்கான்— பாசநீக்கம் அறப்பெருதவன் கடைநிலைப்பட்டவனுவன்.

குறிப்பு:— இப்பாட்டால் இறைவனிலையும் இறைவ னருள்வயப்பட்டு வபாசநீக்கமுற்ற ஆன்மாக்கள் நிலையும் இறைவன் அருள்வாய் படாமல் பாசநீக்கம் அறப்பெருமல் பிறந்திறந்துழதலைச் செய்யும் ஆன்மாக்கள நிலையும் கூறப் பட்டதாம் இவர்கள் முதல், இடை, கடை நிலையினராவராம் உத்தமம்—முதனிலை, மத்திமம்—இடைநிலை, அதமம்— கடைநிலை. (22)

(இ-ள்) முத்திநிலை முன்னு மொழிந்தோம்—முத்தி யாகிய பேரின்ப நிலையை முன்னரும் சிறப்பித்துக் கூறினேம், அதுதனையும்—அங்ஙனம் கூறிய பெற்றிமையையும், புத்தி பண்ணி—நின் அறிவிலே உறுதியாகப் பற்றி. நின் துயக்கம் போக்கு—உன்னுடைய மனத்தின்கண் உள்ள மயக்கமாகிய அறியாமையினை போக்கிக் கொள்வாயாக (எ—று)

குறிப்பு:— யாம்—எழுவாய், மொழிந்தோம்—பயனிலை, முத்திநிலை-செயப்படுபொருள், துயக்கம்—கலக்கம், பண்ணி பணி என இடைக்குறைந்து வந்தது (23)

(இ-ள்) இந்த இயல்—இங்கு குறிக்கப்பட்ட பாடாண வாதி சங்கற்ப நிராகரணமாகிய இலக்கணத்தை, ஆய்ந்தறி வார்—ஆசாரியர்பால் கேட்டுத் தெளிந்து ஆராய்ந்தவர்கள், சித்தாந்தம்—முடிவு யெனக்கொண்டு, மாசனைத்தும்—உளக் குற்றம் முழுதும், காய்ந்து—வெறுத்தொழித்து, ஈசன் கழல்

அடைவார்—இறைவனுடைய திருவடிப் பேற்றினை அடைவார்கள் என்பதாம் (எ-று)

குறிப்பு:—திருக்குறள் கடவுள் வாழ்த்தில் இறைவன் றிருவடியை மனத்தால் எண்ணி வாயால் வாழ்த்தி காயத்தால் வணங்கி அடையவேண்டுமென கூறப்பட்டுள்ளமை ஈண்டு கருதற் பாலதாகும். (24)

இரண்டாவது

பாடாணவாதி சங்கற்ப நிராகரண முற்றும்.

ஆக செய்யுள் 147.

உ

திருச்சிற்றம்பலம்.

சங்கற்ப நிராகரணம்

உரை நடை.

அயிக்கியவாதி சங்கற்பம்.

திருமாலறியாப் பெரியோனாகிய பரமசிவன் கூறிய பதி பசு பாச உண்மையை உள்ளபடி சொல்லுவாம்:—பதி ஒருவன் பசுக்கள் கணக்கற்றவர்கள்; பாசமானது மாயை, வினை என்றிரு வகைப்படும். அம்மையப்பன் உயிர்களுக்கு இருவினைக்கீடாகத் தனது அருளால் மாயையினின்று உடம்புகளைப் படைத்துக் கொடுப்பன். கதிரவனிடத்தே மேகஞ் சேர்ந்தபோது அதன் ஒளி குன்றினாற்போல, சுத்த அறிவுடைய ஆன்மாவை உடம்பு பொருந்தி அவ்வறிவு குன்றும்படி நிற்கும்.

இருவினைப் பயன்களை உடம்பு வாயிலாக உயிர்க்குக் கடவுள் புசிப்பிப்பன். புண்ணிய பாவப் பயன்களின் அனுபவம் சமமாக, அவை முற்றிலும் புசித்து ஒழிக்கத்தக்க நிலை வந்தபோது, அருள் வீழ்ச்சியுண்டாகும். இறைவன் திருவருட் டிருமேனிகொண்டு யாவருங்காண எழுந்தருளி, அழுக்குப் புடவையைத் தூயதாக்குதல் போல ஆன்மாவைச் சுத்தப்படுத்தி அறிவளிப்பன். ஆன்மாவானது குற்றங்களெல்லாம் நீங்கப்பெற்று நீரும் நீரும் சேர்ந்தாற் போலச் சிவனறிவோடு தன்னறிவு கூடப்பெறும். அதுவே அறிஞர் முத்தியாமென்ப.

மறுப்பு.

சுத்தமாய் இருக்கும் உயிரின் அறிவைப் பாசம் எவ்வாறு பொருந்தும்? மாயையினுலாகிய உடம்பு புண்ணிய பாவங்களுக்கிடாக அமைவதாயின் புண்ணிய பாவங்கள் உடம்பில்லாமல் எவ்வாறு செய்யப்படும்? ஆதலால், மாயா மலம் முன் ஏற்பட்டதா? கன்ம மலம் முன் ஏற்பட்டதா? அவைகள் உயிரைச் சேர்வதற்குக் காரணம் வேண்டும். வெள்ளையுடையில் அழுக்கேறினுற் போல, இயல்பாகவே பாசங்கள் உயிரைப் பொருந்து மென்னில், முத்தி பெற்றவரையும் பாசங்கள் போய்ப் பொருந்தவேண்டும். அப்போது முத்தியாற் பயன் யாது?

உடம்பும், மனமுதலிய கருவிகளும் உயிரைப் பிரிந்த இடத்து உயிர் ஒன்றையும் அறியாது கிடப்பதையும் அவை கொண்டே உயிர் பொருள்களை அறிவதையும் நீ கண்டிருக்கிருயல்லவா? நன்ருக அயர்ந்து தூங்கும்போது, அருகே பாம்புக் கூட்டங் கிடந்தால் அஞ்சாதும், நவமணிக்குவியல்கள் கிடந்தால் விரும்பாதும் உயிர் இருத்தற்குக் காரணம் யாது?

ஒருவனிடத்தில் ஒரு மோதிரத்தைக் கொடுத்து மீள வாங்கிக்கொண்ட பின்னும், அதனை மறந்து மோதிரக்காரன், அதனை வாங்கி மீளக் கொடுத்தவனிடம் மோதிரம் எங்கே யென்று கேட்பதற்குக் காரணம் யாது? இவற்றிற்கெல்லாம் காரணம் அறியாமையென்னில், அவ்வறியாமையை எது விளைக்கிறதோ அது ஆணவமலம் என்றறிவாயாக.

இனி, முத்திநிலையில், உயிர்தானே அறிவு வடிவாயிருப்பின், வேருரறிவோடு அதுகூட வேண்டியது எதற்கு? ஒளியும் ஒளியும் கூடினுல் மிகுந்த பிரகாச முண்டாம் என்னில் உயிரினறிவும் இறையறிவும் நீரும் நீரும் போல ஒரு தன்மையன என்று அறிஞர் கூறவில்லையே. இறைதானே

எல்லாம் அறியும், இறை அறிவிக்கவே உயிர் சார்ந்துநின்று ஒருபொருளை யறியும். மாயையும் வினையுங் கூடுவதன் முன் சுத்த அறிவாயிருப்பதென்ற உயிர் ஏன் இறையைக்கூடி இன்புறவில்லை. நீரும் நீரும் கூடும் உவமை குடாகாயமும் மகா ஆகாயமுங் கூடுவது போலு மென்ற மாயாவாதியின் கருத்துடையது. நீயும் மாயாவாதி யாவாய் ஆதலால், அக் கருத்தை விடுத்து உண்மை தெளிக.

பாடாணவாதி சங்கற்பம்.

உயிர்களின் மூலமலமாகிய ஆணவ மலத்தைப் போக்குவ தற்கு மாயை அவற்றைப் பொருந்தும். உயிரின் வினைக் கேற்றபடி உடம்பை இறைவன் உயிர்க்குக் கொடுப்பன். உடம்பைப் பொருந்தி உயிர்கள் இருவினைப் பயன்களை அனு பவிக்கும். அனுபவிக்குமிடத்து ஆணவ மல மறைப்பால் உயிர்கள் துன்புறும். கண் பார்வையைக் காசநோய் மறைத் தாற் போல ஆணவம் உயிரறிவினை மறைக்கும். அதனாற் பிறவித் துன்பம் மேன்மேலுளதாகும். அத்துன்பம் நீங்கித் தூக்கத்தில் மக்கள் துயரற்றுக் கிடப்பதுபோல, உயிரானது சுட்டிக் காணும் அறிவு யாதுமில்லாமல் இன்ப துன்ப நுகர்ச்சியில்லாது கிடக்கும் நிலையே முத்தியாகும்.

மறுப்பு.

பாடாணவாதியே, நீ கூறுமுத்தி ஆணவ மலத்தோடு கிடக்குங் கேவல நிலை போல்வது. ஐம்பொறி முதலிய கருவி கள் உயிரறிவுக்கு விளக்கந் தருவதால், உயிர்கள் கருவிக ளோடு கூடியபோது ஆணவமல மறைப்பு எவ்வாறுளதா மென்று, நீ விளக்கவில்லை. கருவிகள் நீங்கியபோது உண் டாகும் துன்பமும் நல்லதென்னலாம். கண்ணிற் படலத்தை மருந்தினல் நீக்கியகாலை, சுகம் உண்டாகலின் என்க. கருவி களை மீட்டுங் கூடியகாலை உண்டாகும் இன்பம் அதுபோல் வது. காட்சியில்லா நிலையும், இன்ப துன்பங்களில்லா நிலை

யும் முத்திநிலையாம் என்னில், மரணமடைந்தோரும் கருவை யடைந்தோரும் மரமாக நிற்கப் பெற்றாரும், முத்தியடைந்த வராதல் வேண்டும். அத்தகைய முத்தி பெறுவிப்பதற்கு ஆசிரியன் வேண்டியதில்லை. ஆணவத்தோடு கூடிய கேவல நிலையில் அறிவு விளங்கப் பெறாத துயரம் உள்ளதாகும். அதுபோலக் கல்லுப்போலக் கிடக்கும் நிலையிலும் அத்துன் பம் உண்டென்றறிக.

பேதவாதி சங்கற்பம்.

செம்பின் களிம்பு இரத குளிகையினால் நீங்கிப் பொன் தன்மை ஏற்பட்டாற் போல, தம்மைப் பற்றிய பாசங்கள் இறையருளால் நீங்கப்பெற்று, உயிர்கள் அழியாத, தூய முத்திநிலையை யடைவர். உயிர் பெறுவானும் முத்திபேறு மாக இருக்கும்.

மறுப்பு.

எல்லா நூல்களும் பதி, பசு, பாசம் அழிவில்லாதன வென்று கூறிய உண்மையை மறந்து, பாசநீக்கம் செம்பிற் களிம்பு நீங்குவது போல்வதென்று கூறுவது, சுருதிக்கு மாறாகும். இரத குளிகையாற் செம்பு தன்னிலை கெடுமிடத் தே செம்பு அழிந்து பொன் தன்மை புதிதாக ஏற்படுமாயின் பசு என்னும் தன்மை கெட்டுப் புதியதொரு தன்மை உண் டாகவேண்டும். அது உனக்கும் உடன்பாடன்று. செம்பு குளிகையும் ஆகாமல், தன்றன்மை கெட்டுப் பொன்னும் தன்மை போல, பசுவுந் தன்னைச் சுத்தமாக்கிய சிவ சொரூபம் ஆகாமல், தன்றன்மை கெட்டுவேறொரு தன்மையடைய வேண்டும். உண்மை அவ்வாறின்மையின், உன் கொள்கை பொருந்ாது.

சிவசமவாதி சங்கற்பம்.

பதி, பசு, பாசம், என்ற மூன்றிற்கும் பதி ஞானம், பசு ஞானம், பாச ஞானம் என்ற மூவகையறிவு எக்காலத்தும்

உண்டு பாச ஞானம், ஐம்பொறிகளின் அறிவு. அது உயிர்க்குப் பொருள்களை அறிவிக்கும். பசுஞானம் அவ்வறிவு கொண்டு பொருள்களை நுகரும். பாசஞானமும் பதிஞானமும் கூடாதபோது, கொழுந்து விட்டெரியாமல் அனலாய்க் கிடக்குந் தீயைப்போலப் பசுஞானம் ஒன்றையும் அறியாது கிடக்கும். உயிர்கள் பாசத்தோடு கூடிக்கலப்பு நிலையும் அது கூடாத கேவல நிலையையும்பெற்று நடக்குமிடத்துப் பக்குவம் வந்தபோது, வண்டானது பச்சைப்புழுவைக் கவர்ந்தாற் போலப் பதிஞானம் உயிரைக் கவர்ந்துகொள்ளும். அப்புழு வண்டை நினைந்து அதன் வடிவமடைந்தாற்போல, பசுவும் பதியைநினைந்து பதிவடிவடைந்து, முற்றறிவுற்று வண்டு வடிவடைந்த புழு வண்டின் தொழிலைச் செய்தாற்போல, இறைவனைப்போல ஐந்தொழில் செய்யவல்லதாம். அத்தகைய முத்தான்மாக்கள் கூட்டத்தில் முத்திபெற்ற உயிர் நிலை பெறும்.

மறுப்பு.

மூவகை ஞானமுங்கூடியே ஒன்றை உயிர் அறிய வேண்டுமாயின், கண் ஒன்றைப் பார்க்க வேண்டுமிடத்துச் சூரியனும் சந்திரனும் விளக்கும் ஆகிய மூன்றும் வேண்டுவனவாகும். உண்மையில் அவற்றுள் ஏதாவது ஒன்றே பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுகின்றது. மூவகைஞானமுஞ் சேர்ந்து ஒன்றையறியு மென்பதற்குவமை யாதுமில்லை ஒவ்வொன்றும் தனித்தனிப்பொருள்களை அறியும் என்னில், உயிர்க்கு வேருகவே சடப்பொருள்கள் இருப்பதால், உயிர் அவற்றைக் கருவிகளின் உதவியின்றித் தானுக அறியமாட்டாது. ஐம்பொறிகள் சடமாகையால், அவை எதனையுந் தாமாக அறியமாட்டாதனவே. பதிஞானம் பேரறிவாகையால் எதனையுஞ் சுட்டியறிய வேண்டியதில்லை. கருவிகள் நீங்கிய இடத்து, உயிர் செந்தழலை யொத்திருப்பின், தன்னோடுள்ள முதல்வனை அது அந்நிலையில் அறியாதிருப்பதற்குக் காரணம் யாதுமில்லை.

இனி முத்தியை நாடும் உயிர்க்கு ஒன்றுமறியாமற் கிடந்த பச்சைப் புழுவை உவமை கூறுதலும், ஞானோபதேசஞ் செய்யுங் குருவுக்கு அத்தகைய உரையொன்றும் நிகழ்த்தாத வேட்டுவனை உவமை கூறுதலும் பொருந்துமாறில்லை. வேட்டுவன் எடுப்பதே உபதேசம் என்னில், உபதேசங் காரணமாக உயிர்ஞானம் பெற்றுச் சிவசொரூபம் உற்றாற்போல, வேட்டுவன் எடுத்த காரணத்தால் மயிர்க்குட்டிப்புழு வேட்டுவனைப்போலப் பறவையாய் விட்டதென்று சொல்வாரில்லை. புழுவண்டாதல் அச்சுமாறிப் பிறத்தற்கு உவமையாகுமன்றி உயிர் முத்தியடைதற்கு அது உவமையாகாது. புழு நினைவாற்றலால் வண்டாயிற்றென்பது சாரூபப் பயன் தரும். யோகத்திற்கு உவமையாயினும் அது ஞானத்திற்கு உவமையாகாது. சிவசொரூப மடைதல் ஞானப்பயனென்று ஏன் சொல்லுதல் கூடாதெனில், உயிருஞ் சிவமு மொன்றுபட்டிருப்பது ஞானமாமேயன்றி வேறுபட்டிருத்தல் ஞானநிலையாகாது. நீ சொல்லும உவமையால் முத்தியில் ஒரு உடம்பு உண்டென்பது ஞானமாமேயன்றி வேறுபட்டிருத்தல் ஞானநிலையாகாது. நீ சொல்லும் உவமையால் முத்தியில் ஒரு உடம்பு உண்டென்பது பெறப்படும். அப்போது உயிர் சிவத்தோடு கூடாதிருப்பதோடு, புழுஉண்டானபின் அதற்கு முன்னுணர்ச்சி யில்லாமையால் உயிர்க்கும் அறிவுமாறுபடும் என்பது பெறப்படும் அது ஞானத்திற்கு மாறாகும்.

இனி, இறைவனுக்கியல்பாயுள்ள ஐந்தொழிலை அருள் பெற்ற உயிர்இயற்றுமென்று சொல்லுவது குற்றமென்று பெரிய நுண்ணிய நூல்கள் இயம்புதலின், அவ்வாறு நீ கூறுதல் தகாது. திருநாவலூரர் முதலையுண்ட பாலனை அழைத்தாரென்னில், அவர், இறைவனைப் பிள்ளை தரும்படி வேண்டினரே யன்றித் தானாக யாதுஞ் செய்யாமை அறிக; ‘கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே’ என்றது காண்க. முதல்வனது தன்மையை அடைந்தவரே ஐந்தொழில் செய்வர்; இரும்பு தீயைப்பொருந்தி அதன்

வடிவுற்று அதன் தொழிலையுஞ் செய்வதுகாண்க என்னில், தண்ணீர் தீயொடு பொருந்தி வெம்மையுற்றாலும், வைக்கோல் முதலியவற்றைத் தீப்போல வெந்நீர் சுட்டெரியாமைக்குக் காரணம் என்னை? தீ தனித்து நின்றுஞ் சுடும் என்னில், அது தனித்து நிற்பது எங்கே காணப்படும்? தீ ஒன்றைச் சார்ந்து நில்லாது தன்றொழில் நடத்துவதில்லை. தீயானது இரும்பைப் பற்றிநின்று தன்றொழில் செய்யாநிற்கவும், தீயின் தொழிலை இரும்பின்றொழில் என்பது எவ்வாறு பொருந்தும்?

பேய் ஒருவனைப் பிடித்தபோது பேயின் செயல் பிடிபட்டவன் செயலாமல்லவா என்னில், பிடிபட்டவன் மூலமாகப்பேயின் செயலே நிகழ்தல் போல, சிவம் ஆன்மாவிற் கலந்து செய்யுந் தொழில்கள் சிவத்தின் செயலாமன்றி ஆன்மாவின் செயலாகா தென்றறிக. சிவன் செயல் நிகழ்தற்கு முத்தியுற்ற உயிர் உரிய வாயிலாம் என்னில், பேய் நீங்கியபோது, விடுபட்டவன் செய்யுஞ் செயல் பேய்ச் செயலாவதில்லை, ஆதலால் முத்தியுற்ற உயிரின் செயலெல்லாம் சிவன் செயலே யென்பதெவ்வாறு? பேய் பிடித்தபோது, நிகழும் பேய்ச்செயலைப் பிடியுண்டவன் தன் செயலென அறிவதில்லையாயின், வைக்கோலினிடத்திற் பற்றிய தீயின் தொழில், தீயினதேயன்றி வைக்கோலினதாவதில்லை. அது போல உயிரிற்கலந்த சிவன் செயலுமாமென அறிக மேலும், என்றும் பாசபந்தத்துட்படாத இறைவன் செயலைப் பந்தத்தினின்று விடுபட்ட உயிர் எப்போதுஞ் செய்யவல்லதா?

இனி, முதல்வனைப்போல உயிர்கள் முற்றறிவுடையன என்னில், உயிர்கள் சிற்றறிவுடையன என நூல்கள் கூறுவது தவறாகும். பேயின் தன்மைபிடி பட்டவனுக்கு உண்டாமென்னில், பேசும் வன்மையும் கண் பார்வையுமில்லாத ஒருவனை அவற்றையுடைய பேய்பிடித்தபோது அப்பேய் அவனைப் பேசவும் பார்க்கவுஞ் செய்யவல்லதா? பேய் அவ்வாறு செய்யாவிடில், பேயின் தன்மைமுழுவதும் பிடிபட்டவனுக்கு

உண்டென்பதெவ்வாறு ? நாழியைக் கடலில் எவ்வளவு அமிழ்த்தினும் கடல் நீர் முழுவதையும் நாழிமுகந்து கொள்ள முடியுமா ? ஆதலால் உயிர்க்கு உள்ள அறிவே திருவருளால் விளக்கம் அடைவதன்றி, உயிர் முதல்வனது முற்றறிவைப் பெற்றுவிடும் என்பது பொருந்தாது.

இனி, உயிர் முத்திநிலையிற் சிவனோடு ஒன்றுவதில்லாமல் உடலோடு சீவன் முத்தி மாத்திரம் உடையதென்னில், அது சிவத்திற்கு ஒத்த நிலையாவதில்லையே. அடியார் கூட்டத்திருத்தல் சாலோகமோ, சாயுச்சியமோ ? அது சாயுச்சியம் என்பையாயின், பந்தம் நீங்கிய உயிர் சிவத்தோடு நீங்காதிருப்பது சாயுச்சியமாதலின், அவ்வாறு அறிவுக்கறிவாய சிவத்தோடு உயிர் கலவாமல், முத்திபெற்ற பெரியாரோடிருப்பதற்கு உடலின உயிர் அவாவி நிற்கும். உடலோடிருத்தல் சீவன்முத்தி; உடலின் நீங்கிய நிலையே மேலான பரமுத்தி யென்று நூல்கள் கூறவும், நீ சீவன் முத்தியே மேலான முத்தியென்றல் எப்படிப் பொருந்தும் ? முத்தி பெற்ற உயிர்களின் உடல் சுத்த மாயா சம்பந்தமுடையது, மயக்கந்தரும் அசுத்தமாயா சம்பந்தமுடையதன்றெனில், நீ சொல்வது வேப்பமரத்தின் அடிக்கட்டை கசக்கும், அதன் கொம்பு நுனித்தளிர் கசப்பதில்லையென்று கூறுவதுபோலும் முத்தர் தாம் விரும்பிய உடம்பை எடுத்துக்கொள்ளுவர் எனில், அவ்வுடம்பெடுத்தற் கேதுவாய மலமாயா கன்மங்கள் முத்தரைவிட்டு ஒருக்காலும் நீங்குவதில்லை யென்பது கருத்தாகும். நீ சொல்லுமுத்தி பதமுத்தியே, பரமுத்தி யாகாது என்றறிக.

சிவசங்கிராந்த வாதம்.

உயிரானது நீங்காத ஒளியுடைய விளக்குப் போல உள்ளது அதற்குச் சுட்டியறியும் அறிவு கிடையாது. இறைவன் தனக்கென ஒன்றையும் அறியவேண்டிய காரணம் இல்லை. காந்தம் விகாரமில்லாது நிற்க, அதன்முன் இரும்பு

தொழிற்படுதல் போல, விகாரமில்லாத உயிர் முன்னிலையில் பிராணவாயு உடலைக் காரியப்படுத்தும். கிணற்றில் நீர் இறைக்கும் பூட்டையின் பல பகுதிகளும் தொழிற்பட்டாற் போல, ஐம்பொறிகள் தமக்குப் புலனாகின்றவற்றை அனுப விக்கும். அவற்றிற்கு முன்பாகப் புலன்களை அகக்கருவிகள் உணரும். அகக்கருவிகளின் உதவியில்லாமல், ஐம்பொறிகள் புலன்களைப் பொருந்தமாட்டா. பிராணவாயு பிரிந்தால், உடல் தொழிலின்றிக் கிடக்கும். இவ்வாறு உயிர்முன் உடல் தொழிற்படுங் காலத்தில், ஆணவ மலம் நீங்குதற்குரிய பக்கு வம் வந்தபோது, கண்ணாடியிற் பிரதிபிம்பந் தோன்றுவது போல், இறைவனது திருவருள் உயிரினிடத்திற் பிரதிபலிக் கும். அப்போது விறகினிடத்தில் எழுந்தீயால், விறகு அழி வது போலவும், உப்பளத்திற்போட்ட புல்லும் வைக்கோ லும் தந்தன்மை கெட்டொழிவது போலவும், உயிர் தன் தன்மை கெட்டு அருள் வடிவாய்விடும். அதனாற் பசுகர ணங்கள் சிவகரணங்களாக மாறி உயிரறிவு இறையறிவோடு கூடி ஒன்றாய் விடவே, உயிர்க்குயான் எனது என்ற உணர்ச்சி இல்லையாகும்.

மறுப்பு.

உயிர் விளக்குப்போ லொளிர்வதெனின், அதன் கண் அறியாமை யேது? அது அறிவிலதெனின், ஒளியென்பதற் கேதுவென்னை?

பிராண வாயுவே (உயிர்க்காலே) உடம்பை யியக்குமா யின், துயிலும்போது பிராணவாயு இயங்கியும் உடம்பு இயக் கம் பெருமைக்கு காரணமென்னை?

மனம், பொறி, புலன் இவற்றைத் தொடர்பு படுத்திக் காரியப்படுத்த உயிருஞ் சடத்தின் றன்மையை யுடையதாய்ச் செயலற்றுக் காந்தம் போலிருப்பதெனின், அறிவுப் பொரு ளின் தொடர்பே உடம்பிற்கு வேண்டியதின்றே.

பூட்டையானது அதிற் பூட்டப்பட்ட காளைகளால் தொழிற்படுதலால், நீ கூறும் உவமை செயலற்றிருக்கும் உயிர்க்குப் பொருந்தாது.

ஐம்பொறிகள் புலன்களை நுகருமாயின், ஐந்தும் ஒரே பொழுதிற் றத்தம் புலனை யொருங்கறியாமைக் கேது வென்னை? இலை, மலர், காய், கனியென்பன, ஒரு மரத்திலே வெவ்வேறு காலத் துளவாதல் போல, ஐம்பொறிகளும் ஒவ் வொன்றாக ஒவ்வொரு காலத் தறியுமென்னில், ஒரு பொறி யறிந்ததன் பயனை மற்றொரு பொறி நுகராமையாலும், ஐம் பொறி யுணர்வின் பயனை ஒருங்கு நுகரும் உயிர் வேறுண் மையின், ஐம்பொறிகள் நுகர்ச்சியுடையன வென்பது தவறு. மேலும், இருவருடைய ஓசையை இரு காதிலுங் கேட்டும், ஒருவர் செப்பியதை யறிந்தும் மற்றொருவர் செப்பியதை அறியாது மிருத்தல் காணப்படுதலின், பொறியினைச் சார்ந் தறிவது உயிரென்றுய்த்துணர்க.

இவ்வாறே அந்தக்கரணங்களின் றொழிலும் உயிரினதே யெனத் தெளிக.

கண்ணாடியை உயிர்க்கு உவமை கூறல் பொருந்தாது. கொடுத்ததைக் கொள்ளுந் தன்மை உயிர்க்கில்லை. தீ விறகை எரித்து விடுதல்போல திருவருள் உயிர்த்தன்மையைத் தொலைத்து விடுதல் இல்லை- அங்ஙனமாயின் திருவருட் பேற்றினாற் பயனிலதாம். உப்பளத்துப் புள்ளும் வைக் கோலும் உப்பின்றன்மை பெறுமேயன்றி ஒழிந்து கெடுவ தில்லை. அங்ஙனம் கொடுத்ததைக் கொள்ளுந்தன்மை உயிர்க் கில்லை.

பசுவின் கரணங்களென்பன மாயையிலாய கருவிகள்; அவை திரிபுணர்ச்சி பயப்பன. அவை திருவருளின் றன்மையைப் எவ்வாறடைதல் கூடும் ? சடமாயவுடம்பு தன்னின் வேறுபட்ட இயற்கையுடைய திருவருளின் றன்மை யைப் பொருந்தாது. அருளுருவம், மாயா இருளுருவமா

காது. பொறிகளினுதவியின்றி உயிர்திருவருளை யறியா தென்பது தவறு. அது எவ்வாறெனில், அது ஞானம் பெற்றார்க்கு விளங்குமன்றிப் பிறர்க்கு விளங்காது. அது ஒருவனுமொருத்தியுங் கூடி நுகர்ந்த இன்பத்தை அலியாயுள்ளா ரறியாமை போலுமென்க. "ஐம்புலன்காணவாராய்" 'கரணங்களெல்லாங்கடந்து நின்ற கறைமிடற்றன்' "ஐயறிவின் அப்புறத்தானும்" என்ற திருவாக்குக்களின் பொருளை உற்று நோக்குக.

பசுகரணங்கள், சிவகரணங்களாக மாறினும், கரணங்கள் கொண்டறியப் படுவன மாயையின் காரியங்களேயன்றித் திருவருளாகாது.

அருளும் உயிருமாகிய இருவேறு முதல் ஒருமுதலாயினன்றி அறிவு ஒன்றாகாது. அங்ஙனம் இருமுதல் ஒருமுதலாதல் சற்காரியவாதத்திற்கிழுக்காம்.

ஈசுர அவிகார வாதம்.

பல துளைகளையுடைய குடத்துள் இருக்கும் விளக்குப் போல ஒன்பது வாயில்களையுடைய உடம்பில் உயிர் அறிவாய் இலங்கும். ஐம்பொறிகளுள் ஒன்றறிந்ததை மற்றொன்றறியாமையின், அவ்வப் பொறிகளைக் கலந்தே உயிர் விடயங்களை நுகரும். உயிரானது பொறியின் வாயிலாகவே ஒன்றை அறிந்து நுகரும்.

மலபரிபாகம் வந்தபோது, இருள் வீட்டிலுள்ள ஒரு பொருளை எடுத்தற்கு விளக்கினை முன்னர்க்கொண்டுபோவது போல, இறைவனது ஞானமாகிய விளக்கை அவனருளாற் பெற்று, நீர் போலவும் நிழல் போலவும் பொதுநிலையில் ஒருவன்பாலுஞ் சார்பின்றி நிற்கும் பரம்பொருளைத் தன்னையடைந்தார்க் கின்பங்கள் தருந் தலைவனை, வெயிலிற் சென்றோர் மர நிழலை அடைந்திருத்தல் போல, அடைந்து உயிர்கள் பேரின்ப மெய்தும்.

மறுப்பு.

உயிரானது அறிவாய்த் திகழ்ந்தாற் பொருள்களை யறியப் பொறிகளினுதவி யெற்றிற்கு? அறிவுதானே விளங்கப்பெற்ற உயிர், பொறிகளினுதவி யாற் பொருள்களையறியு மென்பது, கண்தெரிபவன்கையான்றடவிப் பொருள்களின் நன்மையறிந்து அவற்றின் பலபெயர்களைச் சொன்னானென் பதனேடொக்கும். புலனுக்கேற்ற பொறிகளைச் செவ்விதிற் புணர்த்துப் பொருள்களை யறிதலின், ஆன்மா அறிவுதிகழப் பெற்றதேயெனில், அது காரணமாக உயிரை அறிவு விளக்க முடையதாகக் கூறுதல் தவறு. அது ஏதாவது ஒரு பொறி யைக்கொண்டே வேண்டிய புலனை நுகரவேண்டும்.

காதினால் ஒலியை யறிதல் உலகத்திற் காணப்படுவதே யொழியக் காதினால் ஒருபொருளைக் காண்பார் யாருமில்லை யெனில், அறிவாய் விளங்கும் முதல்வன்மாட்டு அதுநிகழும். இறைவன் மன்மதனை யெரித்த காலத்தே, வைக்கோலை அவன் மீதிட்டுத் தீக்கொளுவவில்லை. கண்ணாற் பார்த்த மாத்திரத்தே அவன் எரிந்தொழிந்தான். நான்முகன்றலையை அரனார் வாள்கொண்டு வெட்டவில்லை.

இறைவனியல்பு அவ்வாறாயினும், உயிரினியல்பு அவ் வாறாகாமையின், உயிரும் இறைவனதருள் கொண்டே அருஞ் செயல் ஆற்றவல்லது. திருஞானசம்பந்தப்பெருமான் திருப் பதிகங்களை எழுதிய சம்பந்தசரணாலயர், திருப்பதிகப் பாட் டொன்றெழுதிய குறிப்பினை வீசிப்புத்தன் தலையை உருள் வித்தமை காண்க. அதுபோல உயிர் ஒன்றை யறிவதுந் திருவருட்டுணைகொண்டேயென அறிக. பொறிகளின் துணை கொண்டறியு மறிவு, அவற்றின் எல்லையுட்பட்டதாகலின், குற்றமற்ற அகண்ட அறிவு திருவருளாலன்றி உயிர்க்கு அமைதலில்லை.

இருளில் விளக்கினைப்பயன் படுத்துவதுபோல, இறை வனது ஞானவொளிகொண்டு, உயிர்தானே உண்மையுணரு

மென்பது பொருந்தாது. கருவிகள் அறிவிலாதன; அவை யொழிந்த உயிர் துரியநிலையில் நிற்பது. ஆதலின் அத்தகைய உயிர் முதல்வனது ஞானத்தைத்தானே யறிந்து பயன் படுத் துமென்றுய் அது குருடர் பலர்கூடிக் கதிரவனுளி கொண்டு பெருவழியிற் சென்றூர்களென்பதனேடொக்கும். நீரையும் நிழலையும்போல இறைவன் இருப்பானென்னில் அறிவில் பொருள்களாய அவைபோல இறைவன் வலிதில் நம்மையாட்கொள்ளாது தானிருந்தவாறிருப்ப னென்பது போதரும். அங்ஙனம் அவனிருந்தால் நாம் உய்தல் அரிது; ஆதலால் நீ கூறுவது தவறு.

சுத்தசைவமென்ற சைவவாதம்.

சகலநிலையில் அறிவாயறியுமுயிர், கேவல நிலையில் அறிவற்றுக்கிடக்கும் ஆணவ மலத்தோடுள்ளது. இறைவன் கலை முதலிய கருவிகளைக் கண்ணுக்குக் காட்டாய விளக்குப் போல், உயிர்க்குக் கூட்டுவன். அவைகளைப் பொருந்தி, உயிர் இருவினைப்பயனை நுகருங்கால், வரும் பிறவிக்கு வினை யைத்தேடிக் கொள்ளும். பல பிறவிகளெடுத்து அலமருங் கால், மலபரிபாகமும் அருள் வீழ்ச்சியுமருவும். அப்போது அருள்வடிவாய முதல்வன் தோன்றி உயிர்செல்லு நெறிக் கேற்றவாறு, சரியை, கிரியை, யோகங்களில் நிறுத்தி, அவை முற்றித் தனிநிலையுங் கலப்புநிலையும் நீங்கவே, நீங்காத உயர் ஞானத்தை நல்குவன். அப்போது தன்னையும் தலைவனையும் அறிவையுஞ் சுட்டியறியாது, உயிர் சிவத்தோடுகூடி ஒரு முதலாகி விருப்பும் வெறுப்பும் அற்ற நிலையே முடிந்தகதியா மென்பது.

மறுப்பு.

அநாதியே உயிர் அறிவாயின் பொறிபுலனில்லாவிடத்து உயிர் அறிதல் கூடுமா? அறிதல் கூடாதாயின், உயிரி னியல்பு யாது? பொறி முதலிய கருவிகளோடு கூடிய போதறிந்தும், கூடாதபோது அறிவற்று மிருப்பது உயிரியல்

பென்னின், பொறிகளின் புணர்ப்பாலறிவும் அஃதின்மை யாலறியாமையுங் கூறின், அறிவுதோன்றி யழியும், மீண்டுந் தோன்றுமென்னுங்கணபங்க வாதம் உன்கொள்கையாமா ?

அல்லது முன்னொடு பின்மலைவுறும் இரு கருத்துக்களை நீ கூறியவனுவை. ஆணவமலம் இருள்போன்றது, இறைவன் பேரொளி மயன். உயிர் கருவிகளாலறிவது மயக்கவறிவு. அம்மயக்க அறிவு உயிர்க்கு நல்லறிவாக எவ்வாறிசையும் ?

இனி, நீ கூறுமுத்தியையாய்வாம். சத்திநிபாதமாய அருள் வீழ்ச்சி முந்தியதோ ? மலபரிபாக முந்தியதோ ? எது காரணம் ? எது காரியம் ? மலபரிபாகம், அருள் வீழ்ச்சிக்குக் காரணமென்னில் அம்மலபரிபாகம் வருவது எண்ணிறந்த உடம்புகளெடுத்து வருங்கால் இன்ன உடம்பு எடுத்த காலத்தில் வருமென்ற நியதிப்படியா ? நல்வினை தீவினை துலையொத்து நின்றபோதிலோ ? உயிர்க்குப் பிறவித்துயர் தோன்றிய பொழுதிலோ, இறைவன் அருள் புரியக்கருதிய எல்லையிலோ ? எப்போதெனக் கூறுக. இருவினையொப்பு ஏற்பட்டவிடத்து, மலபரிபாகம் வருமென்னில், இருவினை யொத்தலாவது யாது ? அருவாய வினைகளை துலையிலிருதட்டில் உலகப் பொருள்களை நிறுத்தல்போல, நிறுக்க முடியுமா ? புண்ணியம்-புண்ணியமாயும், பாவம்-பாவமாயு மிருத்தலால், ஒரு செயலே இரு தன்மையுடைய தாகாது! இருவினையொப்பு யாதெனத் தெளிவாகக் கூறுக. இறைவன் அருள் வடிவமுடையானென்னில், அழியாத் திருமேனியுடையவன், மாயையினுய உடம்பினைப் பொருந்தான். உயிர்களைக் காக்கப் பொருந்துவானென்னில், உயிர்குழாத்தில் ஒருவனுக இறைவன் கருதப்படுவன்.

சரியை, கிரியை, யோகமென்பவற்றின் பயனுக ஞானம் உளதாமெனின், அவற்றாற் பதமுத்திகள் மூன்றுங் கிட்டுமென, அருள்நூல்கள் கூறும் தேவார முதல்வர் மூவரும் சரியை, கிரியை, யோகங்களில் நில்லாமே, ஞானம் பெற்ற

தற்கேது இறைவனேயன்றி அந்நெறிகள் காரணமாகாமை தெளிவு. ஞானம் உண்டாவதற்கு நிமித்தமாமன்றி, அவைகள் முதற்காரணமாகா.

கருவியும் மலமும் நீங்கவே, அருளொளி யுளதாமென்றனை. மலத்தொடுகூடிய கேவல நிலையில் அருளொலி யுண்டாகாது. கருவிகளொடு கலப்புற்ற நிலையிலும் அது உண்டாகாதெனின், பின் எப்போது உயிர்க்கு இறையொளி யுளதாம்? தெளிவாக உயிரின் அனுபவத்தில் உடல். கரணம், உலகம், நுகர் பொருளாகிய இவற்றையறியும் அறிவே யுள்ளது. இவ்வறிவு நீங்க மேல்வரு மறிவு யாது? அதுவும் இவற்றைக் காணுமறிவா யிருப்பின், வீடு சேர்ப்பிக்கும் ஞானத்திற்கும், மாயையினுடைய பொருளை யறியும் ஞானத்திற்கும் வேறுபாடென்னை? இறை, உயிர், இறைஞான மென்றமூன்றுங் கூடுமென்றனை. இறை, இறையறிவு, உயிர், உயிரறிவு, பாசம், பாசஅறிவு எனப்பொருள் ஆறும். இவற்றுள் பாசம் நீங்கியது கூறினாய். உயிரறிவும், பாச அறிவும், எவ்வாறொழிந்தன வென்று நீ கூறவில்லை.

உயிரு முதல்வனும், முத்தியில் ஒரு முதலாமென்பது ஏகான்மவாதச் சார்புடைய கொள்கை. மேற்கூறிய ஆறு பொருள்களுள், பாசமும், பாசஞானமு மொழிந்தவிடத்துப் பொருள் நான்காம். பசுஞானமொழிய, நீ கூறிய மூன்றும் உள்ளன. பின்னர், பசு, பதியென இரண்டேநின்று, அத்துவிதக்கலப்பால் ஒருமைப்பட்ட தன்மையே, திருவாசகத்துள் ‘சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும்’ என்ற திருப்பாட்டிற் குறிக்கப்பட்டது.

சீவனும் சிவமுமொன்றாய விடத்தே, உவப்பில்லை யென்னில், இன்பம் பெறுமானில்லை யென்பதே முடிவாம். அதனாற் போந்தபயன் யாது?

பின் வீட்டில் உயிருஞ் சிவமும் எவ்வாறிருப்பவென்னில், அதுவும் பிறவும், அறியவிரும்பின், சிவப்பிரகாசத்தினைத் திருவருளால் ஆய்ந்தறிக.

நிமித்தகாரண பரிணாமவாதம்.

உலகம் யாவும் சிவவடிவமுஞ் சத்திவடிவமுமாமென்றறிக. (சிவம்அருவம், சத்திஉருவம்) உலகத்திலே ஒன்றையுஞ் சடமென்று கூறுதற்கிடமில்லை. அறிவுடைப் பொருளும் அறிவில் பொருளும், அறிவுடைய உயிரின் நுகர்ச்சிக்கண் ஒருதன்மையனவாயுள்ளன. இது வென்று சுட்டப்பட்டதொன்றை நுகருங்கால், அறிவு அப்பொருளேயாய் நிற்றலின் ஆண்டு அறிவென்றும், அறிவிலாப்பொருள் என்றும் பகுக்கப்படுமாறில்லை. பொன்னுக்கும் பணிக்கும் வேறுபாடிருத்தல் போல அறிவிற்கும் உலகிற்கும் வேற்றுமை ஒருவழியாகக் கூறுதலுண்டு. மாற்றின் தன்மை பொன்னுக்கும் பணிக்கு மொன்றுதல்போல இரண்டிற்கும் உண்மையில் ஒருதன்மையே யுண்டு. ஒன்று காரியப்பட்டது. மற்றொன்று காரியப்படாதது.

ஒன்ருகும், இன்னொன்று ஆகாதுஎன்ற நினைவு உண்மையுணராதோர்க்கே உளதாம்.

உண்மை தெரியாதோர் என்றமையால் உயிர்கள் பலவென்பது தோன்றுமாயினும், ஆராயுமிடத்து அவை சிவமுதலின் வேறல்ல பலவாகத்தோன்றும் வேற்றுமை நிலை உண்மையிலில்லை.

கண்ணினொளியைக் கண்ணிற்குரியதென்று செப்பின், நிறைந்த இருளிலுள்ள பொருளினை இன்னதென்று கண் காட்ட வல்லதன்று. மின்மினியைப் போலுமென்று கண்ணைக் கூறமுடியாது. ஆதலாற் கண்ணின் வடிவும், அதிற்படும் கதிரவனொளியும் சிவம், சத்தி என்பாருடைய நாடகமே.

"தானொருவனுமே பலவாகி நின்றவா" "ஊனாகி யுயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிறவனைத்தும் நீயே யானாய்" "கண்ணே கண்ணிற் கருமணியே" "தாமே தாமாகச் செய்யு மவன்" "நாமொழிந்து சிவமானவா" "காணரிய பழமாகிப் பழத்துள் நின்ற விரதங்கள் நுகர்வா னுந்தானே யாகி" "அறிவானுந்தானே அறிவிப் பானுந்தானே" "தாய் தலைப்பட்டங் குருகி யொன்றாய்" "நான் கெட்ட" என்றின்ன திருவாக்குகள் பலவாமாதலின், கொடுக்கும் பொருள், கொள்ளும் பொருள், கொடுப்போன், கொள் வோன், ஆய எல்லாம் ஒரு பொருளி னீரியல்பென உணர்க. பொருள்களும் அவற்றை நுகர்பவனும், சத்தி, சிவமெனும் உணர்ச்சி கைவருதல் எளிதன்று. நான் உயிர் அவன் கடவு ளென்னும் அறிவு இரட்டுற்ற பாவனை உண்டாக்குவதாற் குற்றமுடைத்து; தான் என்ற ஒரு முதல் அறச்சிவமாதல் சாயுச்சிய முடிவு,

அந்நிலையடையுமுன், முத்திக்கு வழியெனத் தானறிந்த ஒருவழியில் நின்று உடம்பையும் உயிரையும் கனவிலு நனவி லும் சிவத்தினிடத் தொருங்குவித்து ஒழுகுங்கால், கருவிக ளின் ஏற்றத்தாழ்விற் கேற்றவாறு நனவு, கனவு, சுழுத்தி, துரியம் என்ற அவத்தைகளை உயிர் பொருந்தி நிற்கும். கருவி களெல்லாம் கழன்றநிலை துரியாதீதம்.

ஆணவமலம் நீக்கமுறுங்கால், துரியாதீத நிலையிலுள்ள உயிர்க்குத் திருவருள் கருவிகளைக் கூட்டியபோது உயிரானது ஆணவம் நீங்கிக் கருவிகளோடுங் கூடி அறிவாய் நிற்கும். கருவி முப்பத்தாறோடுங் கூடிய நனவிலே அதீதத்தில் நிலை பெற்று நிற்பதே, சிவகதியாய சுத்தநிலையாம்.

நிராகரணம்.

உலகம் யாவுஞ் சிவமுஞ் சத்தியுமென்னில், முதல்வனே உலகிற்கு முதல்காரணமாக வேண்டும்.

அவனே நிமித்தகாரண மென்றுங் கூறுவாய், அவன தாற்றலே துணைக்காரணமெனின், இறைவன் ஒருவனே முதற்காரணமும் நிமித்தகாரணமும் துணைக்காரணமுமென நீ கூறின், அங்ஙனம் ஒருபொருளே முக்காரணமுமாயிருப் பதை எங்கேயாவது கண்டதுண்டா ?

இனி, முதல்வன் இயற்றும் ஐந்தொழில் தன்பொருட் டோ, பிறர் பொருட்டோ ? வினாகவோ ? என்ற வினாவிற்கு விடை யாது பகர்வாய் ? வினாயின், முதல்வன் தலைமைக் கும் முற்றறிவுக்கும், ஐந்தொழில் இழுக்காமல்லவா ? ஒப் பற்ற அறிவுந் தலைமையுமுடைய முதல்வன், மின்போலத் தோன்றிமறையும் உலகவாழ்க்கையைத் தம் பொருட்டுச் செய்தானென்றல் பழுது.

பிறர்பொருட்டு ஐந்தொழிலியற்றப் படுமென்னில், தனக்கு பேருகப் பிறரும் அவர்க்கு வேண்டிய பொருளும் அப்பொருட்குரிய கருவியும், அக்கருவிக்கு முதற்காரணமும் செயற்பாடுமென ஐவகை கூறின், நீ சிவமே யாவுமென்ற கொள்கை எங்நிலை யடையும் ?

இனி சித்தாகிய சிவம், அசித்தாகிய உலகத்தைத் தன் னிடத்தினின்றுந் தோற்றுவியாது உலகமுஞ்சித்தே யென் னில், உலகில் அசித்து என்பதுதான் யாது ? சித்தாயின், உலகிற்கு நிலையாமையில்லை யென்பதாம். உலகாய தரும், பூதக்கூட்டமானது நீர்க்குமிழிபோல நிலையில்லாத தென்பர். நீ அத்துணை நிலையாமையுள்ள உலகத்தை நிலையாய தன்மை யுடைய சித்தென்பாய். நீ கூறுவது உண்மையன்று.

இனி, சினர், சாவகர் முதலிய பிறமதத்தினரும், உடம் பில் ஓரறிவுண்டென்பர். அதனால் உயிருண்டென்பது போதரும். நீ உயிரின்றென்பதால், அவரினுமிழிந்த ஆராய்ச்சி யுடையாய் நீ கூறுவது காட்சிமுரண்.

நீ கூறுவதற்குச் சான்று பகர்வார் யாருளர்? சித்தின் சார்பால், உடம்புஞ்சித்தே யென்னில், சித்தாயசிவம் எங்கும் நிறைந்திருப்பவும், குடம், துணி முதலியனவும் உடம்பு போலத்திரிந்தலைவ தின்றி வைத்த இடத்திற் கிடப்பதேன்? உயிர், இயங்கியற்பொருளிற் செறிந்திருப்பதுபோல, நிலை யியற் பொருளிற் செறியாமை ஏன்? சிவமும் உடம்பிற் செறிந்திருப்பதுபோல, குடம் படம் முதலியவைகளிற் செறிந்திருப்பதில்லை யென்னில், உயிருடையுடம்புக்கும் பிறவற்றிற்கும் வேற்றுமைகூறி உயிருண்மையை நீ ஒப்பின வனுவை. அன்று, உவமை கூறின், உண்மை அஃதென முடிவு கட்டுதல் தவறும் எனின் உவமானமும் உவமேயமும் ஒருபொருளா யிருக்குமாயின் கொன்றை பொன்னைப்போலு மென்பார் இலராவர். பதியாகிய பரம்பொருள் எங்கும் நிறைந்து நிற்குங்கால், மக்கள் உடம்பின்கண், அது மர முதலியவற்றினும் அதிகமாகப்பற்றி நிற்பதற்கேதுவென்னை? பூதக் கூட்டுறவின் பேதம் அதற்குக்காரணமெனின், அப் பேதத்திற்கேது வென்னையெனின், அதற்கு ஏது வினை யெனில், வினையியற்றுவார் யார்? முதல்வனோ? முதல்வ னெனின் அது பித்தர் கூற்றுமன்றோ? வினை செய்வோன் கடவுளல்லன். உடல் சடமாகையால், வினையை வளர்க்கவும் வினைப்பயனை நுகரவுங் கூடாது. உடலில் நின்று வினைப்பய னுகர்தலும் அவத்தை யுறுதலும் கடவுளுக்கியை யாமை யான் காணப்படும். பொருளிற்குங் கதிரவனுக்கும் வேறாகக் கண்ணிருத்தல் போலப் பல கருவிகளினுதவிகொண்டு பொருள்களை யறியும் உயிர் உண்டென அறிக.

இதுவென்ற ஒன்றை அதுவாய் நின்றறிதற் கேதுவா யது மாயையினியல்பு.

இறைநிலை அருவமு முருவமுமா மெனப்பெரியோர் கூறுதலின், உலகில் அருவமெல்லாம் சிவம், உருவமெல்லாம் சத்தி யென்னில், இரண்டுமே மாயையின் காரியமேயெனத்

தெளிகின்றுயில்லை. உலகிற்கு முதற்காரணம் மாயையாதலின், உலகிலுள்ள அருவப்பொருள்களும் உருவப்பொருள்களும் மாயை நின்றெழுந்தனவே. அருவமாய வடிவும், உருவமாய வடிவும், மாயாகாரியமே ஆகும். எதுவும் ஆகாதென்பதில்லை யென்றகொள்கை உலகாயதனுடையது. அது ஞானிகளுக்கு ஆமெனில் கள், கொலை, களவு, வெகுளி, காமம்' என்றுமிவற்றைத் தவிர வேண்டும் என்னுதாரிலர். ஆயின் ஞானிகளுக்கு இவற்றுற் குற்றம் ஏருது என்னில், சோமபானம்; சுராபானம், முதலிய செய்யலாமென்று எந்த நன்னூல் கூறுகின்றது ? மறையோன் புலைச்சியை மருவலாமென்று சொல்லுவார் யார் ? இவையெல்லாஞ் செயற்கைக் கட்டளையாமெனில் சாதி நீதி கொள்ளாவிடினும், இயற்கை விதிகளுள்ளனவே. எருமையைக் காளை விரும்பாது, பசுவையே அது விரும்பும். ஆதலால், ஞானிகளுக்குச் செயற்கைக் கட்டளை யிலவாயினும் இயற்கையாகத் தீயவற்றை உள்ளம் நாடாதென்றறிக, அவர்களெல்லாஞ் செய்யலாமென்பது கருத்தன்று.

கண்ணிலுருவுங் கதிரொளியும் சிவன்சத்திநாடகமென்னில், அதற்குக் காரணமும் பயனுங் கூறவேண்டும். நீ கூறுவது நூன் முறைக்கும் உலகியலுக்கு மாறும். அறம், மறம், நன்மை, தீமை என்பதெல்லாம் பொய்யாம். சிவத்தின் வேருக உயிரில்லையாயின், அவற்றுற் பயன் யாதுமில்லை.

" தாஞெருவனுமே பலவாகி " என்றவிடத்து, ஆகியென்பது " ஆக்கி " என்ற பொருளுடைத்தாதல் கூடும். அல்லது இறைவனது இரண்டறக்கலந்த நிலை கூறியவாறும். குயவன், குடம், சால் முதலிய எல்லாம் ஆயினனென்றுற் பொருள் யாது ? குயவன் அவையாகான்—அவை குயவனுகா. இரண்டறக் கலந்த நிலை கூறுமிடத்து, வேற்றுமையுந் தெரித்தவாறு காண்க. வானுய், மண்ணுய், என்றவிடத்து, வானும், மண்ணும், வேறிருத்தலானே, அவற்

ரோடு கலப்புக் கூறப்பட்டது. அவைதானே முதல்வனென்னிற் கலப்பினைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. உலகெலாம் இறைவன் திருமேனி யென்ற கருத்துங்காண்க. முதல்வனேயின்றி ஒன்றுமியங்காதென்பது கருத்து. வினைப்பயன் உளவாதலும் அது நுகரப்படுதலும் இறைவனாலாதலின் "காயாகிப் பழமாகி" யென்ற சுருதி எழுந்தது. உலகமெல்லாவற்றையுந் தெளிவாக அறிவோனும், அறிதற் குரியார்க்கு அறிவிப்பவனும், அறிஞர்க்கறிவாய் நின்று அறிவானும், ஞானிகள் அறியப்படும் பொருளாய் நிற்போனும். இறைவன் என்றறிக.

கொடுப்பானுங் கொள்வானு மொருவனே யென்னில். நரகமென்பது கிடையாது, வேண்டும்போது புசிக்கலாம், நோயை நீக்கிக்கொள்ளலாம். அவ்வாறு உலகத்திற் காணப்படவில்லையே வேண்டியது வருவதில்லை, வேண்டாததை நுகரவேண்டியவிதி ஏற்படுகிறது. நோய்கள் விருப்பப்படி ஒழிவதில்லை. இவற்றால் வருந்துன்பத்தை உடையான் யார்? சிவமன்றெனில், உயிர்தானே அதனையுடையதாம்.

சத்தியுஞ் சிவமுந்தாம் எல்லாம் நுகர்வதென்ற உணர்ச்சி யார்க்குளதாம்? சத்தி சிவங்கட்கே அவ்வுணர்ச்சி யுளதா? சத்தி சிவங்கள் உலத்துன்பத்தை நுகருந் தன்மையுடையன வல்லவே. உலகை அறியுமிடத்துச் சுட்டியறியு மறிவு அவர்கட்கில்லையே.

எல்லாம் ஒன்றெனக் கூறும் நினக்கு நானென்னும் உயிரும், அவனென்னுஞ் சிவமும், நவையென்னும் குற்றமும், நலன் என்னும் நன்மையும் உயிர்சிவனாக வேண்டுமென்பதும் இல்லை. சிவனொடு கலத்தலைச் சாயுச்சியமென்றல், முப்பொருளுண்மை கொள்ளுவார்க்கே பொருந்தும்.

தானறிந்த நெறியில் நிற்றல் முத்திக்கேதுவாமெனில், வீடடைதல் அரியதாகாது, உலகாயதனும், சித்தாந்த முத்தி யெய்தலாமே,

சுவரின்றிச் சித்திரம் எழுதமுடியாது. கருவிகள் கழன்ற இடத்து உயிர் அறிவைப் பெறுதல் யாங்ஙனம்? கருவி கழன்ற அதீத நிலையில் சிவன் திருஞானம் நல்குமென்றல், இருளிற்கிடக்குங் குருடர்க்குக் கண்ணுடையான் விளக்குக் கொடுத்துதவிய தென்பது போலாம். அங்ஙனம் அறிவை நல்குதற்கு, இறைவன் வகைதெரியாதவ னல்லனே.

இனி, கருவிகளைக்கொண்டு அசத்தாய உலகினையறிந்து கொண்டிருப்பதைச் சிவஞானிகள் வேண்டமாட்டார். அவர்களே அவ்வாறிருப்ப, கருவிகளைக் கொண்டறியு மறிவுஞ் சிவமே யென்றனை. மாயப்பொறிகள் உலகை யறியாவாகலின், அவற்றின் வாயிலாகப் புலனை யறிவது சிவமேயென்று நீ கூறியது மாயாவாதிக்கு மொவ்வாது. எல்லாவற்றையு மறியும் பிரமம், கருவிகள் வாயிலாக அறிவதாக மாயாவாதி கூறுவதில்லை மாயாவாதி பிரமத்தை அறிவென்றும் உலகம் நிலையற்றதென்றுங் கூறினன். நீ எல்லாம் சித்தேயென்பாய். அவன் கருவி பதினான்கும், அவத்தை மூன்றுங் கூறினன். நீ சைவனுதலின், இருபத்திரண்டு கருவியும் ஐந்தவத்தையும் மும்மலமும் கடவுளுமுயிருமுள வென்று கொண்டாய். அவற்றையெல்லாம் விட்டு இப்போது எல்லாம் சிவமாய வொன்றே யென்று கூறுதல் தாயர், தங்கையர், தாதியர், தமக்கையர். ஆய எல்லாரும் விடயப்பார்வையாற் பெண்டிரேயெனக் காணுங் கழிகாமுகரது கொடுந்தொழிலை யொக்கும். உயிர்க்கறிவில்லை, பொறிவாயிலாக அறிவானுஞ் சிவனே யெனக்கூறிப் பொறிவழி யொழுகலை ஒழுக்கமாகக் கொண்டு, கட்டுநிலையிலும், முத்தி நிலையில் எண்மடங்கு அஞ்ஞானமுற்ருய். உன்னைக்குறைகூருது உனது அறியாமையையே குறை கூறவேண்டும். உனது அறியாமை நீங்க உண்மை கேட்பாயாக.

உரைநடை

சங்கற்ப நிராகரணம் முற்றிற்று.

௨

அநுபந்தம்.

இந்நிலவுலகில் " ஒன்பது மா நுடம் " என்றதனுல் மனி தப்பிறப்பினர் ஒன்பது வகையினராவர். இவர்களுள் வேதா கம முழங்குதலுடைய தேயத்திற் பிறந்தவர்களே பெருந் தவ முடையராவர். அவர்களே பரத கண்டத்திற் ருேன்றி னவர்.

இப்பரத கண்டத்துளுள் தென்னுடே மூர்த்தி தலம் தீர்த்தமெனுஞ் சிறப்புற்றுத் திகழ்வுறும். இங்குத்தான் தவச்சிரேட்டரும், அவதார புருடர்களும், திருமுறை யாசிரி யர்களும் தோன்றினர். இவர்கள் " நான் பெற்ற பேறு பெறுக வியவ்வையகம் " என்ருங்கு உலகிற்குத் தாங்கள் மெய்ம்மையினை கத்திய ரூபமாகவும், பத்திய ரூபமாகவும் ஆக்கி யருளியுள்ளனர்.

வேதாகமங்கள் இறைவனுல் அருளப்பட்டவை. இவை பொதுவுஞ் சிறப்புமாகும். இவற்றின்வழி முனிவரரும் பிற ரும் சாத்திர நூல்களையும் தோத்திர நூல்களையும் கண்டனர் இவற்றினை யாசிரியர்பால் கற்றுனரத்தக்கதும், பக்குவத்தால் உணரத்தக்கதுமாகும்.

மறையாதி நூல்கள் ஆரியமொழியில் உள்ளன. தமிழ் மொழியில் உள்ளன சித்தாந்த சாத்திரங்களும் புராணங் களும் திருமுறைகளும் பிறவுமுள்ளன.

இவ்வேதாகம சாத்திரங்களை யறிந்துய்தற்குரியர் மக்கட் பிறப்புற்றவர் சைவசமயமே நற்சமயமெனக் கொண்டொழு கல் வேண்டுமென அளவை நூல்களாகிய தருக்கநூல்கள் சாதிக்கும். இங்ஙனம் அளவைநூல் கொடு நிலைபெறுத்தப்

பெற்றது. இச்சங்கற்ப நிராகரண மெனுந்திப்பிய நூலாகும் பொதுவுஞ் சிறப்புமாகிய வேதாகமங்களை யாராய்ந்தறிதற்கு அங்கங்கள் உள்ளன. அஃதேபோல் சைவசாத்திரங்களை யாய்தற்கு அளவை நூல் வேண்டப்பெறும். மக்கட் பிறப்பினர் எது மேலானநெறி யெதுவென விழைகின்றபோது இது வேண்டப்படும்.

மதவாதியர் தத்தம் மதங்களே சாலச்சிறந்ததெனச் சாதித்து மக்களை கடைபிடித்தொழுகச் செய்வர். இம்மதக் கொள்கை எண்ணிறந்தனவாம். "சமய கோடிகளெலாம்" என்பது தாயுமானவர் பாடலாம். மக்கட்கு வகுக்கப்பட்ட அகவை நூறாகும். அதிற்பாதி உறக்கத்திடை மொழியப் பெறும். எஞ்சி நிற்பதில் பாலனாகவும், குமரனாகவும், காளையாகவும், வயோதிகனாகவும் சென்றுகழியா நிற்கும்.

இதனிடைத் திருவுங் கல்வியுஞ் செறிவுறப்பெற்று உடலினையும் உயிரினையும் பேண வேண்டியுள்ளது. அங்ஙிலையில் மக்கட் பிறப்புற்றவன்

"ஓம்பினேன் கூட்டை வாளா
 வுள்ளத்தோர் கொடுமை வைத்து
காம்பிளா மூழை போலக்
 கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின் வாய்த் தேரைபோலப்
 பலப்பல பிதற்று கின்றேன்
ஓம்பிநீ யுய்யக் கொள்ளாய்
 ஒற்றியூ ருடைய கோவே"

எனக் கஉங்கா நிற்பர்.

இங்நெறியில் வெறுப்பும் விருப்பும் அற்று ஆண்டவனை வேண்டி யோலமிடும் பக்குவகாலத்து ஆண்டவன் மக்கட் சட்டகந் தாங்கிக் குருவுருவாய் வந்தருளிச் சிவஞானஞ் செறிப்பன். ஆன்மாவினைப் பிணித்திராநின்ற மலவலி தொலைத்து என; நூல்கள் நுவல்வுறும்,

ஆன்மாக்கள் பசுபோத பாசபோதங் கழன்றவழி சிவ ஞான வொளியினைப் பெறுவர்.

"பல்லூழிக்காலம் பயின்றரனை யருச்சித்தால் நல்லறிவு சற்றே நகும்" ஆகலின் பலபிறப்புக்களில் ஈட்டிய நல் வினைப்பயத்தால் தெய்வ மென்பதோர் சித்த முண்டாய நிலையில் பலப்பல மதங்களை யாயத்தொடங்குவர்.

அங்ஙனமாக ஆயத்தொடங்குவார்க்கு நன்குபுலனுக வேண்டியும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்துச் சித்தாந்த செந்நெறி யிதுவெனக் கடைப்பிடிக்க வேண்டியும் அயிக்கிய வாத முதலிய மதங்களைப் பூர்வபட்சமாக்கி மறுத்துரைத் துச் சித்தாந்தஞ் செய்யப்பட்டதே விந்நூலாகும். இந்நூலை சித்தாந்தக்கட்டளை, தத்துவக்கட்டளை யாகிய நூல்களைப் பயின்று சைவசமய சாத்திரந்தலைப்பட்டார்க்கே யிந்நூல் இனிதினுணரத் தக்கதாகும். அந்நெறிகொடு இந்நூலை யாய்ந்து கோடல் வேண்டுமென்பது மறைஞானசம்பந்தர் நிறைமொழியாகும். இதனைக் கடைப்பிடிக்குமாறும் இதனிடை யறியாமையி னேர்ந்த வழுக்களை களைந்து ஆசி புரிந்தருளுமாறு பெரியோர்களை வேண்டி யிம்மட்டில் அமைகுவல்.

"இந்நில வுலகிடை யியங்கியற் பொருளில்
முதன்மைத் தாக முகிழ்க்கும் பொருளே
மக்கட் பிறப்பே தக்க தாகும்
இப்பிறப் பினரே ஒப்பில் அறமுதல்
நாற்பொருள் பயக்கும் நயமுறு நூல்பல
கற்றுத் தெளிந்து முற்றுணர் வெய்தி
மோனமாதி ஞான நிலையுறீஇப்
பந்தங் கழன்ற பான்மை யராகி
அந்தமி லின்பத் தழிவில் வீட்டினைப்
பெறற்கே யுரிமை பெற்றன ரெனவே
சாத்திர மாதிய சாற்று நிற்கும்
தெய்வக் கொள்கை யுய்வகை தருமெனும்
உறுதி தன்னை யறுதியாக் கொண்டு
தோத்திரஞ் சாத்திரம் துருவினர் சிலரே
நாத்தழும் பேற நாத்திக நவின்று
கண்டதே காட்சி கொண்டதே கொள்கை
யென்றே யியம்பி இவ்வுலகத்தின்
மக்களை மாக்கட் டன்மை மருவுறப்
புரியும் மவர்கள் புண்ணிய வினை
நண்ண லுறுதே நரகிடைப் படுவர்
இக்கரு மங்கள் எண்ணில வதனால்
பிறைமுடிப் பெரியோன் பேசிய வேதம்
ஆகம மாதி யருங்கலை கற்கும்
வாய்ப்புடை யாகும் மான்புரை நெறியிது
வென்றே துணிந்து யிருளொறி செறியும்
நிலையினின் றொருவும் நேர்மையு மிலராய்
காலங் கழியும் சிலரும் சிலரே"

அதனால்

சங்கை யறுக்குஞ் சங்கற் பம்மெனும்
மறுப்பு நூலினை மருவுறப் பெற்றுப்
புன்னெறி யோரீஇச் செந்நெறி சிவகதி
என்றே கொண்டு நன்றுறப் பெறுகவே.

உ

திருச்சிற்றம்பலம்

சங்கற்ப நிராகரணச் செய்யுள்.

முதற் குறிப்பகராதி

அகரம்

ஈகாரவரிசை:

உகரவரிசை:

ஊகார வரிசை

b

பா

செய்யுள் முதல்			பா எண்,	பக் எண்.
		மூ		
மூல மலமற்று	....	....	9	51
மூல நோய் தீர்க்கும்	....	....	10	70
		மே		
மென்புழுத்தான்	....	....	20	50
மென்புழுத்தான்	....	....	21	52
		மொ		
மொழியின் பொருள்	....	....	30	17
		யா		
யானென் செருக்கா	....	....	7	28
யானென் செருக்கு	....	....	8	29
யானென தென்றும்	....	....	20	70
		யோ		
யோகத்திஞகு	....	....	4	47
		வ		
வலஞ்செய்து	....	....	17	32
வளர்கை தளர்கை	....	....	29	59
வலம்செய்து தெண்டதனை		....	14	70
		வா		
வாக்கியலிஞலே	....	....	10	8
வாழ்க மருநீதி	....	....	18	13
வானத்தொளி	....	....	24	38
வான்போல் அமலன்	....	....	2	47
வான்தேடி	....	....	17	64
வாஞகி	....	....	3	67
வாடியுடல்	....	....	6	67
		வி		
விருத்தர் மிடியர்	....	....	22	15
விட்டதும் விட்டு	....	....	32	18
விணைப்பலத்தை	....	....	4	40
விளங்கினறிவு	....	....	14	41
விளங்காதே	....	....	2	42

குருமரபு

அகச்சந்தான குரவர் நால்வர்

சீகண்ட பரமசிவன்பால் சிவஞான உபதேசம் பெற்ற திருநந்தி யெம்பெருமான் அவர் மாணாக்கர் சனற்குமாரர் அவர் மாணாக்கர் சத்திய ஞானதரிசிலிகள் அவர் மாணாக்கர் பரஞ்சோதிகள் ஆகியோராவர்.

புறச்சந்தான குரவர் நால்வர்

மெய்கண்டதேவர், அருணந்திசிவம் மறைஞானசம்பந்த சிவம், உமாபதிசிவம் ஆகியோராவர்.

சமய குரவர் நால்வர்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், திருநாவலூரர், திருவாதவூரர் ஆகியோர்

வேதாந்த சித்தாந்த சமரச வித்தகர் நால்வர் கல்லாலடிக்குவளர் சித்தாந்தமுத்தி முதல்வர்பால் ஒருசேர இருந்தபடி இருந்து காட்ட ஞானநிலையுற்றவர். சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் ஆகியோர் இப்பதினாறு வரும் செந்நிலை யுணர்ந்து வருநிலையே மேனிலையாம். அந் நிலையாகிய செந்நெறி செலுத்தச் செய்வதே இச்சங்கற்ப நிராகரணமெனா நூலின் முடிபெனக்கோடல் வேண்டும்.

வாழி குறள்கண்ட மறைஞான சம்பந்தர்
வாழி குருமரபு

குருமரபிடை வந்த பதினாறு பேரும் பெற்ற பேருவன:—

முத்திப் பேருகிய வீட்டின்பம் சித்தாந்த முத்தியெனவும் வேதாந்த முத்தியெனவும் இருவகைத்தாம். அவற்றுள் சனகாதியர் நால்வரும் அடைந்தபேறு வேதாந்த முத்தியாம். எங்ஙனமெனில் மும்மலம் வேறுபட்டு ஒழியமொய்த்து உயிர் அம்மலர்த்தாள் நிழல் அடங்கும் உண்மையைக் கைம்மலர்க் காட்சியிற்கதுவ நல்கிய செம்மலையலது உளஞ்சிந்தியாது அதுவேதானேயாகி யந்நெறி யேகனாகிய நிலையினை யெய்தியதால் (சிவமாகிய நிலையை யடைந்ததால்) வேதாந்த முத்தியாயிற் றென்பர்.

சித்தாந்த முத்தியாவது:—

இந்திரியவய மயங்கி யிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்தம் அணிகொள் தில்லைகண்டேனே

எனவும்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்த னெனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே

எனவும் வரும் திருவாசகச் செய்யுளான் இனிதுணரக் கிடக்கும்.

பாசவலி போக்கி பசுபோதமாகிய சீவபோதங் கெடுத்துப் பதிஞானந் தந்துச் சிவமாம்படிச் செய்து திருவருள் புரிவதால் இவர்கள் சிவமாக்கப் படுவதால் பசுபாசவலி கழன்று சிவத்துவ முறப்பெறலால் சித்தாந்த முத்தியாயிற்றும். சித்தம்—முடிபு, அந்தம்—முடிபு. வேதாந்தத்தின் முடிந்த

மூடிபின் முடிபே சித்தாந்தம் எனச் செம்பொருள் கோடல் வேண்டும். இது மெய்கண்ட சந்தான குரவர் தம்நெறி

சமய குரவர் ஆகிய நால்வராதியர் நானிலமாக்கள் மேனிலையுறுமாறு செய்தருளிய சரியை, கிரியை, யோகம், ஞான மார்க்கங்களைப் பற்றிச் சாலோகசாமீப சாரூப சாயுச்சியங் களைப் பெறச், செய்தருளியுள்ளனர். பன்னிரு திருமுறைகள் பகர்வன, குருபத்தி, இலிங்கபத்தி, சங்கமபத்தி, பண்ணி இறைவனது மலர்த்தாணிழல் எய்த வேண்டுமெனவும் இதுவே செந்நெறியெனவும் ஆம்

குருமரபு வாழ்க.

௨

சங்கற்ப நிராகரணம்.

பிழைதிருத்தம்

பிழை	திருத்தம்	பக்கம்.	வரி.
சங்கற்மம்	சங்கற்பம்	2	17
போ	பேர்	2	27
தூல்கள்	நூல்கள்	5	16
வாழுந்தனருள்	வாழுந்தணருள்	8	18
மும்முதவேழ	மும்மதவேழ	2	11
நடந	நடன	2	15
சிவரத்தி	சிவசத்தி	3	5
எநாயகனே	எம்நாயகனே	3	9
திருவடிகளையுய்	திருவடிகளையும்	3	15
திருமுகங்களையுப்	திருமுகங்களையும்	4	3
என்று	என்னும்	4	10
எனவும	எனவும்	5	3
தியதெல்லா	தீயதெல்லா	7	25
வல்வேனல்லன்	வல்லேனல்லன்	11	6
திரிபுணர்ச்	திரிபுணர்ச்சி	17	6
யுணர்தாது	யுணர்த்தாது	18	9
பொருனையாராய்தல்	பொருளையாராய்தல்	18	14
ந்லலது	நல்லது	20	12
நறிது	அறிது	20	13
கெகண்டு	கொண்டு	20	19
ஏரு பகுதி	ஒரு பகுதி	20	26
பண்டையோர்து	பண்டையோரது	21	7

பிழை	திருத்தம்	பக்கம்.	வரி.
ஆய்வரயாக	ஆய்வாயாக	23	15
யெனுவர்	எனுவர்	21	10
மநாதீதன்	மனமதீதன்	24	3
மனம அதீதன்	மனம் அதீதன்	24	5
சம்ஸ்காரம	சம்ஸ்காரம்	24	22
சிவனுக்	சிவனுக்கு	27	22
பிறததலும்	பிறத்தலும்	30	10
குழகணடியிற்	குழகனடியிற்	32	7
வினைமுடி	வினைமுடிபு	32	13
ஐபனும்	ஐயனும்	32	19
பிறதட்சிணம்	பிரதட்சிணம்	32	26
திர	தீர	33	20
அடைட்யும்	அடையும்	34	16
குற்ரு	குற்ற	36	10
ளின்ஞு	ளின்ரு	36	11
நீயுதவி	நீயுதவு	37	21
முத்தரக	முத்தர்க்	43	21
10	20	50	4
11	21	50	6
18	28	53	9
19	29	53	11
10	20	56	23
டெங்கன்	டெங்ஙன்	56	37
ஆராவது	ஆருவது	62	4
ஆராவது	ஆருவது	62	6
ஞேந்தார்	ஞெந்தார்	63	16
10	20	64	9
11	21	64	11
12	22	64	13
யேதுகசள்	யேதுக்கள்	77	4

2171

பிழை	திருத்தம்	பக்கம்	வரி.
காரமனது	காரணமானது	85	6
திருவிட	திருவடி	88	2
ஆனவம்	ஆணவம்	90	9
ஒரு பொருள	ஒரு பொருள்	90	15
பாங்களின்	பாசங்களின்	90	27
சொர்கத்திடத்தும்	சொர்க்கத்திடத்தும்	91	10
சுவர்கத்திடத்தும்	சுவர்க்கத்திடத்தும்	91	25
இன்பங்	இன்பங்களே	91	25
ஆராய்தறியப்	ஆராய்ந்தறியப்	93	8
அவ்வாசரியனுடைய	ஆவ்வாசாரியனுடைய	93	10
ஓன்றுபட்டு	ஒன்றுபட்டு	94	10
விளிரச் செய்யும்	ஒளிரச் செய்யும்	96	9
பெற்றிருத்ப்தல்	பெற்றிருத்தல்	98	19
திர்நதால்	தீர்ந்தால்	98	24
சுத்தப்படுதகி	சுத்தப்படுத்தி	105	20
உயிர்ஞனம்	உயிர்ஞானம்	110	7
நீ சொல்லும	நீ சொல்லும்	110	17
என்பையாயின்	என்பாயாயின்	112	11
நீலையில்	நிலையில்	119	6
அருளொலி	அருளொளி	119	6
உலத் துன்பத்தை	உலகத் துன்பத்தை	125	21
கற்றுனரத்	கற்றுணரத்	127	17
வெறுப்பு	வெறுப்பும்	128	27
ஆய்ந்தறிவர்ரிந்த	ஆய்ந்தறிவரிந்த	III	11
இருள	இருள்	V	5
எநாயகனே	எம்நாயகனே	VI	4
ஐந்து முகமும்	ஐந்து முகமும்	VII	10
கருவும	கருவுங்	VIII	14
காட்சியலாயார்	காட்சியலாலி	VIII	23